47

பிஸ்மில்லாஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

ஹவ்வல் கரீம்.

மெஞ்ஞானத் திறவுகோல்.

OFFICE OF THE REGISTRAR
1955
47
3-55

★

பொன்னெளி செய்யிது முகம்மது புஹாரி தங்கள்
அவர்களின் கலிபாவும், மானமதுரை முஹம்மது
இஸ்மாயில் லெப்பை அவர்களின் காதிரிய்யா
தரீக்கின் திருவருள் பெற்ற

இந்த

புகழ்மணி மாலை ஆக்கியோனும்,
மெஞ்ஞானத் திறவுகோல்
ஆசிரியருமான

பொதக்குடி ஜனாப்,

தே. ப. அப்துர்ரஹ்மான் அவர்களால்

இயற்றப்பெற்றது.

★

1955-ஆம் மே-மீ 23ஆ திங்கட்கிழமை
(நோன்புப் பெருநாளில்)
பிரசுரிக்கப்பட்டது.

[ஹிஜ்ரீ 1374-ஆம் ஷவ்வால்மீ பிறை 1 திங்கட்கிழமை]

...ப்யா பிரஸ் லிமிட்டெட், கூத்தாநல்லூர்.

1955

Q7:417
.N55
111233

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

மெஞ்ஞானத் திறவுகோல்.



தே. ப. அப்துர்ரஹ்மான்

பொன்னணி செய்யிது முஹம்மது புஹாரி தங்கள் அவர்களின் கலிபாவும், மாமுமதுரை முஹம்மது இஸ்மாயில் லெப்பை அவர்களின் காதிரிய்யா தரீக்கின் திருவருள் பெற்றவனுமான.

பொதக்குடி ஜனப்,

தே. ப. அப்துர்ரஹ்மான் அவர்களால்

இயற்றப்பெற்றது.

1955-ஆம் மே-மீ 23உ திங்கட்கிழமை
(நோன்புப் பெருநாளில்) பிரசுரிக்கப்பட்டது.

[ஹிஜ்ரி 1374 - ஆம் ஷவ்வால்மீ பிறை 1 திங்கட்கிழமை]



யாரஹீம்

முகவுரை.

அஸ்ஸலாமு அலைக்கும்.

நிறைந்த அருளும் சிறந்த அன்புடையவனுகிய சர்வ ஜீவகோடிகளனைத்தும் படைத்து அதனதற்கேற்ற இரண மளித்தும் ஆக்கல், வளர்த்தல், அழித்தலென்ற முக்குணத் தொழில் நடாத்தும் வல்ல பெரிய அல்லா(ஹ்)வின் திருநாமத் தைக் கொண்டும் தாத்தில் உதித்து, நூராய் ஜொலித்து, சிபத்தில் உதயமாகி, உருவாகிய ரசூலே கரீம் அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லா(ஹூ) அலைஹி வஸல்லம் அவர்கள் கருணை கொண்டும், ஏழைமதி பூண்ட இச்சிறியேனின் விண்ணப்பம் யாதெனில்;

இன்ஸான், ஜின், மற்று முதலாகிய அனைத்தும் வணக் கத்திற்காக கமாலாய் நிறப்பமாக்கி அரசாளும் மாலிக் ரப் பில் ஆலமீன் தந்த குர்ஆன் ஷரீபின் வெளிரங்கம் உள்ரங்க மான இரகசிய அறிவிற் சிற்சிலதை நம் தீனைவர்களுக்கு வியாபக முறுத்தத் துணிந்தனன்.

நமக்கு விதியாகிய ஷரீஅத்து, தரீகத்து, ஹகீகத்து, மஹரிபத்து, தெளஹீது வழியின் வெளி பருள், உள்பருள் அதன் விளக்கமும், வணங்குவதற்கு சொல்போல செயலும், பிரியாது மெய், வாய், கண், மூக்கு காதின் இரசத்தை தவிர் த்து நபுலை ஒருமுகப்படுத்தி, ஓர்மையாய், தாக, சோக, மோக, தேக, பாசமறுத்து தன்னையறியும் வகையும் வழிப் பிரிவும் தெளிவாய் விளங்க ஒவ்வொரு பாடலுக்கும் தனிப் பல்லவியாக அமைத்து (10) பத்து விதமாகிய தோத்திரமும், (96) தொண்ணூற்றாறு அந்தரங்கமான நிலதாபனக் கருத்தை விளக்கி (106) நூற்று ஆறு பாடலாக அமைத்து நற்பலன் பெற கருதி **"மெஞ்ஞானத் திறவுகோல்"** என்ற திருநாமத்துடன் புத்தக ரூபமாய் வெளிவருகிறது.

இதைக்கண்ணுறும் அறிவுத் தெளிவு பெற்ற பெரி யோர்கள், வீசுவாசிகள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் இந்நூலின் கருத்துக்களை தெள்ளிதாய் உணர்ந்து நன்நோக் குடன் நாம் மெய் யெடுத்து வந்த வரலாற்றை ஆராய்ந்துனை

ரும் பொருட்டு, அறிஞர்களும், அமலுக்குறியவர்களும், முக்கியமாக எனக்கு ஊக்கம், முயற்சியு மூட்டி- தூண்டுதல் செய்து அச்சியற்ற அரும்பிரயாசை எடுத்துக்கொண்டு பொருளுதவி செய்த;

ஜனப்கள், **கா. சி. முகம்மது மெய்தீன் அவர்கள்**

,, **நூ. மு. நூர் முகம்மது** ,,

,, **தே. ப. மு. அப்துல் முத்தலீப்** ,,

,, **அ. கா. முஹம்மது ஜெக்கரியய்யா** ,,

,, **கா. சி. மு. அப்துல் காதிர்** ,,

அவர்களுக்கும்,

இதனை விசுவாசிக்கும் அனைவருக்கும் தமிழின் ஒலியிசை, எழுத்திசை, சொல்லிசை, பொருளிசை, கருத்திசை, மோனை, எதுகை, சீர், தளை, யாப்பு முறைகளில் வழுவு காண்கில் கவி வல்லுணர்கள் "குற்றமகற்றி குணத்தைக் கொள்ளுதல் கற்றறிந்த மாந்தர் கடன்" என்ற முதுபொழிக் கிணங்க மின்னலுக்கு நிகர் மின்மினி போன்று விளம்பியதில் வெறுப்பகற்றி, விருப்பமுற்றவர்களுக்கும் பொதக்குடி அன்னூருல் முகம்மதிய்யு மத்ரஸா மாஜி நாஜிர், காமில், ஹாஜி, **ஹஜ்ரத் அப்துல் கரீம் ஒலியுல்லா(ஹ்) அவர்கள்** குமாரர், மௌலவி, **எ. எஸ். எ. அப்துஷ் ஷகூர் (நூரிய்யி) அவர்கள்** முன்னிலையில் பிழையற பரிசீலித்துஉதவியதற்கும்அல்லா(ஹ்) தனது கருணையானந்த பக்தி பரவசத்தை யளித்தும், கண்ணுங் கருத்துமாய் நல்லமல் செய்ய நாட்டங் கொண்ட ஆண், பெண்களாகிய சீதேவிகள் ஷரீஅத்தின் நிலைதவறு தொழுகி, உள்ளும், புறமும் ஓர்மை கொண்ட காமீல்களிடம் நஸீகத்து பெறவும், பெற்றவர்களும், நன்நம்பிக்கையுடன் நல்லமலில் சதா விஸ்வாசத்துடன் ஜல்ல ஜலாலஹூவின்(லிகா)வெனும் தெரிசனம் பெற்றும் முத்திப் பொருளாகிய நபி முஸ்தபா முஹம்மது ஸல்லல்லாஹூ அலைஹிவஸ்ஸல்லம் அவர்களின் ஷபாஅத்து பெற்றுக்கொள்ளுமாறு அனைவர்களுக்கும் தன்னருள் பாலிப்பானாகவும்! ஆமீன்! ஆமீன்!! யாரப்பில் ஆலமீன்!!!

இங்ஙனம்,

நூல் ஆசிரியர்,

தே. ப. அப்துர்ரஹ்மான்,

பொதக்குடி.

யா ரஹீம்.

மதிப்புரை.

பொதக்குடி மத்ரஸா அன்னூருல் முகம்மதிய்யு மாஜி நாஜிர், மௌலானு மௌலவீ அல்ஹாஜ் ஹாபீஸ் **முகம்மது அப்துல் கரீம்** (குத்திச சிர்ருஹி) அவர்களின் குமாரர் மௌலானு மௌலவீ, ஆ. செ. அ. அப்துஷ் ஷக்கூர் நூரிய்யி) அவர்கள் இந்நூலுக்கு கொடுத்துள்ள மதிப்புரை வருமாறு.

நம் தமிழ்நாட்டிலே எத்தனையோ ஞானவழிகளில் செல்லக்கூடிய புத்தகங்கள் இருந்தபோதிலும் தஞ்சை ஜில்லா பொதக்குடியின் வாசியாகிய ஆரிபு பில்லாஹ் மௌலானு தே. ப. அப்துர் ரஹ்யான் புலவரவர்கள் எழுதிய "**மெஞ்ஞானத் திறவுகோல்**" என்ற கவிகளாக திறட்டிய நூலுக்கு சமமென சொல்ல ஏலாது.

ஆகவே; தீனின் அர்த்தமென்ன என்பதை தெரிந்து, இஸ்லாம் என்ன என்பதை அறிந்து, ஈமான் என்ன என்பதை உணர்ந்து, சரீஅத்தை கடைபிடித்து, தரீகத்தில் சென்று, ஹகீகத்தை செவ்வனே புரிந்துகொண்ட நம் முஸ்லிம்களான ஆண் பெண் இரு சாரார்களும் இந் நூலை பெற்று மகரிபாவில் சேருவார்களென நம்புகிறேன். (அல்லாஹுத ஆலாவை அவன் இருக்கும் தன்மையில் அவனுடைய வர்ணிப் புகளை ஒன்றையும் மறந்திரு வண்ணம் நடப்பதேயாம்) மேலும் இந்நூலை இயற்றிய ஆசிரியர் அவர்கட்கு ஆண்டவன் நீண்ட ஆயுளை கொடுத்து, மேலும், மேலும் பற்பல நூல்களை இயற்ற அருள்புரிவானுகவும். ஆமீன் யாரப்பல் ஆலமீன்!

மௌலவி, **ஆ. செ. அ. அப்துஷ் ஷக்கூர்** (நூரிய்யி)

திருத்துரைப்பூண்டி, அன்பன், A. R. கோபாலசாமி பாவலர்
அவர்கள் சாற்றுக் கவி.

வெண்பா

தேமணக்கும் காசூழ் திருவார் புதக்குடியில்
பூமணக்கும் செல்வப் பரிசுடைய—நாமணக்கும்
அப்துர் ரஹ்மான் அறிவிற் கறிவை வளர்
திப்பியசந் மார்க்கமுவான் தேர்

"மெஞ்ஞானத் திறவுகோல்"

புகழ்

பொருளடக்கம்.

		பக்கம்
1	வணக்க வெண்பா	1
,,	குறள் இசை	,,
,,	இறைவன் தோத்திரம்	,,
2	எழுசீர் ஆசிரிய விருத்தம்	2
,,	இறைவன் துதி	,,
3	மஹமூதியா தோத்திர வணக்கம்	3
4	நபிநாயகம் அவர்கள் துதி	4
5	சற்குரு நாயகம் அப்துல்காதர் ஜெயிலானி ஆண்டவர்கள் திருத் தோத்திரம்	5
6	ஷாகுல் ஹமீது நாயகம் அவர்கள் தோத்திரம்	6
7	ஹஜ்ரத் சுல்தானுல் ஆரிபு செய்யிது அஹ்மத் கபீர் ரிபாயி அவர்கள் புகழ்	7
8	அஜ்மீர் ஹாஜா நாயகம் அவர்கள் தோத்திரம்	8
9	பொதக்குடி ஹஜ்ரத் நூருமுஹம்மது வலியுல்லாஹ் அவர்கள் தோத்திரம்	10
10	பொதக்குடி ஹஜ்ரத் ஜகபர்சா அவுலியா புகழ்	11
11	பொதக்குடி ஹஜ்ரத் காமீல் ஹாஜி நாஜீர் அப்துல் கரீம் ஆலிம் அவர்கள் துதி	,,

நிலை.

1	பூர்வ நிலை		12
2	கலிமாதுதி நிலை	....	14
3	இன்ஷான் நிலை	....	15
4	இன்ஷான் ஆதிநிலை	....	,,
5	இஸ்லாம் வெளி பருள் நிலை	....	16
6	ஈமான் நிலை ஆறு — A.	....	17
	ஈமான் நிலை ஆறு — B.	....	18
7	இஸ்லாம் நிலை	....	,,
8	தொழுகை விதிமுறை நிலை	....	19
9	தொழுகும் மூமின் நிலை	....	20
10	தொழுகை நிலை	....	21
11	தொழுகை விதி நிலை	....	22
12	தொழுகை விளக்க நிலை	....	23
13	தொழுகையின் தெளபா நிலை	....	,,
14	வேத நுட்ப நிலை	....	24
15	வேதவிதி நிலை	....	25
16	வேத சூட்சிய நிலை	....	27
17	வேத பகுத்தறிவு நிலை	....	,,
18	தெளிவு நிலை	....	29

			பக்கம்
19	கலிமா குரு நிலை	....	29
20	கலிமா அமானித நிலை	....	30
21	கலிமா கடமை நிலை	....	31
22	கலிமா சிந்தனை நிலை	....	32
23	கலிமா மூல நிலை	....	33
24	கலிமா கருமூல நிலை	....	34
25	கலிமா கலை நிலை	....	35
26	கலிமா உரு நிலை	....	,,
27	கலிமா ரகசிய நிலை	....	37
28	கலிமா சூட்சிய நிலை	....	38
29	கலிமா புதின நிலை	....	39
30	கலிமா இன்ப நிலை	...	40
31	கலிமா பகுத்தறிவு நிலை	....	41
32	கலிமா பஃகா நிலை	....	,,
33	கலிமா ஆட்சி நிலை	....	42
34	கலிமா பொக்கிஷ நிலை	....	43
35	கலிமா காரண நிலை	....	44
36	கலிமா ஜோதி நிலை	....	45
37	கலிமா ஆனந்த நிலை	....	,,
38	கலிமா காட்சி நிலை — A.	....	46
,,	கலிமா காட்சி நிலை — B.	....	47
39	கலிமா பூரண நிலை	....	,,
40	கலிமா ஏகாந்த நிலை	....	48
41	கலிமா முடிவு நிலை	....	49
42	பரிபூரண நிலை	....	,,
43	உடல் நிலை	....	50
44	உடல் உற்பத்தி நிலை	....	51
45	உடல் உறுதி நிலை	....	,,
46	உடல் உவமான நிலை	....	52
47	உடல் உபமான நிலை	....	53
48	உடலழிவு நிலை	....	54
49	உடலறிவு நிலை	....	55
50	உடல் விளக்க நிலை	....	,,
51	உடல் உஜூது நிலை	....	56
52	உடல் ஒளிர் நிலை	....	57
53	உஜூதின் சிறப்பு நிலை	....	,,
54	உஜூதின் ஆதார நிலை	....	58
55	நப்ஸை அறியும் நிலை	....	59
56	நபிஸிற்கு உறுதி நிலை	....	60
57	நப்ஸை அடக்கும் நிலை	....	,,

			பக்கம்
58	மனந்திட நிலை	...	61
59	மனந்திருந்தும் நிலை	...	62
60	உயிர் நிலை	...	,,
61	பஞ்சபூத பிரிவு நிலை	...	63
62	வணக்க நிலை	...	64
63	வணக்க வழி நிலை	...	65
64	நாத நிலை	...	,,
65	நாத நடு நிலை	...	66
66	நாத நடன நிலை	...	67
67	நாத கரு நிலை	...	68
68	விந்து நிலை	...	69
69	தன்னிலை	...	70
70	தன் கலைநிலை	...	71
71	தன்னை ஆராயும் நிலை	...	,,
72	தன்வாசி நிலை	...	72
73	வாசி பூர்வநிலை	...	73
74	வாசி வழிநிலை	...	74
75	வாசி யோகநிலை	...	75
76	வாசி நடன நிலை	...	76
77	நித்தியானந்த நிலை	...	77
78	மெஞ்ஞான நிலை	...	78
79	எகீன் நிலை	...	,,
80	துணை நிலை	...	79
81	மனதோர்மை நிலை	...	80
82	முஷாகிதா நிலை	...	81
83	ஆலோசனை நிலை	...	82
84	மறதி நிலை	...	,,
85	அறிவுரை நிலை	...	83
86	உலகவெறுப்பு நிலை	...	84
87	ஒன்றுதலாகும் நிலை	...	85
88	நீதி நிலை	...	,,
89	பக்கா நிலை	...	86
90	கல்பின் நிலை	...	87
91	தௌஹீது நிலை	...	88
92	சக்காராத்து நிலை	...	89
93	மவுத்தின் நிலை	...	90
94	முழுக்கை அறுக்கும் நிலை	...	91
95	பலன் கோரும் நிலை	...	92
96	தன்னை அறியும் நிலை	...	93
	வாழி விருத்தம்	...	94



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

மெஞ்ஞானத் திறவுகோல்.

வணக்க வெண்பா.

1 அலிபுலாம் ஹேமீம்தா ட்சரத்தி லுட்சரமாய்
ஒலிப்புக்கு மப்பாலா யொளிர் ஜோதி-சொலிப்பிறையே
மெஞ்ஞானத் திறவுகோல் மெய்யின் மதிமிளிர
எஞ்ஞான்றுந் துணை இதற்கு

2 தானுதி தனியவனுய் தன்மயமாய் தற்சொருப
வானுதி புவியுரு வகுத்தவனே—தேனுகும்
மஹரிபத்தில் தீனோர்கள் மகிழ்ந்தருளிற் மாண்புறவே
நிகரில்லா தன்னருள் செய் நீ.

குறள் இசை.

அறிவு நினைவுணர்வு புத்திக்கு மப்பால்
நெறியா மிறைவன் நிலை.

இறைவன் தோத்திரம்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மண்ணுலகு விண்ணுலகு பொன்னுலகு தன்னிலும்
மதிப்புயர் படைப்பினெடு
மற்றும் பல ஜீவ ஜெந்துக்களை வகுக்கவே
மஹ்பியா நூரொளிவினில்
எண்ணிடவே யொண்ணுத வண்ணரூபமா யமைத்
திரண மீந்தாளு மிறையே
எக்கணமு மிக்கன்பு புக்கியே சொக்கு மெய்
ஏகாந்த சுடர் தீபமே
திண்ணமென் றுண்ணருள் நண்ணினே னென்னகத்
தேவே திருச்சோதி துரியா
தீதவத் வீகமாய்த் தெவிட்டிடாத் தெள்ளமுதத்
திவ்யப் பேரின்ப வாழ்வே
கண்ணின்நடு வின்மணியே என்னுளத் தண்ணலே
காட்சி நிறை கனக ரத்ன
கன்யனே புண்ணியனே தின்னியனே சைதன்ய
ஹக்கனே காவல் நீயே.

எழுசீர் ஆசிரிய விருத்தம்.

அருபமா யகண்டமாகி யுளவிலாக் கருணையோங்கு
மாதி ரஹ்மானைப் போற்றி
அஹதி ளெளிப் பிரகாச மாகியுயி ருடலாகு
மஹ்மதி ரசூலைப் போற்றி

வருசை பெறு நபிமார்க ளசனுசைன சுகாபு
விகசிதப் பாதம் போற்றி
வள்ளலாய் வந்த குரு வேந்தர் முஹையத்தீன்
வண்ணப் பொற்பாதம் போற்றி

கருமணியா யொளிர் ஜோதி ஷாஹுல் ஹமீதொலி
கழலடி பணிந்து போற்றி
கருதும்நூர் முஹம்மதொலியும் முஹம்ம திஸ்மாயில்
காருண்யத் 'தாளைப் போற்றி

திருவொளிரு முலகெலாந் திகழ்குத்தூ பொலியுலமா
தீன்மிளிருஞ் சரணம் போற்றி
திவ்யகுணப் புலவர் பெரியோர் சிறியோ ருனைவர்கள்
திருகதம் போற்றி போற்றி.

—★—

இறைவன் துதி.

ராகம்-மோகனம்) (தாளம்-ஆதி.

வேதாதீபா அபயம்-என்ற இசை.

பதம்

ஏகாதிபா அபயம்-அபயம்-அருள் ஏழைத்கிதுவே சமயம்

சரணுபல்லவி

1 மாகாவாகாம சகாய சுகாவக மோகயேக மகிபா—துதி
யோகாயூகப்ரமாகுந்தியாக நற்போகயாகவகிபா
மூகலோக முதல்வா—யீணையிலா-
தாகனுகு மிறைவா—துணை தரும்
சாகரக் கிருபாகரக் கடவுளாகுமே கமனுகரப்ரபூ
(ஏகாதிபா)

2 சத்துவத்தினிறை முத்து முத்தி முதல்அத்வீகத்
(தினிமலா-மன
நத்திசித்தி பெறும்பத்தர் மெத்ததொழும் முத்தமத்தின்
வித்தகதின் விமலா பற்றற (கமலா
எத்துந்தத்வ அமலா—கமலா
முத்தகத்தனென வெத்தவத்தினரும் நித்ய சத்தி பெறு
[மத்தி பத்திஞளி (ஏகாதிபா)

3 அட்டகோண மதினெட்டு மட்டிடா திட்டவட்டமில்லா
—சுகந்
தட்டுஞ்சட்டமதினுட்டுறை நிட்டைக்கெட்டு
(மெட்டா தல்லா
நட்ட நடுவல்லா—நாதாந்த
நெட்ட நெடியோனல்லா—கட்டமற
பட்டயப் படிகத்துட்டுறை சமதா எட்டு நாலதனில்
[வீட்டகலாச் சுய (ஏகாதிபா)

4 வானுதின பிரதானமோனகனஞானதியானசதமே-தான்
தானுதானுது கண்காணுதினனெனு மேனுர்—
(பேணும் பதமே
தேனுரின் பரசமே — அருந்து
மீனுரல்பின் வசமே—புதக்குடி
யானே அப்துர் ரஹ்மானேர் பெற பெருமானே கருணை
[செய்சீமானே வரந்தரும் (ஏகாதிபா

(இராகம்) எங்கே தேடுவேன் எனக்கெத்தினம்.

மஹமூதியா தோத்திர வணக்கம்.

பதப்பல்லவி

அம்மா என் தாயே—வாலே
அம்பிகை மனேன்மணியே சம்பூர்ணப் பதசரணம்

அனுபல்லவி

ஹூம்மென்றெழுந்த வோசைக் குருமணி சோதியே
அம்பலப்பதி செங்கோ லரசியே சரஸ்பதி (அம்மா)

சரணம்

1 அருளானந்தமே—ஒளி
ரங்கமீதெங்கும் கஸ்தூரி தங்கியே கமழ் கந்தமே
கருவினி லுருவாகி காட்சி தருமதியே
பரக ஹிதாயத்துறைப் பாலருந்தவே தரும் (அம்)

2 கருணைக் கடலே—சர்வ
கண்ணியஞ் சிறந்தறிவின் புண்ணியப் போதவுடலே
தருமதயாள குணஞ் சாந்த மெய் பொக்கிஷமே
அரும்புருக்கான் மறைப்பா லக மகிழவே தரும்(அ)

3 அன்பு குன்றுமல்—நோக்கி
அடுத்தேன் கனி தவிர்க்க எடுத்தோதினென்றுளாமல்
துன்பக்கொடிய குர்பி தீ பற்றெரிவதிலல்
ஜென்மங் கடைத் தேறவே தீட்சைப்பொருள்
[பால் தரும் (அம்மா)

4 அறியாதமலே—யான்
ஆவல் பசி மிகுந்துக் கூவி கோருங்குதலே
தெரியாமற் செய்த பிழை தேவரீரே பொருத்து
அரியோன் கலிமா நிலை அருள்பாலுண்ணவே தரும்
(அம்மா)

5 நல்லறிவில்லான்—முறை
நவில் புதக்குடி அப்துர்ரஹ்மானெது வுங்கல்லான்
இல்லல்லாஹ்வென் றேதி யிணையற்றுவணங்கிட
அல்லறுக்கு முனதார்வப் பாலருள் தரும் (அம்மா)

விருத்தம்.

ஆதியா மகண்டமாகி அளவிலா பொருளாயாவுஞ்
சோதி மெய்ச் சுடராய் சூழ சூட்சமா தூலமாகி
நீதியா யனைத்துள்ளாகி நிறைவுற மக்கந்தோன்றும்
பேதியார் முஹம்மதின் சீர் பொன்னடி சிரமேற்கொள்வாம்.

போகாமலே தெய்வமே—என்ற மெட்டு.

நபி நாயகம் அவர்கள் துதி.

பல்லவி

ஏகநிலே தத்துவமே புவி
எங்குமிலங்கித் துலங்கு நபித்துவமே (ஏக)

அனுபல்லவி

தேக வஜீகர தேவரீர் நாதா
தேன்பொழில் மக்காசுடர் மஹமூதா
ஆகர் நபியா யருள் நாலா வேதா
அன்புற்றருள் தரவந்திடும்
துன்பத் துயரறத் தந்திடும் (ஏக)

சரணம்

1 மூலமுச் சுடரே—வர
முத்தர் பணியுந்தீன் வித்தகப்படரே
கோலமயிலதாய் ஹூவென்றே கூவி
கோதிலாஞான குருவென மேவி
தூலநிழலற்றதூதே சீதேவி
துய்யத்துணை யடிதேடினேன்
பய்யற் பத புகழ் பாடினேன் (ஏக)

2 பாதம் படா நடையும்—முன்
பார்வை போற்பின் காணுங் கார்மேகக்குடையும்
வேதமதியாய் விளங்கும் விவேகா
வெற்றி புயத்தர சுற்ற சம்போகா
காதலைத் தீர்க்குங் கருணைப் பிரவாகா
கண்மத்துயரந் தீர்த்தருள்
தன்மத்துரையே பார்த்தருள் (ஏக)

3 மாசிலா மெய் யுருவே—ஜெய
மாட்சிமை யோங்கிய காட்சி சற்குருவே
காசினி ராஜர் கழலடி போற்றும்
காருண்யா வாயென் கவலையை மாற்றும்
பூசிதரென்றும் புகழ்ந்துரை சாற்றும்
புண்யப் பொலி வுறுஞ்சேவடி
திண்யந்தரும் திருத்தாளடி (ஏக)

4 சுந்திர வாக்காளரே—யாரும்
சொல்லாற் துதிக்கொணா வல்லானின் றோழரே
அந்தரஞ் சென்றே யருஷிலிருந்தவா
ஆதி முறையடி யார்க்குப் பகர்ந்தவா
மந்திர சற்குண மார்க்கஞ் சிறந்தவா
மகிழ்வாய் புதக்குடி அப்துர்
ரஹ்மான்கலி யறத்தரும் பீர் (ஏக)

—✠—

சற்குரு நாயகம் அப்துல் காதர் ஜெயிலானி ஆண்டவர்கள்
திருத் தோத்திரம்.
சர்ஹேபர் தாரோமே ஓ—என்ற இசை.

பல்லவி

ஆதி அலிபுலாமீம் குருவே
ஆளும் முஹைய்யதீனே தீன் தீன்
ஜோதி ஹைபு ஹுவியத்தீன்
சுடரே முஹையதீனே தீன் தீன்

அனுபல்லவி

1 சீரில் தாத்தாய் தெளிந்த நூராய்
சிறந்த நாத நடுநிலே
சர்ரை நீக்கி தக்வா புரியும்
சர்தார் முஹையதீனே தீன் தீன் (ஆதி)

2 குன்பய கூனென்றெழு மெய்
குதரத்தின் ஷான் பூரணம்
தன்னுள் தானுய் தனிக்க வுரைக்கும்
தவப்பீர் முஹையதீனே தீன் தீன் (ஆதி)

3 அருபஞான ஹருபின் மூலம்
அஹியான் விளக்கு மானந்தம்
இருபான் கடலே இசைந்த மலரே
இதமருள் முஹையய்யதீனே தீன் தீன் (ஆதி)

4 திக்கோர் மகிழ ஹக்குலு ஜூதை
திறந்து காட்டுந் தேவரீர்
மக்கா நபியின் மரபில் தோன்றும்
மஹபூப் முஹையதீனே தீன் தின் (ஆதி)

5 கவிலும் புகழ் சேர் கௌதுலஹ்லம்
நாதரே ஃகாதூபுல் லக்தாப்
கவிலும் புதக்குடி அப்துர்ரஹ்மான்
கதிபெற முஹையதீனே தீன் தீன் (ஆதி)

ஷாஹுல் ஹமீது நாயகம் அவர்கள் தோத்திரம்.

பல்லவி

சரணெகதியருள் தருஞ்ஜெயமே—யா
ஷாஹுல் ஹமீதொலி நாயகமே

அனுபல்லவி

1 கருணைகர சர்தாரே நாகூர்
ஹாஜியத் தோங்கிய காமி லென்பீர்
தருணை சேரியிற் தபனூனீர்—யா
ஷாஹுல் ஹமீதொலி நாயகமே (சர)

2 கன்ஜுல் கராமத்தின் காரணீகா
கமாலாய் விளங்கிய பூரணீகா
ஜென்ம சாபல்ய ராஜரீகா—யா
ஷாஹுல் ஹமீதொலி நாகமே (சர)

3 தத்துவ கொதூபே திருவாலரே
தவத்தினர் மகிழ் சதாத்தின் குலரே
சித்த மகிழ் சுகந் தருமூலரே—யா
ஷாஹுல் ஹமீதொலி நாயகமே (பல்)

4 கல்புரைந் தொளிருங் கருமணியே
கஞ்ச சுவாய் காதிரொலியணியே
செல்வீக ஞான சிகாமணியே—யா
ஷாஹுல் ஹமீதொலி நாயகமே (நல்)

5 அந்தணர் புடை சூழு மதிபதியே
அப்துர்ரஹ்மான் போற்றும் நவநிதியே
சுந்திர வெஜீகர சுடர்மதியே—யா
ஷாஹுல் ஹமீதொலி நாயகமே (சர)

நூல் ஆசிரியரின் மாணவராகிய

[S. M. அஹமது H. M. V. ரிகார்டில் பாடிய பாட்டு.]

ஹஜரத்து சுல்தானுல் ஆரிபு செய்யிது அஹ்மத் கபீர் ரிபாயி அவர்கள் புகழ்.

அடைந்து விட்டோமே—என்ற இசை.

பல்லவி

தஞ்சம் பூமானே ஷாகிபே ஆலம்
செய்யிது சுல்தான் ஆரீபே

சரணைபல்லவி

1 மஞ்சடைசெறி மாமுகிலே பொழில்
மணிச்சுடராய் பதாயஹிலே
கொஞ்சும் ரிபாயி தரிக்காவிலே ஜெயங்
கொண்டாதரித் தாளும் பக்ஹாவிலே
கஞ்ச பூஞ்சரணங் கெஞ்சிய மஞ்சனே
காத்தருள் அஹமத் கபீர் (தஞ்சம்)

2 ஏகன் நூரொளி விற்பிரிந்தே ஹுசைன்
ஏந்துந் துவாக்கபூலாய் சிறந்தே
ஆகம நபியார் அன்புறைந்தே செய்யித்
அஹ்மத் தென்றே நற்பேருறைந்தே
சாகரமா கிருபாகர தேகரே
சற்குரு அஹ்மத் கபீர் (தஞ்சம்)

3 தாயார் கெற்பத் திருக்கையிலே பேசி
தீன் முறைத் திகழ் பிறக்கையிலே
மாயாத மந்திரங் கற்கையிலே ஆதி
மஹபூ பானி ரியற்கையிலே
வாயாலு மோயாது ஆயாசமாய்க் கெஞ்சி
வாடுகிறேன் அஹ்மத் கபீர் (தஞ்சம்)

4 நடுக்காட்டில் பக்கீர் வசித்திட பத்து
நான்கு நாள் வயிறும் பசித்திட
அடுத்துறும் ஆட்டை பொசித்திட தாங்கள்
ஆடுக்குயிரது யிசைத்திட
துடுக்கன் முடுக்க நடுக்கமாய் தெண்டம்
தொழுகும் அஹ்மத் கபீர் (தஞ்சம்)

5 பஞ்சவர்ணப் பட்டு வுடுத்தவும் நிகாஹ்
புரிந்து யில்லறங் கடத்தவும்
துஞ்சி ஜல்லியத்து நடத்தவும் வெட்டு
தளும்பில்லா துடல் பொருத்தவும்
நெஞ்சக மஞ்சியே யெஞ்ஞான்றுந் தேடுரேன்
நாயகமே அஹ்மத் கபீர் (தஞ்சம்)

6 அல்லாஹ் இடத்தி லெழுபது தரம்
அறுதி வாங்கிய பொருப்பது
நல்லரிபாயி தீக்கது செங்கோல்
நரக மேகாத் தவமது
சொல்லித் துதிக்கும் அப்துர் ரஹ்மானை யாள்
சுந்தர அஹ்மத் கபீர் (தஞ்சம்)

அஜ்மீர் ஹாஜா நாயகம் அவர்கள் தோத்திரம்.

பொஹத்து முசுஹில்ஹே (எ-இ.)

பல்லவி.

தகத்துமகத்துவரே தனியோனின்-கொதூதே
தகை மிகும் காஜா
இகத்தும் பரத்தகமா-எழில் சூழும்-என்பீரே
எனையாளும் ராஜா

தொகையரு

1 குதா மஹபூப் ஹிதாயத்தே மிகுந்து
குதரத்தாய் அஜ்மீர்
சதானந்த சர்வ ஜீவ ரெட்சகராய்
சங்கை பொங்கும்பீர்
சிதாகாச தேசு திருமணி சுடராய்
சிரக்கும் பல்லோர்
அதாலத்தையகற்றி ஆதரிக்கும்
அத்தாயே ரசூல் (தகத்து)

தொகையரு

2 மதினு ஷரீபில் நபிவாக்கு பெற்றே
மாதீன் வளர
பதினன்கின் இல்முபிரவாகராக
பாரிலே தவிர
விதி நான்கு வேதவித்தாதிசத்தே
விரிந்தே யொளிர
புதினுதி பூபே பொற்புறுங் கற்பக
புனிதரே சிஸ்த்தி (தகத்து)

தொகையரு

3 அல்பகல் தங்களா தாரம் நாடியே
ஆ காவல் தேடி
சொல்புகழ் கீதமே தோத்திரமாக
சுகம் பெறவே பாடி
நல்லருள் தயவது நட்புற புரிய
நிதமு மன்றுடி
புல்லன் அப்துர்ரஹ்மான் போற்றிப் புகழும்
புனிதரே சிஸ்த்தி (தகத்து)

நூல் ஆசிரியரின் மாணவராகிய

S. M. அஹமது H. M. V. ரிகார்டில் பாடிய பாட்டு.

பொதக்குடி, ஹஜ்ரத்து நூரு முகம்மது வலியுல்லாஹ் பெயரால் பாடியது.

போலி சூரத்வாலா—என்ற இசை.

பல்லவி

நீதி மாதவ தாதா நன்னீதா
அருள் நூரு முஹம்மதொலி நாதா

அனுபல்லவி

1 ஜோதிமதி நிகராய் திரு புதக்குடியில்
ஆதி தன் ஒலியென வமைந்திரிப்படியில்
பூதியப் பொருளே பூர்வீகத் தெருளே
பூரண ஞான பொற்பூபா பிரதாபா—புகழ்
நூரு முஹம்மதொலி நாதா (நீதி)

2 இல்முல் எகீனிலே காந்தமே நாடி
ஹக்குல் எகீனில் கலந்துறவாடி
ஹல்க்கை ஹக்காக்கும் காமிலே நோக்கும்
காரணங் காட்டுங் குணைா தயாளா—ஜைய
நூரு முஹம்ம தொலி நாதா (நீதி)

3 ஊணுடலை வெறுத்து உகந்தவா யமலில்
பேணுமுசாஹி தாவில் பொருந்திய பலனில்
ஆணவ மகற்றி ஆசையை தூற்றி
ஆனந்தம் பூண்டொளிர்மணியே தீன்கனியே-துதி
நூரு முஹம்ம தொலி நாதா (நீதி)

4 வருந்திநைற் குபகார வள்ளலாய் சிறந்தீர்
பொருந்திய தவத்தினர் பூவென மலர்ந்தீர்
கருதியே தேடும் கண்மணியே நாடும்
காதலித் தோதினேன் ஒலியே-தவபுலியே-கெதி
நூரு முஹம்ம தொலி நாதா (நீதி)

5 குற்றங்குறை பொருத்து குருவெனை காரும்
சற்று மனதிரங்கி தயவாய் கண்பாரும்
நற்றுதி கூறும் நலம் பெற கோரும்
நவில்அப்துர்ரஹ்மானை ஆளும் என்னுளும்-துணை
நூரு முஹம்ம தொலி நாதா (நீதி)

பொதக்குடி ஹஜ்ரத் ஜகபர்ஷா அவுலியா புகழ்.

படம்:— தாஹ் இசை:— யேமேரி தில்கஹீன்

பல்லவி

தேவரீர் பாதமே தெரிசனம்
தேடினேன் ஜகபர்ஷா அவுலியா
ஆவலாய் வந்தனை யாளுமே

அனுபல்லவி

1 செவ்வை சூழ் புதக்குடி தேஜரே
சீரோங்கும் வலி போஜரே
அவ்வலி னனந்த ராஜரே
ஆண்டகை ஜகபர்ஷா அவுலியா.....ஆ(தேவரீர்)

2 தன்னைத் தானறிந்த தேசிகா
தானே தானனை மெய்ப் பூசிகா
என்னையா ளண்ணலே மாசுகா
ஏந்தலே ஜகபர்சா அவுலியா.....ஏ (தேவரீர்)

3 வாஜி புல்லுஜூதின் வாருதி
வேண்டினேன் நீண்டருள் சீருதி
தாஜுல் மஷாயிகே நேருதி
தாயகம் ஜகபர்ஷா அவுலியா.....தா (தேவரீர்

4 வந்தனை யாளவே வருந்தியே
வரமீந் தருளவே பொருந்தியே
சந்ததம் புரிந்தாளக் கருதியே
சாதித்தேன் ஜகபர்ஷா அவுலியா....சா (தேவரீர்)

5 பஞ்சையான் கெஞ்சியே நாடுறேன்
பாவியான் பலன் பெற தேடுறேன்
அஞ்சி அப்துர்ரஹ்மான் பாடுறேன்
ஆரிபே ஜகபர்ஷா அவுலியா.....ஆ (தேவரீர்)

பொதக்குடி ஹஜ்ரத் காமீல் ஹாஜி நாஜீர் அப்துல் கரீம் ஆலிம் அவர்கள் துதி.

ஆயீஹே அப்குதாகி நஜாரா—என்ற இசை.

பல்லவி

கருணை புரியவிது தருணம்
அப்துல் கரீமொலியே பாதசரணம் திரு

அனுபல்லவி

அருளைதயம் போல் புதக்குடியில்
அமர்ந் தரசாளு மதிபரே கெடியில் திரு

சரணம்

1 ராணிபேட்டை நகர் பிறந்த நயமே
நாஜூராய் மதுரஸா வுற்ற ஜெயமே
வானின் மதியென வாக்கிய சொல்தயமே
வள்ளலென விளங்கிய ஞான மயமே–திரு(கருணை)

2 அருள் பெருகும் மாலிமுல் ரப்பானி
அறிவுக் கடலானந்தக் கலீக்யானி
இருளகற்று மேகாந்தப் பிரதானி
யிர்பானில் முற்றிடுஞ் சித்தஞானி—திரு (கருணை)

3 மஹரிபாவின் படலாக வீரிந்தீர்
மகுத்துவ ஒலியெனப் புகழ் சிறந்தீர்
அகத்தழுக் கறுக்கு முறை புரிந்தீர்
ஆரிபுல் மஷாயிக்காக யிருந்தீர்—திரு (கருணை)

4 உலக சம்பத் தனைத்தும் வெறுத்தே
உடலுறும் பந்த பாசத்தை அறுத்தே
பலம் பெறுகுங் குதூஸியின் சரத்தே
பகலிரவாய் தவம் புரிந்தீர் வரத்தே—திரு (கருணை)

5 இல்மு பதினலு மிதமாக வுணர்ந்தே
இறை மஹசூக்கில் மனமது உகந்தே
கல்பு கனியாகதின் மறை சொரிந்தே
கனா தீர்த்தீர் காமீலொளி சிறந்தே—திரு (கருணை)

6 வஜீகர நாஜூர் ஹாஜியாயிருந்தீர்
வந்தித் தோர்க்கருள் புரிந்திட பொருந்தீர்
இசைகூரும் பையல் யான் அப்துர்
ரஹ்மா னுரைக்கருள்செய்யுமென்பீர்–திரு(கருணை)

—○—

(1) பூர்வநிலை.

ஹிந்தி) (லுட்டலிலா-என்ற இசை.

பல்லவி

ஆதி புருகான் நிலையை கேட்டில்லையா
நீதி கேட்டில்லையா ஓதிகேட்டில்லையா
கேட்டில்லையா-கேட்டில்லையா–கேட்டில்லையா-கேட்டில்லையா

தொகையரு

1 தானவ னுஜூதாக தண்ணீர் காற்று நெருப்பில்
சமைத்தான் ராட்சதரை முன்னம்
வீனுருவாகி வணங்கிடா மூன்றுகத்தை
வெகு பழையால் அழித்தான் பின்னும்
மோனசீர் மலக்குகளுக் கேவியே பண்ணுதம்
முதலுரு வமைக்கச் சொன்னான்
ஈனமா முன்னுகத்தை யழித்து நான்காம்
யுகமீது இன்ஸானுய் வந்த ஆதம் (ஆதி)

தொகையரு

2 பல்லாயிரங்கோடி படைப்புகளை பொருந்தாது
பங்குற பெரியோன்ருனும்
எல்லாமாய் வெளியான திருவொளிவை யெல்லையில்லா
எழில் வீச திறக்க தானும்
நல்லார் மலக்கு வுடலமைக்க பார்த்தே
நாயன் சிறம் வைத்து நேசம் பூணும்
அல்லாஹூ திருக்கோட்டை யுள்ளுஜூதாய்
அலங்கார இன்ஸானுய் வந்த ஆதம் (ஆதி)

தொகையரு

3 நூருல்யின்ஸா னென்று நிறையன்பு சூட்டியே
நப்ஸூ ரூஹூமூதி நிறப்ப மாக்கி
பேருறவனைத்திற்கு முதலுருவாய் மிளிர
பிரபல்யம் பொதிந்தே நோக்கி
சீருறவே ஹயாத்து மவுத்தும் சூழ
சொர்க்க மென்றும் சுடு நரக மெல்லையாக்கி
நேரு பெறலா யிலாஹா இல்லல்லாஹூ வென்று
நிலைபெற இன்ஸானுய் வந்த ஆதம் (ஆதி)

தொகையரு

4 முழங்கும் ஹூவுருவதனை ரஹ்மான் பார்த்து
மலக்கனை வோர்க் குறைத்தான் சஜ்தா செய்ய
வழங்கிய சொல் மறுத்ததினுல் யிபுலீசாக
வாக்குறைத்து துனியாவில் எறிந்தானுய்ய
புழங்கிய ரகசியம் புரிவோருக் கெல்லாம்
பேரின்ப சொர்க்க மென்று புகன்றுன் துய்ய
ஒழுங்குற நினைவறிவு கலிமா பூர்த்தி
உடலெடுத்து இன்ஸானுப் வந்த ஆதம் (ஆதி)

தொகையரு

5 அன்பா செனுமூச்சுள் ளடங்கியே பிரியாது
ஆடிடவே யனைத்தும் சேர்த்து
தன் சாகா தத்துவமும் தானுகும் முறை எல்லாந்
தன்னகம் விளங்க பூத்து
தென் மானுமதுரை முஹம்மது இஸ்மாயில்
சற்குரு தாள் சிந்தை கோத்து
இன்மொழி சொல் புதக்குடி அப்துர்ரஹ்மான்
இன்பமுற இன்ஸானுய் வந்த ஆதம் (ஆதி)

(2) கலிமா துதி நிலை.

ஜெயமாயாவதாரனே—என்ற இசை.

பல்லவி

ஜெய லாயிலாஹா இல்லல்லாஹு-ஹு-ஹு-என்று கூறுவோம்
ஜெய முஹம்மதுர் ரசூலுல்லாஹி-ஹி-ஹி-என்று தேருவோம்

அனுபல்லவி

நாயனே யாறப்பில் ஆலமீனே யுனது
தூய-கலிமா துதித்தோதுவோம் (ஜெய)

சரணம்

1 அஹதா யுறைந்த ரப்பில் ஆலமீ நீயே
உஹதாய் பல ஜீவனி லுறைந்தருள்வாயே
அகம்புரமு மொன்றுக-தீன்-தீன்-தீன் என்று கூறுவோம்
(ஜெய)

2 தானே தானுன தபாபரப் பெரும் பொருளே
வானேழ் புவியனைத்தும் வருத்தகத் தெருளே
கோனேயுனதருள் செய்-ஜே-ஜே-ஜே என்றும் கூறுவோம்
(ஜெய)

3 நாத கருவுருவே நவநீத மூதலே
வேத போத நிலையின் விரிந்த பூ விதளே
மாதவத் திற்றுலங்கும்-மெய்-மெய்-மெய் பொருளே
[கூறுவோம் (ஜெய)

4 அடிமுடி நடுவொளி ஆடு முச்சுடரே
படிமிடி கெடதிட பதந்தரும் படரே
அடியவருளம் பூர்த்த-யா-யா-யாரப்பே கூறுவோம்(ஜெய)

5 திரு புதக்குடியான் தொழுதிடும் பொருள் சீர்
உறுதியுறு மடியார்க் குனையலால் துணையார்
சிறுவன் அப்துர்ரஹ்மான்-சீர்-சீர்-சீர்பேரன்றுங்கூறுவோம்
(ஜெய)

(3) இன்ஷான் நிலை.

ஆதி அலிபுலாம் மீமையல்லால்-என்ற இசை.

பதம் பல்லவி

மூல முதல் ஹாஹூவையல்லால்
மோட்சம் பெறுவதேது—ஹூவையல்லால்

சரணுபல்லவி

1 கோலமைக்க ஹாவை குதரத்தாயிருத்தி
ஹூவை நடுநிலையாய் கொழுகிட நிறுத்தி
தூல முடிவில் ஹீயைத் துலங்கிடப் பொருத்தி
தோன்றும் மின்ஸான் பேரே—சூட்சம் பாரே (மூல)

2 நூருவின் சானென்று—நிறைந்து ஜூதாகி
நினைவறிவு நிதான நேர்மையுமாகி
பேரும் சரூபமுற்ற புதுமை யிலாஹி
பூர்வ இன்ஸான் பேரே—சூட்சம் பாரே (மூலமுதல்)

3 மும்மூலமாகிய முடிவான கோட்டை
மீம்லாம் அலிபான முச்சுடர் பாட்டை
ஹேமீமாகிய கலிமாவின் வீட்டை
கூடுமின்ஸான் பேரே—சூட்சம் பாரே (மூலமுதல்)

4 நபுலையறிந்து நம்பில் வசமாக்கும்
நாலுந்து வாசலை யடைத்துவுள் தேக்கும்
அபுரூபமாபன் மஹமூதில் நோக்கும்
ஆனந்த இன்ஸான் பேரே-சூட்சம்பாரே (மூலமுதல்)

5 இப்புவி லிணைபவ வினையற தூற்றும்
இசையான வாசிக்கலை எக்காலு மேற்றும்
அப்துர்ரஹ்மான் அனுதினம் போற்றும்
ஆதி இன்ஸான் பேரே—சூட்சம்பாரே (மூலமுதல்)

(4) இன்ஷான் ஆதி நிலை.

தேறிகட்டரி மேலாகா சோர் முசாபிர்—என்ற இசை.

பல்லவி

முன் அவ்வல் ஹூதாத்தில் ஆனது இன்ஷான்
ஆதிநிலை ஆதிநிலை தின்

அனுபல்லவி

1 ஹூவில் தம்மாவிக் கொதித் தெழுந்தே
ஜீவிதக் கருநாதம் பொழிந்தே
தாவித் திருக்கலை கூவிக் குலாவியிப்
பூவினில் வருங்கோலம்—ஆதிநிலை ஆதிநிலை (முன்)

2 அல்ஹம் தைம்பூதமா யமைந்து
கல்பில் காரணிகஞ் சமைந்து
ஹல்க்கில் ஹக்காகி கலந்து ஜுதான
சொல் புகழுருக் கோலம்—ஆதிநிலை ஆதிநிலை (முன்)

3 அருபக் கருவே சுருபமதாய்
திருப்பொரு ளுறைந்த வுருபமதாய்
சருஜீவனுக்கும் சிறந்த சம்பூர்ண
வருசைப் பெருங் கோலம்—ஆதிநிலை ஆதிநிலை (முன்)

4 நாத கீத நடுவனே நீதி
ஆதத்துள் நபுஸுரூஹையும் ஊதி
பேதமில்லா தென்றும் பெரியோனே வணங்க
மாதவம் பெருங்கோலம்–ஆதிநிலை ஆதிநிலை (முன்)

5 மும்பொரு ளொன்றாய் முடிந்த பொருள்
ரெப்பில் ஆலமீன் நபிமறை சொல்
செப்பும் பொதக்குடி அப்துர்ரஹ்மான்
நற்பலன் பெறுங் கோலம் – ஆதிநிலை ஆதிநிலை (முன்)

---

(5) இஸ்லாம் வெளிபருள் நிலை.

விடுதலை-விடுதலை-விடுதலை-என்ற இசை.

பல்லவி

கெடுதலை கெடுதலை கெடுதலை

சரணுபல்லவி

1 கெடுதியான கொடிய மாயக்
கொடுமையகல வுலகிலே
நெடியோனுதி நபிஷரகின்
நீதிக் கலிமா வோதியறியாக் (கெடுதலை)

2 அழிவிலா தானுதி புர்க்கான்
அருளிய நம் கடமையே
அழல் நரக மெய்திடாம
லழுது நிதமுந் தொழுதிடாதக் (கெடுதலை)

3 ஆசா பாச மோக சோக
மைம் புலனு மடங்கியே
நேசாதிபமாக நாளும்
நோன்பு நோற்கா வீர்புனலே (கெடுதலே)

4 ஒளி பெருகு முண்மை யிசுலாம்
வெளி பருளே தினவர்
சலிப்பில்லாது சதக்காவுடனே
சக்காத்தியா தெக்காலமுங் (கெடுதலே]

5 மிக்க முதலும் மேனி காத்ர
முடையோர் மக்க மேகவும்
ஹக்கனருளால் அப்துர்ரஹ்மான்
ஹஜ்ஜு செய்ய யிச்சையாகாக் (கெடுதலே)

---

(6) A. ஈமான் நிலை ஆறு.

ஆஜா ஆஜா–எ. இ.] பல்லவி [அன்மல்கடி–படம்.

ஈமான் ஈமான் ஈமானுள்ளோர் சீமானுகும்
இரசூல் மொழியே
எப்போதினுந் தப்பாதுளம் ஒப்புந்தீன் வழியே (ஈமான்)

சரணனுடல்லவி

1 ஆமன்து பில்லாஹியதின்
அந்தரங்கங் கண்டு—அந்தரங்கங் கண்டு
அறிவு நினைவுறவேயமல் புரிச தாதொண்டு-எப் (ஈமான்)

2 ஈமானிலே ஆமாக்குதல்
யிஸ்லாம் கடமை—யிஸ்லாம் கடமை
இதையாசனஞ் சிதையாதொளி உதயந் திடமே–எப்
(ஈமான்)

3 ஐந்தாறுப் நிறைவேற்றிடில்
அஹதொளி பூக்கும்—அஹதொளி பூக்கும்
அடரும் பவந் துடராது நம் சடரெல்லாம் நீங்கும்–எப்
(ஈமான்)

4 உள்ளன்பு யில்லா வணக்கம்
ஒரு பலனில்லே—ஒருபலனில்லே
ஓடுங் காற்றிலாடுப் பட்டம் சாடிடுமெல்லே-எப் (ஈமான்)

5 தனியோ னிடங்கனிவாய் நிதம்
தெளபா செய்தென்றும்—தெளபா செய்தென்றும்
தேடும் அப்துர் ரஹ்மான் கடைதேறவே சான்றும்–எப்
(ஈமான்)

B. ஈமான் நிலை ஆறு.

ஆகர் கலிமா ரெசூலே–என்ற இசை.

பல்லவி

ஈமான் கொண்டே இஸ்லா–மான முஸ்லீம்
ஏகாந்த நிலையே—கலிமா—ஏகாந்த நிலையே
ஆமாமென்றே ஐந்தாறும் அகமும் புறமும்
அறிந்தருந்துங் கலையே–கலிமா-அறிந்தருந்துங்கலையே

சரணுபல்லவி

1 மண்ணிலுருவாக ஆதத்தை-சமைத்தான்
மிளிர ஸ்தூலத்தை
எண்ணு மீடேற்றம் பெற விசைத்த-கலிமா
ஏகாந்த நிலையே–கலிமா–ஏகாந்த நிலையே (ஈமான்)

2 நபுஸும் ரூஹையும் ஊதி ஞானதி
நடு நின்றது ஜோதி
இபாதத் திலங்கும் நெறிநீதிக்-கலிமா
ஏகாந்த நிலையே–கலிமா–ஏகாந்த நிலையே (ஈமான்)

3 அவ்வலின் ரகசியம் விளங்க–அமானம்
அளித்தான் தனை வணங்க
எவ்வ மின்ஷானுக துலங்கும்–கலிமா
ஏகாந்த நிலையே–கலிமா–ஏகாந்த நிலையே [ஈமான்)

4 உயிரும் உடலு மொன்றுக-யிணைத்துள்
உறைந்தான் உஜூதாக
எய்யும் நினைவே கருவாகுங் கலிமா
ஏகாந்த நிலையே–கலிமா–ஏகாந்த நிலையே (ஈமான்)

5 மொழி மானு மதுரை பதியில்-வாழ்காமில்
முஹம்மது இஸ்மாயில்
எழிலார் பதந் தொழும் அப்துர்-ரஹ்மான்
ஏகாந்த நிலையே–கலிமா–ஏகாந்த நிலையே (ஈமான்)

---

(7) இஸ்லாம் நிலை.

படம்-பராசக்தி. தேசம் ஞானம் கல்வி–என்ற இசை)

பல்லவி

ஆதி வேதம் சதா-ஒதி-சாதித்தோர்கள்
ஜோதி மூமினுதமே-இஸ்லாம்-நீதி யிதுவாகுமே–நிதம்
ஹூலாயி லாஹா யில்லல்லாஹூ வென்றோத
கூறும் நபிமொழியே-இஸ்லாம்-தேருமிதன் வழியே

சரணனுபல்லவி

1 நெஞ்சமஞ் சித்தினம் கெஞ்சியஞ்சு நேரம்
துஞ்சித் தொழுதல் மேலாம்-இஸ்லாம்-தஞ்சம்
பெறு மசலாம்— (நிதம்–ஹுலாயிலாஹா)

2 வாது சூது பொய்யும் தீது யேது மற்றோர்
சாது சிறப்பிதுவே–இஸ்லாம்-மூதுரையுமிதுவே
(நிதம்–ஹுலாயிலாஹா)

3 ஆசாப்பாச எண்ணம் வீசா மாசற்றோர்கள்
தேசா மீமானிறப்பம்-இஸ்லாம்-ஆசார தீன் வலுப்பம்
(நிதம்-ஹுலாயிலாஹா)

4 நாடி தேடி ஓர்மை சூடி கூடிணங்கி
தேடும் அப்துர்ரஹ்மான்-இஸ்லாம்-நீடும் நிலை சதமான்
(நிதம்-ஹுலாயிலாஹா)

(8) தொழுகை விதிமுறை நிலை.

உயர்வோமே உல்லாசம் பெறுவோமே—என்ற இசை.

பல்லவி

விதியாமே வல்லோனை தொழுவோமே
பவ—வேதனை தொலைப்போமே
வேண்டுவோமே—வரமே

அனுபல்லவி

1 நல்லடல் பெறும் நீதியை நாடி
நாயனை தேடி நிதமுங்கொண்டாடி
நிதமுங் கொண்டாடி
நினைந்துளங் கூடி
நிலை வேறேது (வல்லோனை) விதி

2 கலிமா தொழுகை நோன்பு ஜகாத்து
ஹஜ்ஜுடனைந்தும் காதலாய் புரிந்தும்
காதலாய் புரிந்தும்
கருதியே திருந்தும்
கதி வேறேது (வல்லோனை) விதி

3 ஈமானுறில் இசைந் தகமிணங்கி
இணை துணையறவே இருந்தருள் பெறவே
இருந்தருள் பெறவே
ஏகாந்தமுறவே
இதம் வேறேது (வல்லோனை) விதி

4 குபிர்வுருக்ககல ஹறாவதை யோதி
குறிப்புறுங் கல்பில் குடிகொளும் யில்மில்
குடிகொளும் யில்மில்
குதாவருளன்னில்
கெதி வேறேது (வல்லோனே) விதி

5 அற்பதுனியா ஆபாசம் நீங்க
அருள் புதக்குடியான் அப்துர்ரஹ்மான்
அப்துர்ரஹ்மான்
அருள் தேடுங்கோமான்
அறிவேறேது (வல்லோனே) விதி

(9) தொழுகும் மூமீன் நிலை.

படம்–வாழ்க்கை. இசை ஏழைக்கு ஏது இன்பம்

பல்லவி

தொழு வோற் கேது துன்பம்—நாளும்
துய்யவன் அருள் பே-ரின்பமே இன்பம் (தொழு)

சரணுபல்லவி.

1 பழுதான பாவ பிழை போகவே துஆவும்
பரிவாய் வொலுவுஞ் செய்வார்–மனம்
எழும் பல நினைவற்று யிறைவன் பாலோர்மை
ஈமானுடனே வுய்வார்–தினம் (தொழு)

2 ஏகன் தலீலும் யிரசூல் ஹதீஸிலு
மெள்ளள வேணும் பிசகார்—ஊண்
தேக சுகப் பொருள் தாகமற பல
தீங்கினிலுள மசையார்–நாளும் (தொழு)

3 சொல்லுஞ் செயலளவிற் சோதனை செய்துலக
சுகதுக்க மற்று யிருப்பார்—நமை
வெல்லும் புலனெடுங்க யரைவயிறு பொசித்து
வணக்க மீதிலிருப்பார்—நிதம் (தொழு)

4 நாக்கு கண்காது வுளம் நினைக்கும் ஹறுமைத்தள்ளி
நப்ஸை பேணியே நடப்பார்—இன்னம்
வாக்கு மனதுடனே வல்லோனேவலைக் கொண்டும்
விதி வழி வாரில் தொடுப்பார்—அஞ்சி (தொழு)

5 கலிமா தொழுகை நோம்பு ஸக்காத்து ஹஜ்ஜும்
கருத்துகள் வழுவாமல்—வேத
வலிதான நபிகுத்தூ பொலியவுலியா சொல்
விசுவாசம் நழுவாமல்– நித்யம் (தொழு)

6 அல்லாஹ் வல்லபமல்லால் வேறில்லை யென்று
ஆனந்தம் பெற்றோர் மூஃமீன்—கதி
சொல்லு மிம் முறையோதி தேடும் அப்துர்ரஹ்மான்
ஜெயம் பெற செய்யாலமீன்—தனே (தொழு)

—○—

(10) தொழுகை நிலை

படம்-அவன். இசை-கல்யாண ஊர்வலம்

பல்லவி

எல்லோரு மெழுந்திருங்கள்
தொழுக வாருங்கள்—இறையருள்
பெறவே நீங்கள்

சரணுபல்லவி

1 வல்வெனிரசூல் சல்லல்லாஹ் நபியின்
விதிமுறை ஷரீ அத்ததை
நல்லிதயமாய் உல்லாசமாக
நாம் நிறை வேற்றயிதை
கல்பில்லு றுதியாகவே
கசடும் போகவே—கருதியே
தொழுதிடவே (எல்லோரு)

2 தூக்கத்தை துலைத்து திடமாக வெழுந்து
துரிதமாய் வாரும் வணங்க
வாக்குடன் மனது வழி பாடுங் கோரி
வல்லோன் நபி சொல்லிணங்க
பாக்கியம் பெறும் வழியே
பயஹாம்பர் மொழியே—பக்தியாய்
தொழுதிடவே (எல்லோரு)

3 தொழுகையின் பேரது அஹ்மதுவா மிதை
தொழுது வந்தோர் முஹம்மதாம்
பழுதில்லா தைந்து பொழுதினுந்தவரா
பரிபூரண மானதாம்
அழுதிறை யருளைக் கெஞ்சி
ஆர்வமாகத் துஞ்சி—அகத்தியங்
தொழுதிடவே (எல்லோரு)

4 ஐந்து நேரந் தொழுகாற் காபீரென வாக்கியம்
அறைந்தாரே யிரசூலும்
பந்த வினையற சிந்தை யுகந்தமல்
புரியும் பவமகலும்
சந்ததம் அப்துர்ரஹ்மான்
சொல்லிது பதமான்—அருள் பெற
தொழுதிடவே (எல்லோரு)

—○—

(11) தொழுகை விதி நிலை

படம்-நாம். ஆயிரம் தெய்வங்கள்—என்ற இசை.

பல்லவி

நாயனின் ஊஜூதில் நிலை பெறத் தேடி
நினைவுற தொழுவீர்காள்—நம்
நீதி நிதானம் நேர்மையும் ஈமான்
நிறைந் தக மகிழ்வீரே—ஈமான்
நிறைந் தக மகிழ்வீரே (நாயனின்)

1 கலிமா தொழுகை நோன்பு ஜக்காத்து
ஹஜ்ஜுடனேந்தாறும்—தயஞ்
சொலிப் புயருயிரின் சூட்சும மறிந்து
சுகத்தினில் மிளிர்வீரே—அறிந்து
சுகத்தினில் மிளிர்வீரே (நாயனின்)

2 பொய் சூது வாது புரங் கொலை காமம்
புரட்சியும் பறிந்தோட—சதா
தூய்மையதாக துய்ய மெய் வணக்கத்
தோங்கியே திகழ்வீரே—வணக்கம்
தோங்கியே திகழ்வீரே (நாயனின்)

3 தன்னையறியவே பருளென விதித்த
தத்துவத்தினை தெளிந்தே—முதல்
சுன்னித்தா மிறையருள் சூசகம் மூணர்ந்து
சுகம் பெற்றோர் மூமினே—உணர்ந்து
சுகம் பெற்றோர் மூமினே (நாயனின்)

4 இணையில்லாதகத்தை யிசைந்துடல் அசையா
இருந்தருள் நிறைந்துறவே—ததி
துணை தருயாதி துடரருள் பெறவே
சொல் அப்துர் ரஹூமானே—பெறவே
சொல் அப்துர் ரஹூமானே (நாயனின்)

(12) தொழுகை விளக்க நிலை.

குடிஜனத்தோரே—என்ற இசை.

பல்லவி

திருமறை யோரே தெளிவிலா ஞரே
தினஞ் சிரந் தொழுவீரே—தீஞரே

சரணனுபல்லவி

1 அரும் பொருளிறைதவ யமலது புரிய
ஆனந்தமுஞ் சதா-யஹதொளி தெரிய
பெரும் புகழ் பெறுவீரே—தீஞரே (திரு)

2 கலிமாத் தொழுகை நோம்பு ஹஜ்ஜு ஸக்காத்து
காயுந் தாயுமாக கல்பதில் பூத்து
பொலிவு பெற்றிருளிர்வீரே—தீஞரே (திரு)

3 யீமானி னந்தரங்க மிணையற விளங்கி
ஏகாந்த தம்ஹூத்தி னெல்கையில் முழுங்கி
ஆமானம் பெறுவீரே—தீஞரே (திரு)

4 இன்ஸானகி கத்தென்ற ரகசிய மூலம்
ஈறில்லாது வணங்க நூரொளிக் கோலம்
தன்ஷீஹில் திகழ்வீரே—தீஞரே (திரு)

5 எப்பொருட்கு மாதி யேகனே அருள்வாய்
எல்லா முஸ்லீம்கட்கு மீடேற்றம் புரிவாய்
அப்துர்ரஹ்மான் சீரே—தீஞரே (திரு)

---

(13) தொழுகையின் தெளபா நிலை.

நறுமண மலரும்—என்ற இசை.

பல்லவி

நமதுடல் சதமல்ல நாயனைத் தொழுதே
நாளும் தெளபா செய் நபுஸே-நாளும் தெளபா செய் நபுஸே

சரணனுபல்லவி

1 நாமமாய் கலிமா நிலைபெற்ற இன்ஷான்
நிதமு மறகா நீதியே
ஆமென்று உகந்த அமானிதக்கோலம்
அவலமாகா ஜோதியே
அகிலஜீவ கோடி முதலாய்
அடுக்கும் தெளபா செய் நபுஸே....அடுக்கும்
(நமதுடல் சதமல்ல)

2 மூக்கினில் வோடும்-மூச்சது இரும்பு
முத்திரை கம்பியல்ல காணுவாய்
நாக்கிடை நடுவில் நடனமாடி
நம்முயிர் போகும் பேணுவாய்
நம்பி வணங்கி நாளு மிணங்கி
நிதமும் தெளபா செய் நபுஸே—நிதமும்
(நமதுடல் சதமல்ல)

3 மண்ணினுல் படைத்த மனுடருமாகியே
மதிப்புக் கொண் டலைந்திடும் தேகமே
எண்ணிலடங்கா எண்ணம் வெவ்வேறுய்
யிப்பூவிலாசைக் கொண்ட சோகமே
எப்போதும் நினைவாய் இறையோன் றவக்கல்
ஏந்தி தெளபா செய் நபுஸே—ஏந்தி
(நமதுடல் சதமல்ல)

4 அஞ்சுதல் கெஞ்சுதல் துஞ்சுதலாக
அஹதானவன்தஞ் சந்தேதடியே
பஞ்சதோஷமற தஞ்சர முணர்ந்து
பகலிரவும் பக்திக் கொண்டாடியே
பகரும் புதக்குடி அப்துர்ரஹ்மான்
பலன் பெற தெளபா செய் நபுஸே—பலன்
(நமதுடல் சதமல்ல)

(14) வேத நூட்ப நீலை.

ராஜ முஹம்மதைக் காண வென்றுல்—என்ற இசை.

பல்லவி

வேத முஹம்மது தீன் விளங்குந் திருபுர்கான்
விதி முறைதனை யறிவாய் நபுஸே (வேத)

சரணுபல்லவி

1 மாதலமீதிலாத மனுவான தெதற்கு
மறைந்த வீரகசியம் வெளியாகுவ தற்கு
பூதலத்தின் மூவாசை பொதி சுமந்துழலாமல்
பூர்வீக நிலையறிவாய் நபுஸே (வேத)

2 அண்ட கோளம் நிறைய வமைத்தான் பல்லுருவம்
அவனையறிய மேலாம் இன்ஷானின் சுரூபம்
கண்டு மதுரமுமாய் கலந்த ஹக்குல்லு ஜுதை
கல்புக்கண் திறந்து கண்டறி நபுஸே (வேத)

3 தன்னையறிந்து தவம் புரிந்திட யின்ஷான்
தரணியிற் வந்ததல்லாற் சதமில்லை ஜடந்தான்
அன்னை தந்தையற்கு முன்னரூபம் நாமிருந்ததின்
அந்தரங்க மறிகுவாய் நபுஸே (வேத)

4 ஏகன்நிலை யறிய ஏடுத்த தித்திரேகம்
ஏதுக்காக ஹயாத்தை போக்குருய் துரோகம்
தாக சோக மோகத்தை தவிர்த்து சதா தினமும்
தன்னிலமை அறிகுவாய் நபுஸே (வேத)

5 ஆதி நமக்களித்த வமானிதம் யாது
அறிவு நினைவோடு நல்லமல் செய்யும் யாது
நீதி நெறியுணர்ந்து நேசித்து காமிலிடம்
நிலை விபரங்கேட்டறிவாய் நபுஸே (வேத)

6 சொல்லுஞ் செயலு மொன்றுய் செய்வது வணக்கம்
சுருதி நபி நடத்தி காட்டிய யிணக்கம்
நல்லருள் பெற நித்யம் நாடும் அப்துர்ரஹ்மான்
நயம் பெறு முறையறிவாய்-நபுஸே (வேத)

---

(15) வேத விதி நிலை.

பாரினிலே புகழ் பாத புத்திரே—என்ற இசை.

பல்லவி

வேத வழி முறை ஓதி உணர் மனதே
விதியானது தனதே

அனுபல்லவி

பூதலமீதினி லேத மகன்றிட
பொக்கிஷ மாமிது--ஹக்கிரசூல் நபி (வேத)

தொகையரு

1 அவ்வல் அஹதானேன் ஆலமருவாகினில்
அமானிதந் தந்த விபரம்
இவ்வுலக மீதி லின்ன தென்றிதையம்
மெண்ணு விடிலே துயரம்

எடுப்பு

பல்வ மகன்றிடும் பாதையை நாடிடுவாய்
பரிமீதி லேறிடுவாய்
எவ்வஸ்துமாகிய ஏகப்பரம் பொருள்
இன்னதன்றறிய—மன்னரி ரசூலின் (வேத)

தொகையரு

2 அலிபுலாம் ஹேயாகி ஆனமீம் தாலாகி
அமைந்துரு வந்த சூட்சம்
கலிமாவிற் பிற்பாதி காணுமெய் சூரத்தாய்
கல்கு ஹக்காகும் சாட்சியம்

எடுப்பு

தொலி நரம்பு சதை சவ்வு தோற்றமிதே
சூழ்ந்திடும் நாற்ற மிதே
அழியாது பகா வாஹிடக் கலிமா
ஆனந்தம் பார் பர—மானந்த ரசூலின் (வேத)

தொகையரு

3 நூரான யின்சான் நுகத்தான தத்துவம்
நிலையாய் விளங்கும் சிற்ருய்
பூராய நினைவிற் பொருந்தா திருந்திடில்
பிரிந்தாவி யேகும் சற்ருய்

எடுப்பு

ஆராய்ந்து நோக்கிடு மந்தரங்க நிலையே
அவ்வல் ஹுவதின் கலையே
தார தன்தமியமின்றித் தன்னை யறிந்திட
தாயகராம் நபி—நாயக ரெசூலின் (வேத)

தொகையரு

4 கள்ளமுறு வஞ்சகக் கெர்வமோடு ஆணவங்
கன்மமதை களைந் தொழித்து
எள்ளளவு மசையா திருந்தமல் புரிந்திட
இலங்குமே—கல்பு செழித்து

எடுப்பு

தெள்ளமுதம் பொழியுந்தின மருந்தவே
திருவருள் பொருந்தவே
விள்ளும் புதக்குடி அப்துர்ரஹ்மானும்
வேண்டியருள் தேடும்—ஆண்டகை ரசூலின் (வேத)

(16) வேத சூட்சிய நிலை.

படம்-பாதாள பைரவி

அமைதியில்லாதென்மனமே-என்ற இசை.

பல்லவி

சுருதி சொல் அறிவாய் தினமே-என்மனமே

அனுபல்லவி

சுகம் பெறும் சூட்சிய சுழிமுனை மேலே
அகம்புற மறவே ஆனந்தத்தாலே (சுருதி)

சரணம்

1 வேதமுப் பொருளாய் விளைந்துரு மூடலம்
வீதி வழி முறை சிறிதும் பிசகா
வணக்கமு மிணக்க விபரமு மறிந்து
விந்துமே லேறிடும் மழகா (சுருதி)

2 நாசியின் கடையே நடுவணை முடிவில்
நடனமுள் புரிந்திடும் வாசி
நாதத்துள் கலந்து நிலைதருஞ் ஜோதி
நலம் பெறுமானந்தத் தேசி (சுருதி)

3 மூல முக்கோண முளைத் தெழுங் கதிரே
முழங்கிடும் பாசை ஹுவாகும்
மலப் பொறி புலனு மயக்கமு மாற்றில்
மிளிர்ர் தருமுதலே ஹக்காகும் (சுருதி)

4 சோதி ரசூலின் ஸலவாத்து மோதி
சிந்தித்து தன்தோர் மையுமாகி
சுகம் பெற அப்துர் ரஹ்மா னென்னுளும்
சொக்கியே மகிழ அன்பாகி (சுருதி)

---

(17) வேத பகுத்தறிவு நிலை.

படம்—சோக்கவாசல்-) பல்லவி (இசை—ஆகும் நெறியது.

தேடும் வழி எது—தேடா வழி எது
தெரிந்து கொள்வீரே—கடமை அறிந்து தொழுவீரே

அனுபல்லவி

நீடும் ஷரகின் நெறிமுறை விளக்கி
நேசமுமாய் விசுவாசமுமாய்—விதி
நலம் நித்திய வணக்கம் நத்தியே புரிய
நாட்டமுபாய் மனதேட்டமுமாய்—அருள் (தேடும்)

சரணம்

1 பாரில் பொய்யும் புரங்கோள் வஞ்சனை
பாதக மனிதருக் குறியதல்ல—அது
பிழை மோசமாகும் சரியுமல்ல
பூரணக் கலிமா போதக நிலையில்
புகுந்துறவாடு மிருளை வெல்ல—அதன்
மகத்துவமானது சிறியதல்ல—நாம் (தேடும்)

2 நாசி கண்காது நாக்குடன் மனது
நாடியபடி நடந்திடல் வீணை—உல
கோடித் திரிந்துழல்வது தானே
நம்பியே வாசி நடுவழி ஹுவில்
நேசிக்க மாசுகமது தானே—கீதம்
வாசிக்கு மதுர மிகுந்ததனே—நாம் (தேடும்)

3 ஊண் சுவை விருப்பமுறக்கமுந் தழுவி
உறும்பாச மழுந்திவருகுவதாம்—இடர்
பெரும்பவ வினையால் கருகுவதாம்
உயிரொளி யிரசூல் ஒதிய தீனின்
உண்மை மிளிர்சுகம் பெருகுவதாம்—வெகு
வண்மை யமுதம் பருகுவதாம்—நாம் (தேடும்)

4 கலிமாவின் பொருளைக் கண்டு வுணர்ந்து
கல்பினிலிருத்துதல் அவசியமே—அதன்
சொல் பிரதான ரகசியமே
கடனிது வெனவே வுடலுயிர் பூரணக்
கதிரொளி படரும் மதி ஜெயமே—இதன்
விதிமுறை தேர்தல் ஜெயஞ்ஜெயமே-நாம் (தேடும்)

5 அஞ்சு நேரமு மிறையருள் பெறவே
அஞ்சி நற்றுவாதனைக் கேட்டும்—நிதம்
தஞ்சம் பெறவே திக்ரும் பிக்ரும்
திகழச் சிதையாதுளம் நாட்டும்
கெஞ்சியே மஞ்சன் அப்துர்ரஹ்மான்
கூடிக் குலாவக் கவி பூட்டும்—நிறை
இன்சொல் மொழியை யிருசெவி வாங்கி
இருதயமதில் சொலிப்புறச் சூட்டும்—நாம் (தேடும்)

(18) தெளிவு நிலை.

நாட்டுவோம் பச்சைக் கொடியே—என்ற இசை.

பல்லவி

நாட்டமாய் நித்தந் தொழுவாய் நபுலே
நாயன் திருக்கலிமா தூய நிலை தெரிந்து

அனுபல்லவி

1 ஆட்டமிலாது யீமா னுறுமிசுலாமைந்தின்
பூட்டகத்தை யறிந்து நோட்டந் தவறுமலே
சாட்டிடும் வாசி சரமூல மேறி
கூட்டுமு ஜூதிற்-குலவி (நாட்ட)

2 லாயிலாஹா இல்லல்லா ஹுவில் பனுபகா
தேயுங் குடர்ஷிருக்கு ஆய்ந் தமலில் தேர்ந்து
மாயமாம் நித்திரை மறதியுமகற்றி
நேயவு ஜூதிற்-கலந்தே (நாட்ட)

3 பூதமைந்திலமைந்து பொதிந்த மக்காம் யெட்டும்
நாதவொளி நிறைந்த ஆதம்பாத நெறியில்
வேதமுப் பொருளாய் விளங்குரு மின்ஷான்
நீதிவுஜூதிற் நிலைத்தே (நாட்ட)

4 வாஜிப்புல்லுஜூதின் வழிபாடு மறிந்தே
பூஜிதமாய் நிதம் ஹாஜத்தாய்க்கருதி
நேசித்து அப்துர் ரஹ்மானுகந்தே
ஆசித்து ஜூதி-லடங்கி (நாட்ட)

---

(19) கலிமா குரு நிலை.

சாமி விவேகானந்தா—என்ற மெட்டு.

பல்லவி

சொல்லாமல் சொன்னுரடி ஜெக ஜோதி நபி

அனுபல்லவி

அல்லாஹ் வென்ற அருளே லாயிலாஹா
இல்லல்லாஹூ வென்-றினையற்று வணங்க (சொல்)

சரணம்

1 நாலா வேத குருவாய்—வரும் ரசூலாய்
மூலாதிபக் கருவாய்
தூலாதிக் காரணமாம் தூயபரி பூரணமாம்
காலா காலமுங் கருத்திலிருத்தியே
மாளாமல் மாண்டு மவுனத்திலுற்றிட (சொல்)

2 மோட்ச வழி வாரதை—யுரைத்தாரதை
காட்சி பெற்றேங்க சீரதை
சூட்சக் கலிமா மந்ரம் சொல்லாமல் சொல்லுந்தந்ரம்
ஆட்சியாய் வாசி யடியை பிடித்தேறி
ஏச்சில்லா வீட்டி லிருந்து குடியாள (சொல்)

3 அந்தரமான ஆலமே—இன்ஸான் கோலமே
வந்து மறைந்தே குஞ்சாலமே
எந்தவித முமறியா தேருந்தெள ஹீதின் வழியா
புந்தியடங்கி பிதற்ற லில்லாமலே
எந்தக்காலு மிணையற்று வணங்கிட (சொல்)

4 அல்லல்தனை யொழித்து—ஆசைக் கழித்து
வெல்லும் புலனில் விழித்து
எல்லா மொன்றுனதுற்று இன்பதுன்பமுமற்று
சொல்லிட மற்ற சுகானந்தம் பெற்றிட
வல்லோனஹுமதர் வாக்கியம்பொதுவாக(சொல்)

5 சஞ்சீவியாம் சலவாத்து—செப்பும் கருத்து
துஞ்சிதுதித்தல் சரத்து
அஞ்சலா யோதி முன்னே யறிந்து வணங்குந் தன்னை
எஞ்ஞான்றும் வாழ்க யிறை தூதரோதினர்
மஞ்சன் அப்துர்ரஹ் மானுமீமான்கொள்ள(சொல்)

---

(20) கலிமா அமானித நிலை.

அஹதான ரப்பில்-என்ற இசை.

பதம்

நபுஸே அசலாம் திருக்கலிமாநாளுமே ஓது நினைவில்மறகாது
ஜெபதபமே செய்புஞ்சதா தீருமே தீது-சென்மசாபல்யமீது

தொகையரு

1 ஆதி பெரியோ னருவா ஹிலெதிர் நிறுத்தி
அலஸ்த்து பி ரப்பிக்கு மென்று
நீதிவான் கேள்க்கவே காலுபலாவென
நிச்சயம் சொன்னேமென்று
ப-எ. ஏதிலாஹ வணங்கவே யமானிதங் கொடுத்தான்
இப்பூவினில் விடுத்தான் (நபுஸே)

தொகையரு

2 உடலதுதிடம்பெற வுதினுன் ரூஹதை
ஒரு நுகத் தலிபு நீட்டி
சடலமது ஆடியே தத்தளித் தாவியாய்
சென்றிடு வாணு ளோட்டி
ப-எ. கடமையாகுங் கருமூலங்க பாலத்திலோடும்
கல் பில் நிதங்கூடும் (நபுலே)

தொகையரு

3 பஞ்ச பூதத்தின் பிரிவினை யுந்தாய் தந்தை
படைத்தவன் பங்கறிந்து
நெஞ்சத்தில் துஞ்சியே யுஞ்சரமாருது
நித்யம் செல் தெரிந்து
ப-எ. அஞ்சுதலில்லையே நபி அருளுஞ் சொற்போல
அருள் பெறுவாய் மென்மேலே (நபுலே)

தொகையரு

4 கலிமாவில் பனுபகா கண்ட மெய் காமிலாய்
காட்சி பெறும் மானு மதுரை
சொலிப்புறு முஹம்மது இஸ்மாயில் லெப்பை தண்
சிர் பெற்ற பாதமலரை
ப-எ. களிகொளும் அப்துர்ரஹ்மான் கடைத்தேற வுதவி
கடந் தமல் செய்யும் பதவி (நபுலே)

—✠—

(21) கலிமா கடமை நிலை.

படம்- பராசக்தி.

ஆரியக் கூத்தாடினலும் தாண்டவக்கோனே-என்ற இசை.

பல்லவி

அவ்வல் கலிமா சொன்ன தீனவர்களே—கொஞ்சம்
ஆராய்ந்து பார்க்க வேணும் தீனவர்களே
செவ்வை பெற்ற இஸ்லாமான பேர்களே—சதா
சுத்த பக்தியாய் தொழுகுந் தீனவர்களே (அவ்)

1 அல்லா முஹம்மது தென்று ஒப்புக் கொண்டதும்–கலிமா
அந்தரங்க மறியாமல் தட்டுக் கெட்டதும்
எல்லாம் போடுபோக்கிலே விட்டு விட்டதும்—நப்ஸை
இன்னதென்றறிய வேணுந் தீனவர்களே (அவ்)

2 அல்லாஹ் தாத்தான ரூஹானது—முஹம்
மதுவே சிபத் தேழாயுட லானது
சல்லாப வுயிருடல் தோற்றமாமிது—நம்மில்
சூட்சியந் தெரியக் கடன் தீனவர்களே (அவ்)

3 தன்னைத் தானறியவே பருளாமெனும்—தன்
தலைவனையறிவது-சுன்னத்தா மெனும்
மின்னும் நிலை வறிவு-மிளிரும் பின்னும்—கெட்டால்
மோசமே சக்கராத்தில் தீனவர்களே (அவ்)

4 ஆதியனுதி யென்ற வுயிருடலும்—யிணை
அற்று வணங்க காமில்-முறை பயிலும்
ஏதிலா ஹுவிலே பனுவாகலும்—ஹக்கன்
இறக்கிய புர்க்கான் சொல் தீனவர்களே (அவ்)

5 நப்ஸை யறியச் சொன்ன ரகசியமது—நீதி
கழுவாமல் நடந்தவர் வசமாமிது
ஒப்பில்லா வுஜூதிலே யுற்றிடும் போது-ஈமான்
ஒளியே கல்பிற் தோன்றுந் தீனவர்களே (அவ்)

6 பாவம் செய்யாதகத்தை பக்குவஞ் செய்யும்—கெட்ட
பார்வை கேள்வி பேச்சு மூச்சை-பதனம் வையும்
கோவங் கொலை சூதுங்களவும் பொய்யும்-மனக்
கோளாரை நீக்க வேணுந் தீனவர்களே (அவ்)

7 கலிமாவில் நாலு பருள் கண்டறியவுப்-துனியா
கல்கு-ஷைத்தா நபுலின் கூறறியவும்
அலிபு நிலையில் நின்றமல் புரியவும்-இறை
அருள் அப்துர்ரஹ்மான் சொல் தீனவர்களே (அவ்)

—○—

(22) கலிமா சிந்தனை நிலை.

லேகையா தில்மேரே—என்ற மெட்டு. (ஹிந்தி)

பல்லவி

லாயிலாஹா யில்லல்லா
ஹுவிலின் பங் கொள் நபுலே

அனுபல்லவி

தாயுமாய் முஹப்பத்தஹ
தானவமல் செய் நபுலே (லாயி)

சரணம்

1 நூராய் நீ டொளி விரிந்து
நுகத்து மூன்றுமலி பானதும்
பூராவாமல் ஹரீன் ஷான்
பூர்வீகத்தைப் பார் நபுஸே (லாயி)

2 ஹல்க்கில் ஹக்கா யுறைந்து
காட்சி பெற்ற ரூஹினிலே
சொல் குறியற்– றெல்லே யில்லா
சூட்சியங் காட்சி நபுஸே (லாயி)

3 குன்பயக் கூனனந்த
குதரத் சம்சுதாத் தாகும்
தன்னுள் தானுய் விளங்கி
தேர்ந்து களிகூர் நபுஸே (லாயி)

4 அலிபுலா மீமட்சரம்
ஆனது முச்சுடருடலம்
சலியாதிருந்து திக்கிர்
ஜல்லியத்திற் செல் நபுஸே (லாயி)

5 வாசிக் குதிரை நடத்தி
வாழுந் தவ்ஹீதரண் புகுந்து
பூசித்து அப்துர்ரஹ்மான்
பேர் பெற நற்சீர் நபுஸே (லாயி)

நூல் ஆசிரியரின் மாணவராகிய

(S. M. அஹமது H. M. V. ரிகார்டில் பாடிய பாட்டு.)

(23) கலிமா மூல நிலை.

நாமக்கலாயிலாஹா—என்ற இசை.

பல்லவி

மூலமாம் லாயிலாஹா இல்லல்லாஹு
கோலமான திலாத யாஹுவல்லா—ஹு

அனுபல்லவி

1 நுகத்தா வலிபான—நடுநிலையே
மகத்தாகிய பேரொளி மாதுலையே
அகத்துள் புகுத்தோடும் மந்ரக் கலையே (மூல)

2 அருபகருவே அஹ தான சத்து
சுருபவுருபத்துள் ஜொலிக்கு முத்து
ஒருகாலிருக்காலும் முக்காலும் நத்து (மூல)

3 சுஹூதாகிய சூட்சும—ஜோதி வட்டம்
மகசூக்காகிய மவ்ஜூது திட்டம்
எஹஷானுடன்றேடும் இன்ஸானின்பட்டம் (மூல)

4 தன்னைத் தானறியதே னின்பம் நபுஸே
முனைமேல் கடக்கமுயல் வாய்தபஸே
நினை அப்துர்ரஹ்மான் றேடுந்தவிஸே (மூல)

---

(24) கலிமா கரு மூல நிலை.

அப்தேரேசிவா—என்ற இசை.

பல்லவி

கருமூலஹூவே கலந்துருவாய்க் கதிர்வீசுமின்ஷான்
ஹக்கானதிலு ஜூதாகிய ஹெமீமே அசலாம்

அனுபல்லவி

ஆவன்றெழுந்த ஆவி ஓங்காரமாகியே
ஆதாரமனுக் கோலமானந்த மாகியே
ஊவென்றுருவலங்கிர்தமாய் ஒளிர்வதே யிஸ்லாம் (ஹக்)

சரணம்

1 தானே தனியோனுந்தனித்தே—தன்மயமாக
தாத்துசி பத்துமாகியே சமைந்துருவாக
ஸீனே சிறந்தாலமீது தெளிவுறு மிஸ்லாம் (ஹக்)

2 ரூஹே அல்லாநூரே சூபத் நிறைந்த புதுமையே
ரீங்காரமா யோங்கியே நின்றூடும் பதுமையே
ஆகமுதல் யோக முடிவானது யிஸ்லாம் (ஹக்)

3 எவ்வஸ்தினு மவ்வல்நிலை யிலங்கும் பேரொளி
இணையறுத்து வணங்கநல மிலங்கு நேரொளி
செவ்வைபெற யிவ்வுலகிற் சிறந்தது யிஸ்லாம் (ஹக்)

4 உயிர்நினைவோ டுடலறிவு மொன்றுகக்கூட்டி
உட்சரமாயாடும் சூஸ்திர வொளி நிலைநாட்டி
பயிர் செய அப்துர்ரஹ்மான் பலன்பெறு மிஸ்லாம்
(ஹக்)

(25) கலிமா கலை நிலை.

ஐப்தும் கிஸலே பர்தேஸ்-என்ற இசை. படம்-ரத்தன்.

பல்லவி

நம் நபி கலிமா அரசே நிதமு நபுஸே
நிதான மீமானே
நற்றவம் புரியக் கடன் தானே

அனுபல்லவி

1 அம்புவிதனில் வாழ்வது அநித்தியமே
வெம்பியுட லழிந்திடும் சத்தியமே
ஹும்மெனு மந்திரம் விம்மியே சரமுள்ளோடி
குறிப்பற நின்றதுவே நாடி (நம் நபி]

2 இடைப்பிங் கலைக்கிடை யடையுஞ் சுழியே
நடனமிடும் வெள்ளலிபின் வழியே
கடலுமமானங் கண்டங் கடந்தேறு மேலே
கதிர்வீசும் பிரபையப்பாலே (நம் நபி)

3 முக்கோண மூல முடிவானதிலே
அக்கோண வீதி யமர்நடு வதிலே
திக்கீர் பிக்ரும்—தியங்கா திதையம் பொருந்தி
தொழுதே பலன் பெறுவாய் வருந்தி (நம் நபி)

4 இருவினை யறவே யிருந்தமல் புரிவாய்
குருமார் முறை சொலுங் கருவழி தெரிவாய்
திரு புதக்குடி அப்துர்ரஹ்மான் கடைத்தேற
தினமுவந்தருள் பெருங் களிகூற (நம் நபி)

—○—

(26) கலிமா உரு நிலை

தருவார் பதமே நபிதாசனுக்கே எ—இசை.

பல்லவி

கலிமா—நிலையே, திரு காரணமே
அலிபா மெழுந்த—அருள் பூரணமே

அனுபல்லவி.

1 வலியோன் நபி குத்தூபொலிகள்
வணங்கும் தெள ஹீதாகும்
அலிமானுர் சொல் புர்க்கான் நீதி

அந்தரங்கமாகும்
சலியாதே காந்தமூலம்
சொலிப்பான நூரின் கோலம்
சொல்லாமற் சொல்லும் எல்லைகண்டு செல் செல்
கலிமா நிலையே (செல் செல் செல்)

2 தன்னுசையங்கி -தந்தை விந்து பொங்கி
அன்னை சூலிற் தங்கி யங்கமாய் முழங்கி
பன்னுளும் பல பருவத் தாசா
பாச வாழ்வை நம்பி
முன்னுலே யோடும் மூச்செழுந்த
முறை காணுது வெம்பி
பின்னமுறும் சக்கராத்தில்
இன்னலா மன்னேரத்தில்
இவ்வாறு மோசம் போகாதமல் செய் செய்
கலிமா நிலையே (செய் செய் செய்)

3 மும்மூலக் கோட்டை முச்சுடரின் வீட்டை
தம்ஹூத்தின் பூட்டை திறந்தாடும் வேட்டை
ஹும்மென்று தம்பன மாகிமுக்
கோணவட்டஞ் சென்று
நிம்மதியா மாருதாரத்தில்
நேசித் தாடி நின்று
பம்பரமாடும் மாட்சி
சம்மாகுஞ் சதா காட்சி
சிந்தித்தே வந்திக்க யென் நாளும் சீர் சீர்
கலிமா நிலையே (சீர் சீர் சீர்)

4 கருவில் சரமாய் கலந்தே பரமாய்
உருவில் திரமாய் உணர்வில் வரமாய்
மரு வாசமாய் கலந்து ஜூதாய்
வந்த அந்தரங்கம்
ஒருமை கொண்டே யமானிதத்தில்
உகந்தாலருள் பொங்கும்
பெரு வாழ்வுறைந்த ஈமான்
அருள்தேடும் அப்துர் ரஹ்மான்
அல்லா எல்லோரையும் நல்வழி சேர் சேர்
கலிமா நிலையே (சேர் சேர் சேர்)

(27) கலிமா ரகசிய நிலை.

மாசூக்கை கண்டு மிஞ்சுவீர்-என்ற இசை.

பல்லவி

ஹு வென்றுங் கொஞ்சிக் குலாவுவீர்
கோதற்ற மெய் கலிமா (ஹுவென்று)

அனுபல்லவி

ஹுவானதே ஆவியாயுரு கொண்ட நிலை கண்டு
கொலந்து மூலமாமுயிர்—குறிப்பொன்றில்லாத
சிறப்பினைந்த (ஹுவென்று)

சரணம்

1 அவ்வலஹதான யாரஹீர்
ஆதமெவைக்கும் போதகரென்றும்—அமரர் பணியவும்
அம்முறை யறியாதிபுலீசு (யவும்
அகம்பாவங் கொண்டகன்றதால் வைத்தான்—ஆனதறி
செவ்வையுற்ற சிர்ரின் ரகசியம்—சிறந்த பிரகசியம்
சர்வகோடி ஜீவனெவைக்கும்
சங்கைபெறு மின்ஸான்—அங்கத்துள்ளாடிய (ஹு)

2 அல்ஹம்து ஐம்பூதமாகி
ஆடும் நுகத்தலி பதுநடு—ஆன பேரொளி
அந்த முடிவான நடன
ஆனந்தமே தியானமே தொனி—அடருந்தீனெளி
சொல்லில்லாதகூட்சியமந்திரம்-சுருதியதின்தந்திரம்
சுழிமுனையின் திரைகடந்து
செல்லுமுள்ளால் வாசி—துள்ளிக்குதித்தேறும்(ஹு)

3 இன்ஸான் காமீலான சூரத்தில்
யேகன் வெளியாகுவேனென்ற—இயல்பினையுணர்ந்து
இவ்வுடலும் வுயிரு மிணைந்தே
யிருந்தாடிய சூஸ்திரமது—யாதென தெரிந்து
முன்னளாதி மொழியை யுணர்ந்து—முஹப்பத்
மோட்சமாக்குஞ் சூட்ச துல (ததில் துடர்ந்து
முடிவிலாடியே—வடிவிலங்கிய (ஹு)

4 பொன்னனி செய்யிது முஹம்மது
புஹாரி தங்கள் பொற்பாதம் பணிந்து—பூரணமுதித்த
பூர்வீகமா மானுமதுரை
பதிமுஹம்மது இஸ்மாயில் லெப்பை—பூங்கரம்பிடித்த
நன்னர் பெற ஈவில் புதக்குடி நகர் வாழ் அப்துர்
நாட்டம் நிறைவேற்றுமாதி ரஹ்மான்
நாலா வேதத்தின்—மூலாகீபமாம் (ஹு)

(28) கலிமா சூட்சிய நிலை.

சைகால் பாடிய மெட்டு.

பல்லவி

நல்லாதாரம் பெறும் இல்லல்லாஹு வென்று
நாளுந் தொழு நபுஸே – நப்ஸே

சரணுபல்லவி.

1 பல்லாயிரங்கோடி படைப்புள்ள ஆலம்
அல்லாவுஜூதான ஆதமிக்கோலம்
ஏல்லாவுருப்போன்றின் ஷானுடனல்ல
இணையற்றுத் தொழுநப்ஸே—நப்ஸே (நல்லா)

2 சிர்ரில் தாத்தாக சிறந்தது நூரு
அர்ரஹ்மானென் றமைந்ததே சீரு
நிர்ரஹீமில் நிறைந்தானந்த மொளிரும்
நிலைகண்டு தொழு நப்ஸே—நப்ஸே (நல்லா)

3 சகல தத்துவமுந் தனக்குள்ளே யமைத்து
மஹத்துவ ஹயாத்து மிளிரவே சமைத்து
அகமும் புறமு மாகியனுதி
னானதைத் தொழு நப்ஸே—நப்ஸே (நல்லா)

4 அல்லாஹ்வென்ற ஜனன கலிமா
எல்லாமல்லதுமா யிசைந்தது நலமா
செல்லாத சுழிமுனை திறந்து சென்றேறி
சுஜூது செய் தொழு நப்ஸே—நப்ஸே (நல்லா)

5 பந்தபாசவினை படரற போக்கி
வந்தவழிநாத வீதிமுறை நோக்கி
அந்தமுற்றிடவே அப்துர் ரஹ்மான்
அருள்பெறத் தொழு நப்ஸே—நப்ஸே (நல்லா)

(29) கலிமா புதின நிலை.

இங்குமிது சமயம் என்ற இசை.

பல்லவி

பூர்வக்கலிமா புதினம்
பேரொளிவே யதனம்
பேரானந்த மதனம்
போக்காதே ஆவி பதனம்

அனுபல்லவி

1 ஆலமருவாகிலிறை
அமானிதந்தந்த மறை
கோலமுருக் கொண்ட திரை
குள்ளாடும் ரூஹின் முறை
சீலமான திரு குதூ பொலிமார்கள்
மூலக்குண்டலியில் முழித்திருந்தார்கள்
சால வறுதி சொல் தேற்றிவந்தார்கள்
பாலமுஸ்த்தகி மேறி பலனை பெற்றூர்கள்—பூர்

(பூர்வக்கலிமா)

2 தம்ஹூத்தீலாகி வழி
தனமாற்றி தேர்ந்துவெளி
நம்மிறசூலின் ஒளி
நடுக்கண்டுணர்ந்து தெளி
நம்முடல் சூட்ச ரகசிய நிலையே
அம்பல நடனமாடிடுங் கலையே
வெம்பும் சக்கரூத்து முழுக்கிலையே
சம்பூரண வுடலழிவது மிலையே—பூர்வ

(பூர்வக்கலிமா)

3 தத்துவந் தொண்ணூற்றுறை
திருத்தி தெளிந்து நூரை
புத்தி வைராக்கிய சீரே
பொதிந் தோர்மையுற்றுக் காரே
முத்திபெற சுழிமுனை திறந்தேறும்
சத்தி யாரூத ரத்தினில் சேரும்
நத்தும் தாகமோக சோகமுந்தீரும்
நித்தியானந்தமே களிகூறும் (பூர்வக்கலிமா)

4 நபுஸை அசையாமலே
நிருத்தி யலீபை போலே
அபிலா சையற்ற காலே
அருந்து மமுதப்பாலே
அபுருவ இறை லிகா வருள்வருந்தும்
சுபமுறவே சொல் செயலிலுந் திருந்தும்
நிபமிகுமானந்த நீதியில் பொருந்தும்
தபம்பெற அப்துர் ரஹ்மானுங் கருதும்
[பூர்வக்கலிமா]

(30) கலிமா இன்ப நிலை.

காந்தி சொல் கேளும்—என்ற இசை.

பல்லவி

மிட்டாய்தின்னுவீரே கலிமா மிட்டாய்தின்னுவீரே-தீனின்

அனுபல்லவி

1 எட்டாருலகரசு எழுசுவன லவ்ஹுகலம்
அட்டாங்க மூமனமைத்த அர்ரஹ்மானிர் ரஹீமீன்
(மிட்டாய்)

2 அறுநான் கெழுத்தினுள்ளே—ஆடுந்திருவொளிவாய்வந்த
புருக்கானி ரசூல்நபி போதித்திடும்—வேத வாக்கியம்
(மிட்டாய்)

3 ஹுவும் மீமுங்கூடிய குதரத்தெனுங்கோட்டைதனில்
மாவுல் ஹயாத்தமுத மாரிவழிந் தூரிவரும்
(மிட்டாய்)

4 பொய்யும் புறமுஞ்சூது—புலைகளவு கொலை மறுத்து
ஐயறிவைத் துலக்கும்— ஆதி பரிபூரணமாம்
(மிட்டாய்)

5 ஊணுறக்க மோகமூ முடந்தையான பல நிய்யத்தும்
ஆணவ மாய்கையுடன் ஆசாபாச—தோசம் நீக்கும்
(மிட்டாய்)

6 வறுமைச் சிறுமைக்காம—வாஞ்சைக்கோபம் யாவுமற்று
பொறுமையிற் போதிந்திருக்கும் போதமெனும்-நீதிநிலை
(மிட்டாய்)

7 இப்புவிமீதுளோர்க ளிறையருளிலுறைந்தொழுக
அப்துர் ரஹ்மானேதும்—மத்துவைத —சாத்வீகமெய்
(மிட்டாய்)

(31) கலிமா பகுத்தறிவு நிலை.

படம்–கூண்டுக்கிளி **இசை:- கொஞ்சுங்கிளி**

பல்லவி

அல்லாஹ் முஹம்மது தன் ஆனந்தமாங் கலிமா
ஆர்வமாய் நாம் சொன்னது சரியா தவரா
வல்லான் தொழுகையுடன் நோன்பு ஜக்காத்து ஹஜ்ஜும்
விதிமுறை விலகுவதும் சரியா தவரா சரியா தவரா

சரணனுபல்லவி

1 வணக்கத்திற் குரியவன் அல்லாஹ்வென் றறிந்தும்
வழி தடுமாறுஞ் செயல் சரியா தவரா
இணக்க முறையிதைய மிசைந்தக மொடுங்காமல்
இடர்பவம் புரிவதும் சரியா தவரா சரியா தவரா (அ)

2 ஷரீஅத்து தரீகத்தும் ஹகீகத்து மஹரிபத்தின்
சாரமிழப்பதுவும் சரியா தவரா
பரிவாக நற்குணமும் புண்ணியமுமில்லாது
படுமோசத்தி லாழ்வது சரியா தவரா சரியா தவரா (அ)

3 தன்னையறிய பருள் தலைவனை யறிய சுன்னத்
தாகுமென்ற நபி சொல் சரியா தவரா
உன்னை பெரிதென் றெண்ணி வுயிர்நிலையை மறந்து
உலகாசைவிரும்புவதும் சரியா தவரா சரியா தவரா (அ

4 ஆதத்தினி லுஜூதாகச் சமைத்தேனென
அஜாஸீலை வணங்க சொன்னது சரியா தவரா
வேதமுடிவின் ஜோதி விளக்க மறியாமலே
வீணவி போக்குவது சரியா தவரா சரியா தவரா (அ)

5 கலிமாப் பொருளறிந்து கருதி யமல் செய்யாமல்
ஹைவானைப்போல் சாவது சரியா தவரா
சலியா திறை தயவை கெஞ்சும் அப்துர்ரஹ்மான்
சாற்றுமிம் மொழியது சரியா தவரா சரியா தவரா (அ)

---

(32) கலிமா ப.ங்கா நிலை.

கயேபிவோ என்ற ஹிந்தி மெட்டு.

பல்லவி

லாயிலாஹ–இல்லல்லா நாட்டங் தவறுதே நேசமே
தாயுங் காயு மாயஹதாய் தன்னிலை மாறுதே மோசமே

சரணனுபல்லவி

1 ஹக்குல் லுஜூதாய்க் கலந்துரு
ஹயாத்தாய் நிறைந்ததே நூரு
முக்காலு மெக்காலு மோர்மையாய்
மோனம் மாறுதே மோசமே (லாயிலாஹா)

2 திருக்கலிமா மூலமந்திரம்
தெளிந்த நடு வீதி யந்தரம்
அருபமா சூஸ்திர மாடிடும்
அன்னிலை மாறுதே மோசமே (லாயிலாஹா)

3 மூச்சுப் பேச்சுக் கேள்வி பார்வையே
முடுகிச் சுழிமுனை சேர்வையே
தீச்சுடுவாசியில் தேறியே
தீர்க்க மாறுதே மோசமே (லாயிலாஹா)

4 தன்னை யறிந்தவர் தலைவனை
தானறிவார் ரடைவார் பலனை
நன்னுரை அப்துர் ரஹ்மான் சீர்
நபுலை நீ மாறுதே மோசமே (லாயிலாஹா)

(33) கலிமா ஆட்சி நிலை.

உலகே மாயம் என்ற மெட்டு.

பல்லவி

நபுலை மாயம் நாமே மாயம்
நபி கலிமா நாம் அறியாமாயம்—நாம் அறியாமாயம்

சரணனுபல்லவி

1 நிலையும் நேர்மையும் நிறைவானதினுலே
நீள்வதொளி சூழும் சுழி நேர்மதிபோலே—நீள்வ
நய நேசமும் பிரகாசமும் முன்னுலே
நிலைமை நாம்-காணுதறியா மாயம்-காணுதறியாமாயம்
(நபுலை மாயம்)

2 வரமுந்திரமே பெறும் வைராக்கியத்தாலே
வேதாந்தமும் நாதாந்தமெய் விளங்குமப்பாலே-வேதா
வணக்கமும் நல் லிணக்கமுங் கதிராலே
வழியைநாம்-காணு தறியா மாயம்-காணுதறியாமாயம்
(நபுலை மாயம்)

3 ஹக்கில் சொக்குந்தவ காட்சியிணை யறவே
காரணமும் பூரணமாங் ஹாமீமிலே–காரண
காணுவதுந் தோணுவதுங் கசடில்லாதாலே
கருவை நாம்–காணுதறியா மாயம்-காணுதறியாமாயம்
(நபுஸே மாயம்)

4 வஞ்ச பிரபஞ்சமதில் வழுவில்லா மனதை
வாட்டிநடு நாட்டுவாசி வோட்டிட தனதே–வாட்டி
வரை அப்துர்ரஹ்மா னுளமிளிர வினிதே
வண்மைநாம்-காணு தறியாமாயம்-காணுதறியாமாயம்

(34) கலிமா பொக்கிஷ நிலை.

எங்கே நான் சென்று தேடுவேன்—என்ற இசை.

பல்லவி

என்றே யான் கலி தீருவேன்
எப்போதிலோ மனந் தேறுவேன்
அன்றுமின்றுங்கதி கூறுவேன்
அல்லா முஹம்மதே யாநபி

சரணவல்லவி

1 சகல படைப்பினுள் சமைந்ததை
சர்வலோக வொளியமைந்ததை
சுகமாதவத் தோர்களுகந்ததை
சிந்தை மகிழவே சிறந்ததை (என்றே)

2 ஆதத்தின் நெற்றியிலானதை
ஐம்பத்தொன் றவதார மானதை
வேதமூல முடிவானதை
வெளியுள் வழி நிலையானதை (என்றே)

3 மக்காவி லுதய மென்றதை
மிகுராஜில் பேசவே சென்றதை
ஹக்கின் ரகசியம் நவின்றதை
கலிமாவின் கருவாய் நின்றதை (என்றே)

4 பாதம் படிடா பாக்கியத்தை
பார்வை முன்பின் காணும் சிலாக்கியத்தை
வேதக்கதிர் வீசும் வாக்கியத்தை
விண்மண் கலந்த சௌபாக்கியத்தை (என்றே)

5 தத்துவத்தோர் தவக் கொழுந்ததை
தானே தானுனேர்கள் மகிழ்ந்ததை
மத்தீபத்தின் ஒளி பொழிந்ததை
மாராய நூரொளி விழைந்ததை [என்றே)

6 தீனின் கொடிப் படரானதை
தேனின்பந் தெவிட்டாத் துடரதை
நானில நற்கதிப் படரதை
நவில் அப்துர்ரஹ்மான் சுடரதை (என்றே)

(35) கலிமா காரண நிலை.

ஆடுதுபார்—என்ற இசை.

பதப் பல்லவி

தோன்றுதுபார்–சுய–ஜோதிச் சுடர்–எதிர்

தொகையரு

1 சான்ற கலிமா தன்னிலை யுணர்ந்து சதா தினமோ தி
(சரமாற்றி தெரிந்து
ஏன்றவரையில் யிதையமணர்ந்து இருந்தாடும்
(சூழ்த்திர யேகாந்தந் தேர்ந்து (தோன்று)

தொகையரு

2 அலிபுலாமீமில் அமைந்தொளி வீசும்
அனுதினம் வாசியடுத் தேறி பேசும்
கலிமாவின் மூலங்காணவே கூசும்
ஹக்கின் ரகசியக் காரணத் தேசும் (தோன்று)

3 சுழிமுனை கடக்குஞ் சூட்சிய ஆலம்
சுகதுக்க மாற்றி சூழ்ந்திடுங் காலம்
அழிவிலா தாத்துள் ளமைந்திடுங் கோலம்
அம்பல நடன மலங்காரத் தூலம் (தோன்று)

4 மானுமதுரை முஹம்மதிஸ்மாயில்
மகிழ்ந்தரு ளுற்ற மவுனத்தின் வாயில்
தேனுர் மொழியின் திறம் பெறப் பூவில்
தேடிடும் அப்துர் ரஹ்மானும் ஹூவில் (தோன்று)

(36) கலிமா ஜோதி நிலை.

தில்ஹைசை தாஹுசே ஹுஸ்ஜமாலுகா—என்ற மெட்டு.

பல்லவி

வேத-ஜோதிக் கலிமா சதா ஒதுவோமே
நாத-நீதி நிலை தேர்ந்தெப்போதும் நாமே

சரணம்

1 முன்-பாதி பனிரெண்டு மூலமாகி
பின்-முஹம்மதுர் ரசூலுல்லாஹி கலந்
தொன்று முடலுயிரு மோர்மையாகி (வேத)

2 கலி-மாவில் ஹாஹுவும் பகாவாகுமே
ஒலி-சூஹுல் குத்தூஸி யுகந் தேகுமே மனம்
சலியாதமல் புரி சம்பூர்ணமாகுமே (வேத)

3 அலி-புலாமீம் மூலமானவுடல்
மலி-வாம் நப்ஸின் பொம்ம லாட்டத்திடல் அருள்
பொலிவா மாவுல் ஹயாத்துப் பொழியுங்கடல் (வேத)

4 ஹல்-க்கில் ஹக்கானதை காணும் விதம்
சொல்-பொருளில்லா சாயூட்சபதம் அதின்
எல்கை சென்றேறி யிறங்கிடும் நிதம் (வேத)

5 சொல்-லாமற் சொல்லுங் கலிமா சூட்சியம்
எல்-லோர் கிறை நபி சொன்ன சாட்சியம் முறை
சொல் அப்துர்ரஹ்மான் சுகம் பெற நிச்சியம் (வேத)

---

(37) கலிமா ஆனந்த நிலை.

படம்—மனோன்மணி. இசை-ஆனந்தம் ஆனந்தமே.

பல்லவி

ஆனந்தம் ஆனந்தமே அருள்
ஆனந்த மா-தந்ர மா-ங்கலிமா நிலை நேராய்

அனுபல்லவி

தானந்த முடிவினில் தானுகி
தன்னிற்றெனி-குன்னின்மணி (அருளானந்தம்)

1 சுழிமுனை திறந்து சுடரது படர்ந்து
சுகமதியாய்-ஜெகஜோதியாய் (அருளானந்தம்)

2 வெள்ளலிபாகி விரிகதிராகி
வேதமோதும்—நாதகீதம் (அருளானந்தம்)

3 தனதிணையறுத்து தன்வாசி நிறுத்து
தரளவொளி-பரனின் வெளி (அருளானந்தம்)

4 அருளினை தேடும் அப்துர்ரஹ்மான்
அந்தமுறும்—பந்தமறும் (அருளானந்தம்)

—○—

(38) A. கலிமா காட்சி நிலை

தெருவில் வாராண்டி, வேலன் தேரில் வாராண்டி-எ. இ. படம்—கோவலன்

பல்லவி

கலிமாவின் காட்சி கலிமாவின் காட்சி—நாத
கருநிலை மாட்சி

சரணம்பல்லவி.

1 அலிபுலாம் ஹேமீம் தாலிருந்தகக் குழாயோடும்
முகக் குழாய் மூடும்
அந்தரமா யாருதாரங் கடந்தப்பால் கூடும் (கலிமாவின்)

2 ஆதி மஹமூதர் கிறை அருளிய புர்கான்
அருளிய குரூஆன்
அந்தரங்க-மந்திரங்க-ளறிந்திட விதிதான் (கலிமாவின்)

3 தனை மறந்து தனைதுறந்து சரமதிலோட்டும்
திறமுற பூட்டும்
தரளமணி பிறளயத்தின்-தேனமுதூட்டும் (கலிமாவின்)

4 பொரிபுலனுங் கரணமற்று பேரொளி வீசும்
நேரொளி வீசும்
புகலபார்க்குள் தகைமையில்லா-பொருள் விசுவாசம் (க)

5 ஹக்கு கல்கில் கலந்துறைந்த காரண தத்து
உதாரண சரத்து
கலக்கமாக்கும் சக்ருத்தினில்-மலக்கல் மௌத்து(கலிமா)

6 இணக்கமு நல்வணக்முற் றேகாந்தம் திகழவே
சாந்தம் நிகழவே
எக்காலும் அப்துர்ரஹ்மானிதய-மென்றும் மகிழவே.
(கலிமாவின்)

B. கலிமா காட்சி நிலை,
மடமதியே மவுத்தை வெல்ல—என்ற இசை.

பல்லவி

கெடுமதியே கலிமா நிலை காட்சி
காணுமல் என்ன சூச்சங்கண்டாய்

அனுபல்லவி

1 மலைக்காது வாசி மார்க்கமாய்ப் பூசி
மறையா-சடங்-குறையா.தென்னு சூச்சங்கண்டாய் [கெ)

2 அரும் பொருளறிதை அமைந்த வாறிதை
அறியாத்தவம்-புரியா-தென்னுசூச்சங்கண்டாய் (கெ)

3 மவுத்து வலிந்து மருட்டிடுந் தலிந்து
மெய்யா-ஜெபம்-செய்யா-தென்னு சூச்சங்கண்டாய் (கெ)

4 திருநபி வாக்யம் தேடி சிலாக்கியம்
தேற-கரையேற-யென்னு-சூச்சங்கண்டாய் (கெ)

5 நவில் அப்துர்ரஹ்மான் நலம் பெற யீமான்
நயமே-பெற-தயமே-யென்னு-சூச்சங்கண்டாய் (கெ)

---

(39) கலிமா பூரண நிலை.
நூரில் நிறைந் தொளிவே—என்ற மெட்டு.

பல்லவி

தீனின் திருக்கலிமா—தேடும் செல்வீகமாமே
பானின்பமே பொழியும்-பாக்ய பரிபூர்ணமாமே

அனுபல்லவி.

இறையவன் புர்க்கான் இன்பமே யிர்பான்
இரசூல் நபி சொல் வருசை நம்மீமான்
ஏமாந்திடாது என்னுளுமே நாளுமே நாளும் (தீனின்)

தொகையரு

1 அவ்வல் கலிமா அருநான்குமாகிய அந்தரக்கோலம்
எவ்வஸ்த்தின் மேலாமிறையுஜூதான இன்ஸான் மூலம்

அ. ப. எ.

இலங்கிடும் சூட்சம் இணையில்லா சாட்சியம்
யாவரும் தேடும் ஹுவதின் மோட்சம்
ஏகாந்த வாசிமேல் ஏறுமே ஏறுமே ஏறும் (தீனின்)

தொகையறு

2 அலிபுநிலையி-லடருஞ்சுடராம் ஆனந்த வின்பம்
வலிவுறும் ரூஹவிரி தருங்கதிராய் ஒளிர் பேரின்பம்

அ. ப. எ.

வணங்குதல் சுகமே வழியுங் கற்பகமே
வகுத்துரை அப்துர் ரஹ்மானின் னகமே
வீணுவி போகாத வாழ்விதே வாழ்விதே வாழ்வு(தீனின்)

(40) கலிமா ஏகாந்த நிலை.

துனியா மேஹம்குது பானுக்கரேங்கே—என்ற இசை.

பல்லவி

திருகலிமாவே நமக்கு களுமூலமாகுமே-காட்சி ஹுவே

சரணுபல்லவி

1 அலிபான நுகத்தொளி-யாடுந்தூலமே
ஒலியோசைக் கூவுமுயி-ருடலின் ஜாலமே
சலியாதே காந்தந்-தருகுங் கோலமே-காட்சிஹுவே
(திருக்கலிமாவே)

2 மூல முக்கோண-முதலின் மூடிவே
தூலநடுச்சுழி-திறக்கும் வடிவே
ஏலவென்றேற்ற-எழுந்தாடுங் கெடியே-காட்சிஹுவே
(திருக்கலிமா)

3 ஆதியனுதியா-மந்தர சூட்சமே
ஓதியோதா தெழு-முந்தி சாட்சியமே
ஏதிலானுதிய-யெல்கை மோட்சமே—காட்சிஹுவே
(திருக்கலிமா)

பூவாசம் போன்றுடல்-பொருந்தி சுஹுதில்
ஜீவாதார சுல்த்தா-னஸீராவதில்
தேவாமிர்தம் பொழியும் மவுஜுதில்-காட்சிஹுவே
(திருக்கலிமா)

5 வட்ட வடிவாயுள்-வரை துலங்கும்
எட்டு ரெண்டாகில்-யிணைந்திலங்கும்
கட்டும் வாசிப்பரி-கடத்த முழங்கும்-காட்சிஹுவே
(திருக்கலிமாவே)

6 எப்பொருட்கு-மிறை யாதியேயுனை
ஹுப்புடனுதினேன்-குருவே துணை
அப்துர்ரஹ்மானறிய வந்தனை-காட்சிஹுவே (திருக்கலி)

(41) கலிமா முடிவு நிலை.

நீவாலிபர் ஆகயி சஜனி–என்ற இசை. படம்-ரத்தன்.

பல்லவி

ஹுமீமில் கதிரான இன்ஷானி ஆ ஹுவதே
வாஹிதத்தாஹி...ஹுவேதே

சரணனுபல்லவி

1 தாத்தொளி பூத்தே சூஸ்த்திரவொளிசி
பாத்தினில் காத்திரமாகி
தள. தள தள வென் றளகொளிமிளிர
தனித்துருவந்த தம்மாகி
பூர்த்தி பொருளாய் பூரணத் தெருளாய்
பூதலம் வந்த இன்ஷானி (ஹுமீ)

2 அருவுருமயமாய் திருகரு நாதந்
தருந்தொனிமூல மீதெழுந்தே
அருமருமணமாய் அதிவின்ப குணமாய்
அனைத்து முள்ளொடுங்கியே பொழிந்தே
இருகலை சுற்றி இணைந்துருபற்றி
இப்பூவில் வந்த இன்ஷானி (ஹுமீ)

3 தானவனு கந்தா தீனமதான
மோனதியான முச்சுடராய்
தனதிணையருத்து கனம் பெறு முடலந்
தனிலு ஜுதானது படராய்
நினைவுற அப்துர் ரஹ்மான் கல்பிற்
நிலைபெற வந்த இன்ஷானி (ஹுமீ)

---

(42) பரிபூரண நிலை.

வல்லான் தொழுகைதனை—என்ற இசை.

1 இன்லான் முடிவு நிலை எல்லையில்லா தானந்த
ஏகாந்தமே ஜொலிக்கும் பூரணம்—பரி-பூரணம்
முன்னுள் அருவாஹினில் முதலோன் தந்த அமானம்
முகதாவில் வாங்கிய தீன் பூரணம்-பரி-பூரணம்

2 அறுதி வாங்கியே நம்மை அனுப்பும் ரகசியத்தை
ஆராந்தறியக் கடமையானது-உடனானது
இறுதியுல கில்வந்து எண்ணம் பிசகிடாது
இணையற்று ஜூதிற் கலந்த பூரணம் பரி-பூரணம்

3 அறிவு நினைவுணர்வு புத்தி சக்திக்கப்பாலே
அந்தர மாதாரந் தாண்டியே-சுக்கூனில் வேண்டியே
பொறி புலனுங் கரண பூதமுதலனைத்தும்
பொசிங்கிப் பிரகாசிக்கும் பூரணம் பரி-பூரணம்

4 மனவாக்கு காயமற மக்ட்சியிகழ்ச்சியற்ற
மஹசூக்காக மலர்ந்த வாசமே-தானே பேசுமே
கனலெழுமோங்காரக் கம்பத்தடி முடியாய்
காணு மஹ்மூதியா பூரணம்-பரி-பூரணம்

5 அருவுருசு ரூப மாகியமைந்துள்ளாடும்
அந்தர மும்மிர் சூட்ச வகமியம்-கமால் சுயமயம்
கருவொளி வெளியாகு மகாமன் மஹ்மூதில்
ஹாமீம் குதறத்தான பூரணம்-பரி-பூரணம்

6 வேதமு நாதமுங்கீதம் பாடியே கதிராய்
விந்துமே லேற்றி காணுந் தந்திரம்-மஹாமந்திரம்
ஆதரபிமார் முதலனை வோற்கு தூதபொலிகள்
அறிந்தமல் புரிந்த சம்பூரணம்-பரி-பூரணம்

7 கலிமா பகா நிலையில் கனிந்து கடந்து தேறி
கல்பை பேணவே விதியானதே-நோக்கானதே
சலியாதி றையருளே தேடும் அப்துர்ரஹ்மான்
சுகம் பெற மகிழ்ந்தரும் பூரணம் பரி-பூரணம்

---

(43) உடல் நிலை.

தேனேடும் தமிழ்மாலை (பின்முடுகு) என்ற-இசை.

பல்லவி

ஊனேடும் உடல் கூடே—மலம்

அனுபல்லவி.

உருவிற் கருவாகிய உயிரது
வருகுந்திருவுரு—பிரிந்தேகிடில்

சரணம்

1 தாளெடும்-சரப்-வினெடும்-உள்கோளெடும்-நிலை
கண்டக-மண்டிப்பின்-னண்டிடாச்-சென்றிடில்
(ஊளெடுப்)

2 தூலமாம்-அனுகூலமாம்-பர-ஜாலமாம்-நம்
மெஜன்மமுங்-கன்மமுந்-தின்மையும் பின்னிடில்
ஊளெடும்)

3 நின்முடி முசித்-தின்முடி-கடைச்-சென்முடி-மனஞ்
சிதரும்-பதரும்-உதரும்-சடங்கெடில்
(ஊளெடும்)

4 ஆட்டாதே-வாணு-ளோட்டாதே-வெளி-காட்டாதே-நயம்
காணுந்-தோணும்-பேணும் அப்துர்ரஹ்மானுரை
(ஊளெடும்)

(44) உடல் உற்பத்தி நிலை.

ஞானக்கண்—என்ற இசை- படம்—சிந்தாமணி

பல்லவி

ஆதி-குன் னென் றேதிடும்-போதினிலே
சோதி-பயகூனென்று—சூழ்ந்து நிறைந்ததாலே

அநுபல்லவி

1 நாதமுங்-கீதமும்-நவின்றிடும் நாதனிலே
பூதவுடலுணர்வு-பொசிங்கிப் போகுமப்பாலே (ஆதி)

2 வேதமும்-போதமும்-விழைந்திடும் வெளியிலே
சீதமா மோனமுஞ்-சிறந்திடுஞ் சிர்ரினிலே (ஆதி)

3 சொல்லாது சொல்லும்-சூட்சமாந் தோற்றத்திலே
எல்லை கடந்து மேலே-ஏறுமானந்தத்தாலே (ஆதி)

4 கற்பக முற்பனமாய்-கசிந்தொழுகுமங்காலே
நற்பலன் பெற அப்துர்-ரஹ்மானுகந்ததாலே (ஆதி)

(45) உடல் உறுதி நிலை.

விருத்தம்.

அந்தமு முடிவிலாதா னருளது பெருகஜோதி
சுந்திர யிரசூலுல்லா சுடரொளி சூழ்க யாவும்
பந்தமாய் மிளிர யாதம் படைத்ததி லுஜூதாமின்லான்
இந்தமா வுடலின் சூட்சத் திறைவனே யென்றுங் காவல்

எட்டடி தீவுக்குள்ளே—என்ற இசை.

பல்லவி

இந்த உடலே நம்பி இருப்பது நீதியல்ல இறை உஜூதை
உணர்ந்து பார் நபுஸே

அனுபல்லவி.

1 அந்த முடிவிலாதோனருள் சூட்சம் முந்த அருவாஹில்
நாம் தந்த சாட்சியம்
புந்தியுகந்தமான பொருளாம் ரூஹுல் குதூஸி
புதுமை தனையறிந்து பார் நபுஸே (இ)

2 பஞ்சபூதமினைந்த படைகோலம்-அஞ்சும் வெவ்வே
றாகும் ஒருகாலம்
அஞ்சிதுஞ்சியுட்சரம் ஆட்டிமே லோட்டியே
அவ்வாது ஜூதை யுணர்ந்துபார் நபுஸே(இ)

3 ஏழு சிபத்து எட்டு மக்காயுண்டும்-பாழுபடும் மூவாசை
பதியு முண்டும்
வாழுமுடலிலுயிர் வாழ்ஞாள் பிரிந்தேதகுமுன்
வல்லோனுஜூ துணர்ந்து பார்நபுஸே(இ)

4 ஈமானிசுலா முறை யிதமறிந்து ஆமாமெனுங்
கலிமா அருளுறைந்து
ஏமாந்திடில் ஹயாத்து ஏகிடுமே பிரிந்து
இல்லல்லாஹூ உஜூதை பார் நபுஸே(இ)

5 நானென்ற பேச்சு பார்வை நலிந்திடுமே ஊன் சதை
எலும்பு தோல் உதிர்ந்திடுமே
சனமாகு மிச்சடக்தி யல்பதுவே கேவலம்
இன்ஸானுஜூ துணர்ந்து பார்நபுஸே (இ)

6 முளங்கிடும் நாத கீத முறையறிந்து-விளங்கிடும்
மூச்சின் வாசி வழி தெரிந்து
நலங்கொளுமறிவுடன் நினைவுங் கலந்து அப்துர்
ரஹ்மான் கடைத்தேறவே பார் நபுஸே (இ)

---

(46) உடல் உவமான நிலை.

சக்கராத்து வருகுது—என்ற மெட்டு.

பல்லவி

பட்டம் பறந்து ஆடுது-பரவெளிதனில்
பார்க்க அலங்காரமாகவே

அனுபல்லவி

பட்டமானது ஹுவுதாம் அதில்
பிணைத்த கயர் மூலவாசியாம்
எட்டில் கட்டிட வட்ட மிட்டெழுந்
தேறிடும் வெட்ட வெளியிலே (பட்டம்)

சரணம்

1 லா-இலா ஹற-இல்-லல்லலா—இந்
நான்கும் நாற்கோணமாகவே
தூயவாயு நடுகாற்றை வாங்கிமேல்
தொனித்து கூவுது-வோசையாய் (பட்டம்)

2 வா மண்ணுகும் மிலாஹா ஜலம் யில்
காற்றல்லா நெருப்புமாகவே
ஆமென்ரு காயம் ஐ நிறக்காட்டி
அழகாய் ஜொலிச்சு மானந்தம் (பட்டம்)

3 நினைவெனுங் கை நழுகாது—கயர்
நேர் பிடியுங் கண்தூங் காது
இணையிலாது யேகாந்த மாயாடும்
எதிர்பார் சூஸ்திர வேடிக்கை (பட்டம்)

4 கலேயை-யலேயாது பதனமே—கண்
காது மூக்கு வாயுள் புதினமே
துலேயாம் சுழிமுனே—திறந்து பறந்தாடி
துலங்கும் நேரிலே காட்சியாய் (பட்டம்)

5 கருமமெனுங் காட்டில் விடுக்காதே—பட்டக்
கயரறுத்து பாழாக்காதே
ஒருமையாய் அப்துர்ரஹ்மான் மகிழ்ந்திடும்
உறுதி மொழியை வீணக்கதே (பட்டம்)

(47) உடல் உபமான நிலே.

கதர் கப்பல்கொடி தோணுதே—என்ற இசை.

விருத்தம்.

கடல்புடை சூழும் பூவிற் கருவுரு வொளிருஞான
இடல் பெறு மின்ஷானுகையெழிலுற வமைத்தரன் வல்லோன்
அடல்செறி நபிமுஹம்ம தருளிய புர்க்கான் நீதி
உடல் கப்பலுண்மை தோன்றவுதவி செய் யாரஹீமே.

பதப்பல்லவி

உடல் கப்பல் உண்மை தோணுதே
உடலிலுஜூதாகிய ஒரு-பொரு-ளிறை-திரு

அனுபல்லவி

ஷரீஅத்துக் கடலதில் தரிகத்துறை முகத்தில்
ஹகீக்கத்தெனுமாலேற்றி அக்கரை-மவு-ரி-பத்தில்
[உடற் கப்பல்)

சரணம்

1 அலிபதுபாய் மரமாய் ஆவி மூச்சுக் கயிராய்
வலிவுறும் ஈமான் சுக்கான் வணக்கம் நங்கூரமாக
விதியோகம்-தவ-மதி யோகம்-பரசுக-பாகம்-தன்
வேத-நாத முடி-வினில் (உடற்)

2 தத்துவந் தொண்ணூற்றாறும் சார்ந்த கலாசுமாறும்
நத்துமறிவு கப்தார் நினைவுமாலிமாகவும்
நாட்டமாய் கரை சோட்டமாய் வாசி ஓட்டமாய்-ஓடும்
நடுச்-சுழி-அலை-தாண்டி (உடற்கப்பல்)

3 ஐம்பத்தோர் வளைபாய்ச்சி ஐம்பூத வர்ணம் பூசி
கெம்பீரக் கொடி பேசி ஹும்மென்று சங்குவூதி
கொண்டோடும் நடுக்-கண்டாடும்-பலன்-அன்றுடம்-பல
கோண-மெல்லாஞ்-சுற்றி வரும் (உடற்கப்பல்)

4 கண்ணனூர் தலைச்சேரி கடும் பாதை தனைக்கோறி
எண்ணச்-சரக்கை மாற்றி யிணையிலாது தனித்த
ஏகாந்தம்-வீசு-மாகாந்தம்-தரு-மே சாந்தம்-பெறும்
எல்லை-சொல்-அப்துர்-ரஹ்மான் (உடற்)

—○—

(48) உடலழிவு நிலை.

அலையாத பேய் நெஞ்சமே—(சிந்து பைரவி.)

பல்லவி

நிலையாதே நாம் வாழ்வதே—தனை மறந்து
அலையாதே வுடல் தாழ்வதே—நெஞ்சே

அனுபல்லவி

1 பஞ்ச பூதமுமாய்—பிணைந்த சரீரமாய்
நெஞ்சந்தடுமாறி—நிலைவிப்போகும் (நிலை)

2 இன்ஸானின் கோலமே—ஏகாந்த ஆலமே
தன்ஷீஹை யிழந்து—தான்தடுமாறில் (நிலை)

3 ஊன்சடமெடுத்து—உழன்ற கங்கெடுத்து
பேணுமிறையருள்—போதனை விடுத்து (நிலை)

4 ரெப்புர்ரஹ்மான்—நீதி நம்மீமான்
அப்துர்ரஹ்மான்—அகத்திருள் போகும் (நிலை)

(49) உடலறிவு நீலை.

நல்லசமயமடா—என்ற இசை.

பல்லவி

ஜென்ம சாபல்ய மிதே—சிந்தை சிதய விடலாமோ

அநுபல்லவி

சேமலாபந்தரும் ஹேமமென்றட்சரம்
ஆமென்றடங்கியே நேமம் புரிந்திட (ஜென்)

சரணம்

1 ஆவி பறிபோகும்—உயிர்—ஆடி மறைந்தேகும்
சாவியாமந்திரங் கூவிக் குலாவியே
ஓவியமாகிய சாவில்லா சூட்சும (ஜென்)

2 நாதவிந் தூறியே—சட—பேதமுங் கோரியே
வேதமு போதமும்-சாதனை நீதமும்
கோதற்ற வுருவப்—யேதமிலா தொளிர் (ஜென்)

3 மாயப்பிரபஞ்சம்—சுக—காயமேதுஞ்சும்
நேய நடுக்கலே தோயச் சுடரொளி
பாயப் பெருவெளி தூயக்குணமுறும் (ஜென்)

4 ஊனுடல் பாசமே—அற்று—ஞானவீசுவாசமே
பேணும் புதக்குடி-யானே அப்தூர்ரஹ்
மானுங் கடைத்தேறி மானுக் கருளாதி (ஜென்)

---

(50) உடல் விளக்க நீலை.

ஹிந்தி வர்ண மெட்டு.

பல்லவி

அவ்வலில் குன்ஹு தாத்தே
ஆனநூரே இன்ஸானியா ஆ
எவ்வுயிர் மூல ஜோதி-இலங்கும் நூரே யின்ஸானியா

தொகையரு

1 ஹல்க்கில் ஹக்காக வுறைந்தே—கருவுருவாக் கலந்தே
மலுஹர் மஹபூபாய் மலர்ந்தே—மனுஆதமாய் சிறந்தே

பல்லவி எடுப்பு

சொல்விளங்கு சூஸ்திரமாய்-சுகானந்த மாத்தூலமாய்
அல்லாஹு வினுலமாய்—ஆன நூரே யின்ஸானியா

தொகையரு (ஆ-அ)

2 கிருபை பார்வை பேச்சு—கேள்வி யோடாடு மூச்சு
பெருகும் ரூஹினுலாச்சு—பொருந்தி ஹயாத்தாச்சு

பல்லவி எடுப்பு

திருப்பொருள் நாதசோதி—தெளிந்த நிலையே நீதி
வருமாதமெனு வீதி—விளங்கும் நூரேயின்ஸானியா
(ஆ-அவ்வலில்)

தொகையரு

3 ஆசாபாசந்தவிர்த்தே—ஆணுவமாய்கை யொழித்தே
வாசாமா கோசர மடுத்தே-வாசியிலன்பு தொடுத்தே

பல்லவி எடுப்பு

கூசாதெக் காலுங்குலவி-ஹுவானந்தத்தில் நிலவி
விசுவாசன் அப்துர்ரஹ்மான்—விளங்கும் நூரே
யின்ஸானியா (ஆ-அவ்வலில்)

(51) உடல் உஜூது நிலை.

ஏழுன்கிர்ஹே உன்கா—என்ற இசை.

பல்லவி

ஊனுடலம் இச்சடலம் உஜூதாமிக் கோலம்

தொகையரு

1 ஆதம் அமானம் யானயெய் நிதானம்
வேத ஆதினம் விதியே பிரதானம்

பல்லவி எடுப்பு

மாதந்ரம் மனி மந்ரம் மாலான இக்கோலம் (ஊனு)

தொகையரு

2 பாஞ்சனு சீரும் பதிந்துள்ளிற் சாரும்
பூஞ்சரப் பேரும் பொதிந்ததே நூரும்

பல்லவி எடுப்பு

தாஞ்சாகு முன்சாகும்—தீனெங்கு மிக்கோலம் (ஊனு)

தொகையரு

3 அறிவதை தேற்றி அகம்பாவ மாற்றி
நெறி நினவூற்றி நிலைதனைப் போற்றி

பல்லவி எடுப்பு

சரிதவமே நெறி நவமே சம்பூர்ண இக்கோலம் (ஊனு)

தொகையரு

4 ஆசையும் பாசம் அகற்றிடும் தோசம்
வாசனாய் நேசம் வைத்தல் பிரகாசம்

பல்லவி எடுப்பு

இசை அப்துர்ரஹ்மானும் அருள் தேடும் இக்கோலம் (ஊ)

(52) உடல் ஒளிர் நிலை.

மதனனே வா சிங்காரா-என்ற இசை.

பல்லவி.

புதினமே பூரண சடலம்
புதுமையறி நபுலே நாதாந்த

அனுபல்லவி

ஆதியில் நமது ஆதத்தை படைத்து
அதினுள்ளே நபுஸும் ரூஹு மூதினுன் (புதினமே)

சரணம்

1 அபுரூபயின்ஸான். ஆக்கினுன் ரஹ்மான்
அமரோர்களும் வணங்க, மெய்-துலங்க (புதினமே)

3 கமாலா யமைத்து, களிகூர்ந்தான் சமைத்து
கருவமானிதங் கொடுக்க, நா-மடுக்க (புதினமே)

4 உடலுமுயிராய், ஒளிர் தருங்கதிராய்
உஜூதாகினு னிறையே, உள்-முறையே (புதினமே)

5 பேச்சுடன் மூச்சு பார்வையுங் கேள்வி
பொருந்திய நடுக்கலேயே, தன்-னிலேயே (புதினமே)

6 இஸ்மாயி லெப்பை இதையத்தின் ரெப்பே
இதம் பெற அப்துர்-ரஹ்மான், யாது-யீமான் (புதினமே)

—✠—

(53) உஜூதின் சிறப்பு நிலை.

ஆயிதிவாலி-ஆயிதிவாலி என்ற இசை. [படம்-ரத்தன்]

பல்லவி

நூரே நூரானி—நூரே நூரானி

அனுபல்லவி

நூனே நுகத்தான யின்ஸானே
நம்மிலுஜூது மானது தானே (நூரே)

சரணம்

1 அஹதன்ன ரூபமென்ற வைக்கு மானமூலமா
அந்தர மாயாடி முழங்கு மான தூலமா
தகுந்தகமை சுடரது மூன்றுரு-நம்மிலுஜூதுமானது
தானே (நூரே)

2 உடலஞ்சு பஞ்சபூதமா யிலங்குமெங்குமாய்
உயிராடிக் கலையா தென்று மோடு மங்கமாய்
நடனம்புரி நடுநிலைநின்றே-நம்மிலுஜூதுமானதுதானே()

3 முதலந்தபந்தம் வீசு மருளான பொருளதாய்
முறையான கலிமா மல்ஹர் மூலத்தெருளாய்
இதம் பெறு மீமானிறப்பமாய்–நம்மிலுஜூதுமானது
தானே (நூரே)

4 நவகண்ட முண்டகமாய் நின்ற குன்றுதொளி
நல்லானந்தமுமா நமக்காதார வெளி
கவிலும் அப்துர்ரஹ்மானுங்கோரும்-நம்மிலுஜூது
மானது தானே(நூரே)

(54) உஜூதின் ஆதார நிலை.

சாதி என்ற படத்தில் தில்கஹான்லேஜாபுங்—என்ற இசை

பல்லவி

நமக்கு சுகமேது நாயனுஜூதல்லாது—இனி
அமுக்கும் சக்ராத்தினிலே ஆதரவில்லைபுவிமேலே

தொகையரு

1 ஆதி முன்னமானம் அளித்ததே சன்மானம்

பல்லவி எடுப்பு

நீதி தவறில் நிதானம்-நிலையாது நீள்புவிமேலே–நமக்கு

தொகையரு

2 நாதத்துளியால் உடலம் நலம்பெற வமைத்தான் சடலம்

பல்லவி எடுப்பு

வேதமுடிவின் படலம் விதிதவறுது புவிமேலே-நமக்கு

தொகையரு

3 வாழும் ரூஹின்நிலையே வழிவாரறிந்திடக் கலையே

பல்லவி எடுப்பு

பாழும் பாசத்தின் வலையே பார்த்தறிந்துணர்புவிமேலே

தொகையரு

4 வாசியின் வழிவாரை வணங்கிக்கேளும் பீர்மாரை

பல்லவி எடுப்பு

ஆசித்துகந்தே நூரை அறிந்தமல் செயும் புவிமேலே

தொகையரு

5 ஊனுடலமாயமையத்துஉள்ளுறையத்தத்துவஞ்சமைத்து

பல்லவி எடுப்பு

நீனிலம் அப்துர்ரஹ்மான் நிலைபெறத்தேடும் புவிமேலே

(55) நப்ஸை அறியும் நிலை.

தவ்ஹீதறிந்தவரே நீர் வருவீர் முனம்–என்ற இசை.

பல்லவி

நப்ஸை அறிந்தவரே தான்-ரப்பை யறிவர்
நாலாவேத நபி சொன்ன
மேலாம்பர மூலநிலை (நப்ஸை)

சரணுபல்லவி

1 இப்புவிதனிலே நாம் இன்ஸானுப் பிறந்து
இறையுஜூதறியா தீமான்மாறியிறந்து
எரியும் நரகில்—தரிபாடாகியே
இக்கதிக்காளா காமலே
மூக்காலு ஹக்கிலோர்மையாய் (நப்ஸை)

2 பஞ்சப் பூதப்பொறிப் புலனுக்கப்பாலே
பரிந்தாவி பேசிடும் பதிகாமப்பாலே
பிரிவை குருவின்—அறிவாலறிந்தே
போக்காது உயிரைக்காவி
யாக்காது ஃபதாவமலில் (நப்ஸை)

3 அறிவுநினைவுணர்வு புத்தியுமடங்கி
அலிபுக்கலையசையா திணையற்று வொடுங்கி
அதுவே சதமாய்—நிதமாயிருந்தே
அம்பரபதியானந்த
சம்பூரண ஜோதி பெறும் (நப்ஸை)

4 மூல மூக்கோணத்தில் முளைத்தெழுமாவி
மூச்சாகி ஐந்துதல முட்டிடுந்தாவி
மோசமாய் நாபித்தில்—வீசுதே வீணிலே
மெள்ளயிரு நாலில் கட்டி
கள்ளவழியுள்ளே செல்லும் (நப்ஸை)

5 நப்ஸையறிய நமக்கே விதியாச்சு
நன்மையில் தவராமல் நடக்கவிப் பேச்சு
நழுகா தொழுகும்—பழுதாகாமல்
நவில் அப்துர்ரஹ்மானும்
கவிந்துளங்குவிந்திடும் (நப்ஸை)

(56) நபிஸிற்கு உறுதி நிலை.

பிகிடிதோ பனுநேமே–என்ற இசை.

பல்லவி

நபுஸே—வணங்கா விடிலோ
நமது பவங்கள் போமா—
அனுபல்லவி
கபுஸோ டருஷேரி ரசூல்
கலிமா பழுதாய்ப் போமா–போமா

சரணம்

1 சம்பூரண இன்ஸானுய்
சகலமுணர்ந்து தானுய்
வெம்பாதுண ரீமானுய்
விளங்கப் பழுதாய் போமா–போமா (நபுஸே)

2 பத்திரண்டானப் புரவி
பரிந்தாடும் சூஸ்த்ரக் கருவி
நெற்றி நடுவூடுருவி
நின்றூல் பழுதாய்ப் போமா—போமா (நபுஸே)

3 சுனன் ஹிம் தாறுவீதி
ஷுஹூதில் நிறைந்த ஜோதி
கனல் மூட்டி நித்யம் சாதி
ஹாஹூ பழுதாய்ப் போமா—போமா (நபுஸே)

4 ஹக்குல் லுஜூதின் மாட்சி
ஹல்க்கில் நிறைந்த காட்சி
சொக்கும் சுழினை ஆட்சி
செலுத்தப் பழுதாய்ப் போமா-போமா நபுஸே)

4 ஒப்புள் புறமும் வோர்மை
உறுதி யிறைவன் நேர்மை
அப்துர்ரஹ்மான் சீர்மை
அருளால் பழுதாய்ப் போமா போமா (நபுஸே)

—★—

(57) நப்ஸை அடக்கும் நிலை.

பஹிலே ஜோழுஹப்பத்சே—என்ற இசை.

பல்லவி

நபுஸை அறிந்தோர் திடனே நாயனையறிவாருகந்தே
கபுஸோடருஷே ரி ரசூல் குர்ஆன் மொழி விதியாச்சே

அனுபல்லவி

1 தன்னை தானேயறிய தானேன் வழியை தெறிய
மின்னுங் கலிமா மூலம்-முறையது காண விதியாச்சே
(நபுஸை)

2 பொறி புலனுங் கரணம் பொசிங்கில் நடுவே நடனம்
அறிவு நினைவு அடங்கும் அங்கால் காண விதியாச்சே
(நபுஸை)

3 தனையுமினையுமில்லா-தவமே வாயுரை சொல்லா
முனை கடந்தாளி பரவும் முன்னிலை காண விதியாச்சே
(நபுஸை)

4 உயிருமுடலில் சிறக்கும் உள்ளுயிருடல் வெளி மறைக்கும்
மயிர்ப்பால மீதிலேறி மகத்துவங் காண விதியாச்சே
(நபுஸை)

5 மவுத்து முடுகுங் காலை மல்லாடும் மூச்சவ்வேளை
நவில் புதக்குடி அப்துர் ரஹ்மான் றேறல் விதியாச்சே
(நபுஸை)

---

(58) மனத்திட நிலை.

கான்தான் படத்தில்
துகோனுசே பதுலே ஹேமேரே—என்ற இசை.

பல்லவி

நெஞ்சமேபிர—பஞ்ச வாழ்வை—நிலையென்றெண்ணுதே
நிதமு மனப்—பதனஞ் செய்யும் நடு நாத மீதே

சரணனுபல்லவி

1 நமதுடலை-நாயனுதி-நளி-பெறப்படைத்து
அமல்புரிய-வதிலுஜூது மாகினன் சமைத்து (நெஞ்)

2 இன்ஸான் காமீ-லாகஹூமீ-மினைத்துருவாக்கி
தன்ஷிகுறுந்-தனிவெளியே-தான்செல்ல நோக்கி (நெஞ்)

3 உருவுக்குள்ளே-உருவினைந்து-உருவெளியாகும்
அறுதி வாங்கி-அளித்த நல்-லமானிதமாகும் (நெஞ்)

4 நுகத்தலிபு-நீண்டொளிவாய்-நடுக்கதிர் வீசும்
அகத்துள்பர—மானந்தமா—யடுத்தெதிர் பேசும் (நெஞ்)

5 மூடிவிலாவி-மோசமாகு-முனைகடந்தேறும்
படி நற்புதக்-குடிவாழ் அப்துர்-ரஹ்மானுங்கூறும் (நெ)

(59) மனந் திருந்தும் நிலை.

பணக்கார தேசத்திலே—என்ற இசை.

பல்லவி

மனதாரப்பாவத்திலே மதிமருண்ட நபுலே
மிளிர்க்கலிமா தவிலே மகிழ்ந்து செய்வாய்த்தபலே

சரணனுபல்லவி

1 ஒருதுளி நாதசக்தி வுருக்கொண்ட தென்னமாயம்
உலகெலாம் மரசாண்டு வுயிரழிந்திடுங்காயம்
உண்மையுகந்தே நன்மை மிகுந்து
ஜென்மங்கடைத்தே றின்பமறியா (மன)

2 அறிவு நினைவுமற்றி யந்தகாலை முடுகும்
ஆவிப்பிரிந்துடலம் அலக்கழிந்துயிர் போகும்
அவதியுறுமகஞ் சவதியாகியே
பவதீதினிலே கவனம் பொதிந்தே [மன]

3 ஆயிரம் காலம் ஹயாத் தயாயிருந்து மவுத்து
அடுத்து கெடுத்து விடும் அமல் செய்யவ்வல் ஹாதாத்து
அதுவே சதமாய் நிதமும் வணங்கா
சதுமாமறை நபி முதுமொழி தவறி (மன)

4 இபுலி சுக்காகஆதி யீந்த துனியாவிலே
ஏது நமக்குப்பங்கு யெடுத்தது பாசத்தாலே
இவ்வித முறையி னவ்வலே மறந்து
ஒவ்விடுமசலில் செவ்வை பெறுமல் (மன)

5 சக்கராத்தில் முகர்பான் சோதலை செய்வார் நம்மை
சாற்றும் ஆயிரங் கேள்வி ஜவாபு சொல்லிடவன்மை
யகலமூந் தோந்து அஹதா நிலையில்
சுகமுற அப்துர்ரஹ்மானுகந்தேன் (மன)

---

(60) உயிர் நிலை.

தேரிலின் ஆங்கோனே—என்ற இசை.

பல்லவி

நாதரூஹுல் குதூஸி நிலைமூலா தினஹு

அனுபல்லவி

ஆதமிக் கோலமே—ஆடும் ஆதாரமே (நாத)

சரணம்

1 அருபசுருபமாகி ஆனந்த பூர்த்தியாகி
கருவாகுங் கலிமாமுன் கலந்த சூட்சமஹ்ஹ (நாத)

2 அலிபுலாம ஹேமீம் தால்-ஐம்பூத கோலமால்
ஜொலிக்கும் சுகானந்தம் சிர்ரொளி வானஹஹ (நாத)

3 அகத்துள் புறமுமாய் அமைந்த சரமுமாய்
மஹ்சூக்கில் மாமலர் மணந்தரும் மாட்சிஹஹ (நாத)

4 சொல்லாமற் சொல்லியே துடர்திக்கிர் ஜல்லியே
நல்லருள் பெற அப்துர் ரஹ்மானுகந்தஹஹ (நாத)

---

(61) பஞ்சபூத பிரிவு நிலை.

சக்கரத்து வருகுது-என்ற இசை.

பல்லவி

நெஞ்சமே-பஞ்ச-பூதமைந்ததின்
நிலைமையானதை அறிகுவாய்

சரணுபல்லவி

1 இஞ்சொலாங் கலிமா லாயி-லா ஹா
யில்லல்லாஹஹ வென்றுரைப்பது
அஞ்சில்-லா-மண்-பல்-குத்தி-வாய்
அதின் மலக்கு ஜிப்ரீல் பேச்சதாம் (நெஞ்சமே)

2 இலாஹா தண்ணீர்-கருயீரல் கண்
எதிர்பார்வை மலக்கு மீக்காயில்
சிலாக்ய யில்நடு காற்று நுரையீரல்
சுழி மூக்கு மலக்கு யிசுராபீல் (நெஞ்சமே)

3 அல்லா நெருப்பு பித்து காதாய்
அடுக்குங் கேள்வி மலக்கிஸ்ராயில்
வல்லஹஹ தாமரைங் காயா காயம்
வழி மூலை நபி பங்கதில் (நெஞ்சமே)

4 இந்த முறையது அந்தரங்கமாம்
இருதய மிருத்தி யமல்புரி
பந்தமுறும் பாதை தவறில் வழிகெட்டு
பாழாய் போகுவாய் நிதந்தெரி (நெஞ்சமே)

5 நாவினி லடங்காத புகழுக்குரிய
நாயன் பாலோர்மை பூணவே
ஏவல் படியிதை யறிந்தமல் செய்ய
எடுத்தோதும் அப்துர்ரஹ்மானே (நெஞ்சமே)

(62) வணக்க நிலை.

அனியாயம் அனியாம்—என்ற இசை.

பல்லவி

பரிதாபம் பரிதாபம் பாவம் புரிந்து பூவிற் சாவது-பரிதாபம்

அனுபல்லவி

ஷரிகத்தின் வாசல் வழியே
சென்றிட நயங்குன்ரு மொழியே
பிரியு மனமசையா தொழியே
பூதலமீது காதலாய் வணங்கா

தொகையரு

1 பரிபூரண யின்ஷான் படைக்கோலமாகி பாரில் வந்தோம்
அறியாத புத்தியா—லாபாச மீறியே யலைந்தே நொந்தோம்

அனுபல்லவி

நெறி சாதன நிலை விசுவாசம்
நித்நியம் மமல் நத்திடா தோசப்
அறியாத வுடலது நாசம்
ஆகாமுறை கெடப் போகாதுலகில் (பரிதாபம்)

தொகையரு

2 செம்மையுற ஆதத்தைச் சமைத் தமரோர்களேசஜ்தாசெய்ய
இம்மையில் வந்து யிறை மொழி மறந்தேனே வெய்ய

அனுபல்லவி எடுப்பு

நம்மை நாமறியாத குறையே
நடுவில் ஹல்க்கானது திரையே
சம்பூர்ண தவ்ஹீதுரையே
சாரந்திகழுந் தீரந் தெரியா (பரிதாபம்)

தொகையரு

3 அறிவு நினைவினசலதைக் கண்டு அடுத்தேறும்வாசியோகம்
பிறியுமே நிதானம் பிரளாது நிறுத்த-புரியுந்தியாகம்

அனுபல்லவி

சறிவுறு சக்கராத்தின் முறுல்லை
சஞ்சலமு முழுக்கான துமில்லை
குறியா முஜூதானதினெல்லை
கூடிக் குலவி நாடித் தொழுகா (பரிதாபம்)

தொகையரு

4 ஈமானிஸ்லா மியல்பாய் நடந்து மிறையருளே கெஞ்சும்
ஆமாமென்றுறுதியா மமான வமலிற்றுஞ்சும்

அனுபல்லவி

சாமானியப் பொருளல்ல யின்ஸான்
சாரந் தவறிடிலோ ஹைவான்
ஈமான் நிலை அப்துர் ரஹ்மான்
ஈடேற்றம் பெற தேடுற் நபுலே (பரிதாபம்)

---

(63) வணக்க வழி நிலை.

படம்–அந்தமான் கைதி. இ. வாழ்வின் ஜீவன் காதலே.

பல்லவி

நாட்டமாகும் ஹஜ்விலே
நல் வணக்கமுறும் மெய்ப் நிலையாலே—தவ்ஹீதிலே

அனுபல்லவி

1 கூடும் சரத்தை மாறியே—முக்
கோணவாசல் புறியே
ஆடாதுடல் பொறியாசா பாசமும்
ஆற்றியுள் ளறிவாலே (நாட்ட)

2 வாஜிபுல் லுஜூதைக் காணவே—சதா
வாசி புகலோசை தோணவே
தேஜருஞ் சுழிமுனை தீர்க்க மாராதாரம்
தேர்ந்துளக் குறியாலே (நாட்ட)

3 ஆவியுடல் பொருள் நீக்கவே—செய்
ஆகிய பரவொளி தேங்கவே
நாவினி லடங்கா நாதனின் மகிமை
நவில் அப்துர்ரஹ்மானே (நாட்ட)

---

(64) நாத நிலை.

ஒதும் காலம் கடந்த வல்வித்தியே-என்ற இசை.

பல்லவி

நாத கீத நிலை மூல சரமே
நமை நாம் மறகா நெறி யாதராமே

அனுபல்லவி.

வேத சிலம் விளைந்த நூரே
விறிந்தொளி வளர்ந்த சீரே
ஆதம்-பாதம்-சுகம் பாரே (நாத)

சரணானுபல்லவி

1 அஹதானே ஞதியே யன்று அமரோரை ஸஜூதா
உகந்தாது முறையே நன்றென்று—செய்யென்று
உரை கூறுமின்ஸான் நபுஸே (நாத)

2 உயிருமுடலு மூடாடி ஒன்றேடிணைந்து கொண்டாடி
அயர்வில்லாதுள் விளையாடி
அரசான இன்ஸான் நபுஸே (நாத)

3 பஞ்சபூதமனைப் படலாய், பிரகாச அறிவுக் கடலாய்
தஞ்சாகா மந்திர வுடலாய்
தனியான யின்ஸான் நபுஸே (நாத)

4 அகமும் புறமும் நிறை சுகமே அடர்ந்தேறுங் கதிரதுக்
இகமாபர முச்சிகமே (ககமே
ஏகாந்த யின்ஸான் நபுஸே (நாத)

5 தவநேசாதீன விதியே தான் தவரா நிதான மதிதான்
பவ தோசன் அப்துர் ரஹ்மான்
பலனேற்று மின்ஸான் நபுஸே (நாத)

---

(65) நாத நடு நிலை.

தீப்ஜலாலே ஆஷிக்கா—என்ற இசை.

பல்லவி

வாணுள் வீணைப் போக்காதே
வாசிநடுநிலை வாழ்வே

சரணானுபல்லவி

தானுயுஜூதாய் திகழ்ந்து நிறைந்த
தனிப்பொருள் நடுநிலை வாழ்வே வாழ்வே

அனுபல்லவி.

ஆதத்திற்கமானம் அஹதாக வமைந்தஹஜூவே
நாததொனியாய் நிறைந்த தாத்தினுள்
நடன நடுநிலை வாழ்வே—வாழ்வே

சரணம்

1 வேதமுப் பொருளாய் விழைந்து தழைந்தே
விரிந்துருவாகப் படர்ந்தே
கீதமுழங்கி கதிராய்த் துலங்கி
கூடும் நடுநிலை வாழ்வே-வாழ்வே (வாணுள்)

2 நூருல் யின்ஸான் நுகத்தி னசலாய்
நிறைந்த ரகசியக் கோலம்
தேறும் நினைவு அறிவு மயமாய்
தேற்றும் நடுநிலை வாழ்வே-வாழ்வே (வாணுள்)

3 ஆவியாய் யுருப மாகிய சுரூபம்
ஆடும் சரமூலமாகி
கூவிக் குலவுந் தானுகி தனித்த
குறிப்பு நடுநிலை வாழ்வே-வாழ்வே (வாணுள்)

4 போகு முயிருங் காற்றுய் பறந்து
பிடித்து நிறுத்துள் வழியே
சோகமற அப்துர்ரஹ்மான்
சூட்ச நடுநிலை வாழ்வே-வாழ்வே (வாணுள்)

---

(66) நாத நடன நிலை.

சூரத்கர் குர்பான்—என்ற இசை.

பல்லவி

நாதசங்கீத நடனம் நாதாந்ததுடிலம்-நடத்தும் படினம்
நபி சொல் திடனம்—கலிமா மூலம் (நாத)

தொகையரு

1 அல்லாஹு அருளும் விதியாம்-அஹ்மதி ரசூல் சொல் (மதியாம்
எல்லோர்க்குறைத்த திதியாம்-இஸ்லாத்தில் திகழுங்கதியாம்

பல்லவி எடுப்பு

ஆ...இல்லல்லாஹு வி லெழுந்தமாவி-லிசைந்த சாவி-கலிமா
[மூலம் (நாத)

தொகையரு

2 முஹம்மதுர் ரசூலுல்லாஹி-முன்னூர் முடலுமாகி
அஹ்மதே உயிருமாகி-அபூரூப இன்ஸானுகி

பல்லவி எடுப்பு

ஆ...அமைந்த அறிவும் அன்னிலைவிரிவும்-அமலில் தெரியும்
[கலிமா மூலம் (நாத)

தொகையரு

3 பஞ்ச பூதமிணைந்த கோட்டை-பொதிந்திடும் மலபுழுக்
[கூட்டை
அஞ்சுநாலாய்ஓடுமோட்டை-அடைத்தேறும்ராஜப்பாட்டை

பல்லவி எடுப்பு

ஆ....அடுத்து வழக்கம்-ஆக்கியே பழக்கம்-அதுமேல்
[முழக்கம் கலிமா மூலம் நாத)

தொகையரு

4 தன்னறிவே தனக்கு வேணும்-தானடங்குந்தவமே பூணும்
அன்னெறி அருளுந்தோணும்-அஹதானென் வழியுங்
(காணும்

பல்லவி எடுப்பு

ஆ....அப்துர்ரஹ்மான்-அடுக்கும் பதமான்-ஆதார யீமான்
[கலிமா மூலம் (நாத)

(67) நாத கருநிலை.

ஆசை கொள்ளும் மீசையுள்ள—என்ற இசை.
படம் - வாழ்க்கை.

பல்லவி

ஆதியருள் சோதியுள்ள ஆதம் பாதம் பார்த்தியா—திரு
ஆதம் பாதம் பார்த்தியா

அனுபல்லவி

அதுதானே பூரணம்...நூர்
அமல் புரியும்-அஹதொளி விரியும்
அருள்-நிலை தெரியும்—நப்ஸே (ஆதி)

சரணம்

1 புவிமீதில் மேலாம்பர பொரு ளின்ஸாஞ்குமே
இறை...பொருந்து ஜுதாகுமே
கலை...பொக்கிஷ மதாகுமே
பொங்கு மருளானந்த-பூர்விகத் தீஞ்குமே
(அதுதானே பூரணம்) (ஆதி)

2 முக்கோண வக்கினியை மூட்டு மாங்காரமே
முனை....புக்கிடுமோங்காரமே
ஹூ...சொக்கிடும் ரீங்காரமே
சொல்லாமற் சொல்லும் சூட்ச-எல்லையி லானந்தமே
(அதுதானே பூரணம்) (ஆதி)

3 ஆறுதாரங் கடந்து அடந்தேறு வாசியே
யிணை...அற்ற பாசை பேசியே
நடு...அந்த பந்தம் விசியே
அம்பலப்பதி செல்ல அருள் தரும் தேசியே
(அதுதானே பூரணம்) (ஆதி)

4 மூச்சுடரு மொன்றுகி மூனைந் தேறுந் தீர்க்கமே
நம் . முழுக்கறு மார்க்கமே
மூ...மின்பதவி யேற்குமே
முத்தி முஹம்மதிய்யா சித்தி தந்து காக்குமே
(அதுதானே பூரணம்) (ஆதி)

ஆட்ட மோட்டந் தேட்ட மற்று
அமல் செய்து காணவே
அப்துர்ரஹ்மான் பூணவே
(அதுதானே பூரணம்) (ஆதி)

---

(68) விந்து நிலை.

தந்தானந்த பொருள் தாத்து சிபத்து—என்ற இசை.

பல்லவி

விந்தானந்த வழியஹது உஹது
வாஹிதது திடனே

அனுபல்லவி

சிந்தாத முறை சுஹ்ரூது சுஜூதிற்
சேர்ந்து கொள் கடனே

சரணம்

1 நுகத்து மூன்று மலிபாச்சு
நிலையாக நடுலாமீ மாச்சு
மகத்துவ சுருபமாச்சு
முஹபத்தி லிறை முடிவாச்சு (விந்தா)

2 முப்பொருள் முடிந்த உடலம்
முஹம்மதிய்யா சூரத்து சடலம்
எப்பொருட்குகந்த படலம்
இணையற்றமல் செய் யடலம் (விந்தா)

3 திருக்கலி மாத்திரண்டுருவாய்
திகழுமீமுள்ளே கருவாய்
பெருக்குப் பேரொளி விரிவாய்
பேரானந்தங் கொண்டு தெரிவாய் (விந்தா)

4 சூட்சிய மறிவது சுல்பில்
சுகம்பெறச் சொல்வது பிஸ்மில்
காட்சி துலங்குங் கல்பில்
கருத்தை யுணர்ந்து பார் தில்லில் (விந்தா)

5 நபுஸை யறிவதெளிதல்ல
நாயன் பரிமானதை வள்ள
கபுஸோடர சேரினோர் சொல்லே
கருத்தோடமல் புரி செல்ல (விந்தா)

6 அல்லுபகலியதைய மடங்க
அல்லாஹு விலசையாம லொடுங்க
சல்லல்லா நபி சொல் விளங்க
சாற்றும் அப்துர்ரஹ்மான் துலங்க (விந்தா)

---

(69) தன்னிலை.

வருந்தாதே மனமே நீ—என்ற இசை.

பல்லவி

தளும்பாதே தயமே நீ—தனைத்தானறியத்

அநுபல்லவி

அளும்பான துனியாப் பொய்-அறிவாய்த் தெரிய

தொகையரு

1 ஆதத்திற் கமானம் தந்து
அனுப்பினு னவனுகந்து
நீதம் பிசகாது நடந்து
நேர்மை நேர் பூண்டிருந்து (அளும்)

தொகையரு

2 நப்ஸுக் குல்லில் வெளியாகும்
நின்றுடுங் காட்சியாகும்
இப்லீஸின் குணக் கேடாகும்
ஏகும் நரகிற் கீடாகும் (அளும்)

தொகையரு

3 அமரோர்கள் சஜூதः செய்யும்
அபூரூப இன்ஸான் மெய்யும்
நமது கண்ணியமுந் தொய்யும்
நிலைமாரு துறுதி வைய்யும் (அளும்)

தொகையரு

4 மருட்டிடும் மாய்கையாலே
மதிபிரளா தன்பாலே
வெருட்டியே வீணையப்பாலே
வணங்குந் தீன் முறையைப் போலே (அளும்)

தொகையரு

5 தாகமோக சோகமாற்றி
தனதகம் பாவந் தூற்றி
ஆகமநெறியைப் போற்றி
அப்துர்ரஹ்மான் தொண்டாற்றி (அளும்)

---

(70) தன் கலை நிலை.

எங்கும் நிறைநாதபிர்மம்—என்ற இசை.

பதப்பல்லவி

தங்கும் நிறை நாதஸ்ரூபம் தங்கும்
தன்னைதான் தனித்தோர் தபோ

அனுபல்லவி

ஓங்காரமுள் ரீங்காரமா தாங்காதெழுமீறி
தேங்கா தின்பந் தருஞ்ஞான தூங்கா நிலைதேறி
[தங்கும் நிறை]

சரணம்

1 நாலா ரான மூல மந்திர தூல நடுச்சோதி
மேலாம் பத மிளிருமோன நூலேணியாம் வீதி
[தங்கும் நிறை]

2 வாஜிபுல் லுஜூதா யேகம் பூஜித மாயாடி
தேஜூறு மின்ஸானின் கோலம் வீசுங்கதிர் கோடி
(தங்கும் நிறை)

3 பாச பந்தத் தோசந் தொலைய ஆசுபத வாசி
நேச விசுவாசமாகில் பேசும் பிரகாசி
(தங்கும் நிறை)

4 ஆடுமுடல் நீடுமானந்தம் பாடுமுயிர் கூவி
நாடுற் அப்துர்ரஹ்மானிதையத்தூடுறை சஞ்சீவி
(தங்கும் நிறை)

---

(71) தன்னை ஆராயும் நிலை.

துனியாவை நம்பாதே—என்ற இசை.

சதமாமோ இத்துனியா சதா அமல் செய்தனியா

தொகையரு

1 நிதமாமதியை யிழந்து-நீதி நபி சொல் தவிழ்ந்து
அதமாயனியாயம் புரிந்து-அடங்கிடுமாவி பறிந்து

பல்லவி எடுப்பு

சதமாம் சக்ராத்தினிலே-சஞ்சலமா மென்மேலே
இதம் பெறதிக்ராலே-இசைந் தொழுகாதாலே (சத)

தொகையரு

2 பனித்துளி தந்தை நாதம்-பரிந்தன்னை கெற்பசூதம்
இனிதா ஈறைந்து மாதம் இன்ஸானுய் வந்தநீதம்

பல்லவி எடுப்பு

கனிவுறு மதலையாகி-காலைப்-பருவமதாகி
பிணிமூப்பு சாக்காடாகி-போகாதே பேமானியாகி (சத)

தொகையரு

3 தன்னைத் தானே மறந்து மோசம்-தனதகமடித்துபாசம்
வினைமவுத்தடருந்தோஷம்-வந்திடில் உடலம் நாசம்

பல்லவி எடுப்பு

கனதனத்தோர் கூடி-கழுகி கபனை சூடி
முனந்தொழுத மண்மூடி-மகிழ்வாரன்பு நீடி (சத)

தொகையரு

1 முன்கர் நக்கீர் வருவார்–மன்ரப்புக்கவென பகர்வார்
அன்னேர் வேதனை புரிவார்-அனல் நரகத்திலெறிவார்

பல்லவி எடுப்பு

நன்மொழி பகர யீமான்-நிறப்பமாக்கும் ரஹ்மான்
சொல்முறை அப்துர் ரஹ்மான்–சுகம் பெறதுணை
(செய் சுபுஹான் (சத)

---

(72) தன்வாசி நிலை.

தஸ்லீமக்கி ஹோயா-என்ற மெட்டு.

பல்லவி

திருவருள் ஹுவில் துடர்ந்தேதறி—தன்
நிலைமை யறியலாங் களிகூறி

அனுபல்லவி

1 அரும் பெரும் பொருளா மஹ்மதியா
அருள் நடுநிலை நூர்முஹம்மதியா
கருக்கலிமா ஹுவில் கலந்தேதறி—தன்
காரியங் கொள்ளலாங் களிகூறி (திரு)

2 ஆயிரத் தெட்டிதழ் விரிந்திடும் பூ
அகிலாண்டங்கம ழிறையோன் ஹபீபு
தோயுங் கலிமா ஹுவில் துடர்ந்தேறி—தன்
துரியா தீதங் காணலாங்களி கூறி (திரு)

3 ஆடும் சுரூபமைம்பத் தோரர்ட்சரம்
அதினுள் மறைந்தாடிடும் வாசி சுரம்
தேடும் கலிமா ஹுவில் தினந்தேறி—தன்
தீர்க்கந் தெரியலாங் களிகூறி (திரு)

4 நாத கீத முளங்கும் நடுவீதி
நடனம் புரிந்தேதுமேல் பரஞ்சோதி
பேதமில்லா ஹுவைப் பிடித்தேறி—தன்
பிரபல்யங் காணலாங் களிகூறி (திரு)

5 தாமரை ஆகாயத் தொனி மூலம்
தனித்தேகி தாண்டவமாடி வருங்கோலம்
நேமனப்துர்ரஹ்மான் மொழி கோறி—தன்
நேர்மை யுணரலாங் களிகூறி (திரு)

நூல் ஆசிரியரின் மாணவராகிய

S. M. அஹமது H. M. V. ரிகார்டில் பாடிய பாட்டு.

—★—

(73) வாசிபூர்வ நிலை.

வீட்டுக்கு சாப்பாட்டுக்கில்லை—என்ற இசை.

பல்லவி

வாணாளைப் பேணுதடா வீணிலாக்காதே
வல்லோன் விதி மறக்காதே—வாழுமுயிர்
துறக்காதே—நபுலே

சரணுபல்லவி

1 காணுதருத்தானுகினேன் ஹல்க்கதைப் படைக்க
ஹக்கெதிராய் யருவாஹி லமானிதங் கொடுக்க
கலிமா—கதியருளடுக்க
கடமை-யாக்கினை னடக்க—நபுலே (வாணாளை)

2 நூருவின் ஸான் பேருங் கொண்டு—நிலமிசைவந்தே
நீதியற்று துனியா பாசம் நாளுமே புரிந்தே
நல-மறியா-மற்றிரிந்தே
நிலை-தவராதே தெரிந்தே—நபுலே (வாணாளை)

3 கலிமாத்தொழுகைநோன்புஸக்காத்ஹஜ்ஜைபொறுத்து
கனம்பெருகு மீமானறில் கருத்ததிலிருத்து
கல்பிற்—கதிரொளி பெருத்து
கதி—சேர்ந்திடுவ் கருத்து—நபுலே (வாணுலை)

4 இறைவனிந்த தரையில் நம்மை யேதுக்கனுப்பினன்
இதிலுஜூ துணர யின்ஸான் காமீலாக்கினன்
இணை—யறுக்க வாக்கினன்
எழில்—பெறவே நோக்கினன்—நபுலே(வாணுலை)

5 எவ்வஸ்தினு மவ்வலான யேகாந்த திரேகம்
எல்லைகண்டு செல்லும் சூட்சத் தேதறுமெய்யோகம்
எப்—போதுமா சுகம்
யிரங்—கும் பிரவாகம்—நபுலே (வாணுலை)

6 நானில மீதினிலீமான் நாட்டந் தப்பாதே
நவிலும் புதக்குடி வாழ் அப்துர்ரஹ்மானிப் போதே
நினை—வறிவுடன் யாதே
நிலை—நிருத்துள மீதே—நபுலே (வாணுலை)

(74) வாசி வழி நிலை.

கருணை மூர்த்தி காந்தி மஹாத்மா—எ. இ.

பல்லவி

மனவாசி மூல மாறுமலே நாமே—சதா
மாதவம் புரிகுவோமே—மாசுபோமே-மாசுபோமே

சரணனுபல்லவி

1 தானமாகுந்தவ்ஹீதில்-தன்னகம் பொருந்தியே
தவந்திருந்தியே—கரு
மோனமாமுக் கோண வட்டமே-மார்க்கத்திட்டமே
மார்க்கத்திட்டமே (மனவாசி)

2 சூட்சமா நடுச்சுழி-திறந்து செல்லுமெல்லையே
சொல்லுமில்லையே—அங்கு
ஆட்சிக் கதிர் காட்சிக் கம்பமே-அருளின்பமே
அருளின்பமே (மனவாசி)

3 ஏகாந்த மிகுந்திணை-யில்லாது வீசும் ஜோதியே
இவ்வாற் நீதியே—உடல்
சாகாதிட மோகமாகுமே-செல்வமாகுமே
செல்வமாகுமே (மனவாசி)

4 நீங்கிடாது உந்தியின் கீழ் நின்றெழுமோங்காரமே
பாடும் ரீங்காரமே—அதின்
பாங்கு பெற அப்துர்ரஹ்மான் பேணும் யீமான்
பேணும் யீமான் (மனவாசி)

---

(75) வாசியோக நிலை.

சிவயோகம் சிவயோகம் என்ற இசை.

பதம்பல்லவி

தவயோகம் தவயோகம் பர
தரத்தினில் திரத்துட லுருத்துயிர் கருத்துறும்
நவமாகும்-நவமாகும்

அனுபல்லவி

அவமறவுடலினை அணுமசையாது
அடர்பவத்துடரினை யறுத்து தப்பாது
கவனமும் கெவுனமுங் கருதி ஓயாது
ஹக்குல்லு ஜுதான ஹாமிமில்யாது
தவயோகம் தவயோகம்

சரணம்

1 .மூல முக்கோண வாசல் ஏறி—அங்காலிருக்கும்
கோலக்குண்டலிபதி தேறி—சுகானந்தமாய்
சால வோங்காரகம் பத்தூறி—அதையெழுப்பி
பாலங் கடத்தும்பலன் கோரி—வெள்ளிலிபாக
ஓலமிடும் வாசி வுயிர்நிலைக்கேகும்
ஒன்றுபட நின்றொளி தருந்தேகியாகும்
காலமுந் தவறாது காட்சியுமாகும்
ஹல்கெனும் திரைக்குள்ளே ஹக்கெதிராகும்
தவயோகம் தவயோகம்

2 தன்னைத் தானேறியச் சொன்ன மொழி யுணர்ந்து
அன்னை தந்தையதற்கு முன்ன யிருந்தவகை
பின்னையுருவதாகி லென்ன இரகசியம்
ஒன்னை மறந்தோர்மையில் மன்ன ஒதினனிறை
கண்ணில் கலந்த ஒளி காரணங்கண்டு
கருநிலையுரு பெறக் கருதியே தொண்டு
உன்னியே கிளம்பிய ஓசையிலண்டு
உஹது முஹம்மதியா ஒளிவதிலொண்டு
தவயோகம் தவயோகம்

3 வேதமுடிவிலான சூட்சியம்—விளங்கினோர் பால்
சாதனை செய்து கேளும் சாட்சியம்—அவருரைத்த
போதனை தவறாது ஆட்சியம்—அல்லும் பகலும்
வாதனை தீர்த்திடுங் கடாட்சியம்—தவறிடாது
ஆதரபியுள்ளு ஜுதாகிய ஆதி
அந்தரங்கமிதாலாகிய சேதி
ஓதியவறிவுக் குள்ளொன்றுன சோதி
ஒன்னுக்குள் புகுந்துற வாடுதல் நீதி
தவயோகம் தவயோகம்

4 கலிமா வாய் சொல்லினுற் போதாது—கருதி சற்றும்
சலியாபனு பக்காவின் மீது—விளக்கமாகி
ஒலிமார வுலியாக்கள் சாது—நடத்தி நேர்மை
வலியோனருள் தப்பினதேது—ஆசை யகற்றும்
சொலிக்கும் செய்யிது முகம்மது புகாரி
சீர்பாதம் பணிந்தருள் தெரிசித்த நூரி
களிகொளும் முஹம்மது இஸ்மாயில் நேரில்
கருதிடும் அப்துர்ரஹ்மானுங்கோரும்
தவயோகம் தவயோகம்

(76) வாசி நடன நிலை.

வேடிக்கை கூத்தாடி—என்ற இசை.

பல்லவி

அம்பலக் கூத்தாடி தானுடும் ஆனந்தம் பார்த்தியாடி

அனுபல்லவி

கும்மென்று தொண்ணூற்றாறுற் கோணல் நிமிர்த்தியே
நம்முள் நடுவீதி-நாட்டிய கோட்டையுள் (அம்பல)

சரணம்

1 அங்கமிருப்பிடமா-மூலகந்-தங்குந் தரிப்பிடமாம்
எங்கு மலையாதிருத்த—பொருத்தமாய்
தங்க சலங்கையும் சங்கிர்தம்பாடியே (அம்பல)

2 ரெட்டைக் காலெட்டடியே-மும்மூல பட்டணம்
(நெட்டடியே
மூட்டையுள் குஞ்சது மூன்னுறல் போலவே
எட்டிதல் ஓட்டிட வட்டபூச் சூடியே (அம்பல)

3 நாக்கு மூக்குக்காது-கண்ணின் நடு தாக்கி நோக்கும்யாது
வக்காலுரைக்க வகைசொல்ல யேலாது
தீக்காலே நீக்கியே—ஜோக்காய் ஜொலிக்கவே (அம்)

4 அழுக்கில்லாதுரையே-துடக்கு-முழுக்கில்லா முறையே
பழுக்க காய்ச்சிய பசும்-பொன்னேசையாய்
மொழிக்கும் விழிக்கும் சுழிக்கப்பாலிலே (அம்பல)

5 ஆருக்குத்தான் கிடைக்கும்—தெரிசனப் பேருக்கருள்
[படைக்கும்
நேருக்குக்காண நவில் அப்துர்ரஹ்மான்
சீருக்கும் பாருக்கும் யாருக்கும் பொதுவே (அம்பல)

---

(77) நித்தியானந்த நிலை

சுயராச்சியமதிக தூரமில்லை-என்ற இசை.

பல்லவி

நித்தியானந்த முத்தி நிறைந்து சிறந்தொளிரும்
நீதி பெறுங் கலிமா நிலையறிவீர்
தத்துவ முங்கரண சகல வாசாபாசமுந்
தவிர்ந்து ரூஹுல் ஹுதூலின் றலந் தெரிவீர்

அனுபல்லவி

1 அந்தரத்துள் நின்றூடும் அரூபங் காணு சுரூபம்
அலக்கழிந்து யெலுர்பா யாகலாமா
தந்திரமாயிருந்து மந்திர மதை மூட்டி
தன்நிலைமை காணுமல் போகலாமா (நித்தியான)

2 ஹுவுமீமுங் கூடிய குதரத் தெனுங் கோட்டையுள்
கொஞ்சிக் குலாவும் வாசிக்குறிப்பறிந்து
நாவில்லாமலே யோதும் நாத சங்கோசை தொனி
நலம்பெற தெரிகுவீர் பலனறிந்து (நித்தியான)

3 இன்ஷான் காமீலாகியே—யேகசுக பாகமாய்
எழுந்த கோல மேகாந்த பவுனமதாய்
தன்வீகில் தேறி தய்யூபான திருக்கலிமா
தன்னுள் தானே முழங்குமானந்தமாய் (நித்தி)

4 தன்னையுந் தலைவனைத் தானறியா திருந்தால்
தரணியில் மறணித்து சாவ துண்மை
அன்னை யம்பிகையருள் தேடும் புதக்குடி வாழ்
அப்துர்ரஹ்மானின் சொல் அறிவீர் நன்மை (நித்தி)

---

(78) மெஞ்ஞான நிலை.

படம் சிந்தாமணி. **இசை-மாயப்ரபஞ்சத்தில்.**

பதம்

நாதப்ர காச மெஞ்ஞான நிலை எல்லை
நல்கிக் கொண்டாடி நின்றுடு முயிர்க்கலை

சரணானுபல்லவி

1 சதமெனச் சுழிமூனை திறந்து சென்றேறி
சார்ந்திடில் பவமெலாம நீர்ந்திடுமாமே
சும்மாவிருந்து சுரணை கெடாமல்
சூட்சியமாக காட்சியிற் கூடி
சுத்த மிகுத்த சுகானந்தத்தில் (நல்கிக்கொண்டாடி)

2 பஞ்ச பூதங்கள் அஞ்சுமே கூடி
தஞ்சமெனவே கெஞ்சுமே வாடி
கொஞ்சிடுங் ஹரீ ரஞ்சிதம் பாடும்
துஞ்சியே நிதமும் அஞ்சியைக் கடைமுர்
தேர்ந்து அப்துர ஹ்மானருள் பெறவே (நல்கிக்)

---

(79) எகின் நிலை.

அடுக்குமல்லீகை தொடுக்கு மெத்தையிலே-என்ற இசை.

பல்லவி

அறுதி எகின் உறுதி வேணுமே
அதன் பிரிவை
ஆராய்ந்து-நிலைபருளை காணுமே (அறுதி)

அனுபல்லவி

அதுவே நாலாம் விதியே மேலாம்
கதியின் பாலாம் மதியின் காலாம் (அறுதி)

சரணம்

1 இல்முல் எகின் பிரிவை யறிவது—இறையோனிரசூல்
எடுத்தோதியதின் கருத்தை தெரிவது—நலம்
இதயமிருத்தி—சிதையா பொருத்தி
பதையா நிறுத்தி—கதிபெற மனம் (அறுதி)

2 ஐனுல் எகினை பொருளது-கண்கண்ட ஜோதி
அடர வீசி துடரும் அருளது—இதை
அடைப்பதும் வெளி—வெடிப்பதும் பவந்
துடைப்பதும் பலன்—கிடைப்பதாகிய (அறுதி)

3 ஹக்குல் எகீன் கல்பு காட்சியே—அனைய்யத்தை
கனைந் தொன்றுக கலந்த சூட்சியே—நிதம்
கண்டவர் வெளி-விண்டிடாரிதை
ஒண்டுதலுற—நின்றவர் கதி (அறுதி)

4 கமாலுல் எகீன் நான்காவது-நிலையானந்தம்
ஹல்கும் ஹக்கும் கலந்த கலையது—பொருள்
கருதி சொல்லிடா-சுருதி தந்திர
பொருதினவர்க்கு-யிறுதியாகிய (அறுதி)

5 அறிவு நினைவு உணர்வுடன் புத்தி-ரூஹானிபங்கு
ஆகுமிதனை யகற்றிடில் முத்தி—இதை
அஹ்மதர் சொன்ன-சுகமுறை அப்துர்
ரஹ்மானேதிய-தகுமாகுமுறை (அறுதி)

(80) துணை நிலை.

திவான் பஹதூர் படத்தில்

காதலை இழந்த பாவிபோல யான் பூவினில் வாழ்வேனே-எ.இ.

பல்லவி

ஆதியை யுணர்ந்து நீதி வருந்தியே
அமலது புரிவேனே
தீன் அருளது பெறுவேனே
வீண் அவதிக்குள்ளாவேனே

தொகையரு

1 தந்தை கருநாதம் தன்னுளே பொங்கி
தாய் மனை கோலி சென்று
விந்துடனிணைந்து விளையாடி முடிவில்
வருமுருவான தின்று-பூவில்

பல்லவி எடுப்பு

பந்த பாசமே பற்றிய பசியும்-மன
பல துன்பபடர் நீக்கி (ஆதி)

தொகையரு

2 பால பருவமும் பாலிய வுருவமும்
பெற்று-பவ மோகத்தாலே
காலமுங் கடத்தி கதிமுறை மறந்து
கவர்ச்சியின் தாகத்தாலே—பொய்

பல்லவி எடுப்பு

சிலமா முயிரின் சிறப்பதுஞ் சிதறி-நம்
சீர் குலையா தினமே (ஆதி)

தொகையரு

3 அல்லா அமானம் அளித்த வெகுமானம்
அலக்கழித் தவதி பூண்டு
உல்லாச மாய்கையிற் யுழன்றுடல் நீர்ந்து
ஓடுங்குஞ் சுவாசம் விண்டு உளண்

பல்லவி எடுப்பு

சல்லல்லாஹுவின் ஷரகதை தழுவி மெய்
சாத்வீகமாயிருந்து (ஆதி)

தொகையரு

4 கலிமாவின் கோலம் காட்சியினுலம்
கமாலான இன்ஸான் நிலை
வலியோன் விதி தன்னை வணங்க வெளியாக்கிய
வருசை பெறும் ஹுவின் கலை செலும்

பல்லவி எடுப்பு

சொலிப்புற அப்துர்ரஹ்மானீடேற—நிதம்
சதா தொழுவாய் நபுலே

———

(81) மனதோர்மை நிலை.

வழி மறித்திருக்குதே பலை போல-ஒரு—என்ற இசை.

பல்லவி

மனம் பதைத் திழுக்குதே—புவிமேலே—தவ
மகிமை யறியாத தாலே

அனுபல்லவி

1 தின மிறையை மறந்து தியங்கி மயங்கி தயம்
அனல் படுமுடலாக அவதிக்காளாக வீணுய்—மனம்

2 வேத முறைம்மதரின் விதி சரகைப் பேணுமல்
ஏத முறுமுவ்வாசை-யிருளில் மதியுழன்று—மனம்

3 ஈமானி சுலாமதி னியல்பை கல்பிலுணரா
பேமானியாயுலகிற்-பிதற்றித் திரிந்தே கெட—மனம்

4 நீதியகத்திருக்க நிலைதவறி பொய் பாவ
தீதி லைதிகொள-தயங்கித் தடுமாறி—மனம்

5 ஏகனே யுனதருள் என்றுங்குன்ரு தருள் செய்
தாகன் அப்துர்ரஹ்மான் உன்னையறிய தினம்—மனம்

(82) முஷாஹிதா நிலை.

அறிவாய் நீ நெஞ்சமே—என்ற இசை

பல்லவி

தெரிவாய் நீ நெஞ்சமே—தன்நிலைமை
தெரியார்க்கேது தஞ்சமே முஷாஹிதா
செய்தோர்க்கருள் மிஞ்சுமே-மிஞ்சுமே-மிஞ்சுமே....ஆ

அனுபல்லவி

1 குறிப்பொன்றில்லா கன்ஜூல் மஹ்பியா
குதித்தெழும் சிர்ரில் குதரத்து நூரு
விரிவாய் மவ்ஜூது மல்ஹராகியே
வேதமுடிவான-நாத நடு நிலை (தெரி)

2 திருநுகத்து திரண்ட முச்சுடர்
தேரும் லாமலிபான தொன்முய்க்கூடி
வரும் ஹுமீமுல் வாசியில் வீசியே
வாணு லறிமுன்-வீணுய் போகாமலே (தெரி)

3 இன்ஸான் காமீலான சூரத்தாய்
எழுந்த ஜோதி ஏகாந்த மவுனமாய்
தன்ஸீகுந்தஸீ பீகுந் தாஞகி
தன்னுல் நின்றுடுங்-குன்னென்ற கோட்டையுள்
(தெரி)

4 முன்னுன்கு மீராறு ஹருபாகி
முழங்குங் கலிமா மூல தொனி யோங்கி
பன்னுளும் பறிந்தேதகிடுஞ் சூட்சியப்
பாங்கதை நாடிக் கண்-தூங்கி விழாதேறி (தெரி)

5 எழு மூன்று சிபத்தா யெழுந்தூல
மிணைந்தறிவு நினைவிலூடாடி
பழுதில்லா திக்கிர் ஜல்லியிற் சொக்கியே
பாக்கியம் பெற்றிடுர்-மூக்கின் முனை சென்றே (தெ)

6 வாசம் புவில் வகித்த வாறதாய்
வாழுமுயிரு முடலும் பேரதாய்
பூசித்தப்துர் ரஹ்மான் சொல் சீரை
போற்றிப் பாரும் வாயை-தூற்றித்திரியாமல் (தெரி)

(83) ஆலோசனை நிலை.

தாசானு தாசனைக் காவா-என்ற இசை.

பதம்

பூதலமீதிந்த வாழ்வு போதாது புத்தி தாழ்வு-போதாது
புத்தி தாழ்வு

சரணானுபல்லவி

ஆதமிக் கோலங்கொண்டு ஆடுமுடலம் பூண்டு
நாதநீதியைக் கண்டு நாளும் புரிவாய் தொண்டு
நடுநிலை தேடாவிடில் தாழ்வு
நடுநிலை தேடா விடிற்தாழ்வு-தாழ்வு

சரணம்

1 காத்துசிபத்துமாகி தானேதான் சருவாகி
காத்திர ரூபமாகி கலிபாவே தொனியாகி
கலந்த விதி தவறில் தாழ்வு
கலந்த விதி தவறில் தாழ்வு தாழ்வு (பூதல)

2 ஐம்பத்தோரட்சரமாய் ஆடும் நாகத்திதமாய்
ஹூம்மென்ற ரலிபதுமாய் கோடிப் பிரகாசமாய்
கூவுமுறை தவறில் தாழ்வு
கூவுமுறை தவறில் தாழ்வு தாழ்வு (பூதல)

3 தன்னிலையை மறந்து தன்னையறியா திருந்து
முன்னிலை மெய்யுணர்ந்து மோக யோகம் புரிந்து
முன்மேல் கடக்கா விடிற்தாழ்வு
முன்மேல் கடக்கா விடிற்தாழ்வு தாழ்வு (பூதல)

4 தன்னையறியபருள் தனியவனின் மறை சொல்
நன் அப்துர்ரஹ்மான் தில் நலன்பெற நபுஸே செல்
நிதமுந் தொழுகா விடிற்தாழ்வு
நிதமுந் தொழுகா விடிற் தாழ்வு தாழ்வு (பூதல)

(84) மறதி நிலை.

படம் - வனமோஹினி. இசை — அலைமோதுதே.

பல்லவி

பறிபோகுதே-பறிபோகுதே பரிதாபமாக உயிர்
பறிபோகுதே

அனுபல்லவி

அறியாத புத்தியால் அவ்வலை மறந்து
அறிவு நினைவு மாறி-சருகி சக்க-ராத்தில்-வீணாய்

சரணம்

1 பூரண இன்ஷான் பேருடல் பூண்டே
பூரண மறியாது தாரணி மீது
பூர்வீக முறை-யரியாமலே யாது (பறிபோகுதே)

2 ஆதியு ஜூதா-யாக்குமிக் கோலம்
ஆதிமுதல் மூல நீதி யிழந்தே
ஆதி வீதி மறந் தா விகழிந்தே (பறிபோகுதே)

3 நூரொளி ரூஹு நிலைகொண்ட கலையே
நூறுதே பேருருசீ ருருமாறி
நீருதுடல் மூச்சு-வாருது மீறி (பறிபோகுதே)

4 பாதகந் தீதும் பற்றிய தோஷம்
பேதகமில்லாது நீதகமாக
பாடும் அப்துர்-ரஹ்மான் சுகமாக (பறிபோகுதே)

---

(85) அறிவுரை நிலை.

III-ம்-உலகம். பல்லவி இசை-விதியீதோ.

மதியீதோ மருள் நெஞ்சே
கதியீதென்றறியாயோ
விதியாகுங் கலிமாவின்—வழிபாடறியா
வேதனையேனே அறியா வேதனையேனே—அறியா

அனுபல்லவி

1 சதிமான மனமாயை-மருட்டினாலே
சிதையாதுளங் கூடி
ஆதியின் பவானந்த சீர்-அமல் செய்
அருள் பெறலாமே-மகத்வ
அருள் பெறலாமே (மதியீதோ)

2 அவ்வல் ஹுவிலடர்ந்தேதறி அசலோர்மை
ஒவ்வியுடல் வெறுத்து
செவ்வை பெருக தஜல்லியத்திற்-கலந்து
சொக்கி மகிழ்வாயே-நிதமும்
சொக்கி மகிழ்வாயே (மதியீதோ)

3 உயிர்நிலையில் உணர்வாகி-ஏகாந்தமாய்
கயிர் பிடியுங் கருத்தாய்
பயிர் செய்யுஜூதிற் பலனையடைந்தே-பூரண
பதவி பெறுவாயே-இறையருள்
பதவி பெறுவாயே (மதியீதோ)

4 அல்லாஹுவில் ஆஷிக்காகி-ஆனந்தமாய்
எல்லா மொழிந்தோர்மை
வல்லானருளில் அப்துர்ரஹ்மான்-நிதமுமே
வணங்கி இணங்கிடுவாய்-பலன் பெற
வணங்கி இணங்கிடுவாய் (மதியரிதா)

(86) உலக வெறுப்பு நிலை

லைலாமஜ்னுவில் இகவாழ்வினில் காதல்—என்ற இசை.

பல்லவி

உலகாசையின் ஆவல்
சதா தேடிடில் ஆகுமா
பாவம் போகுமா

அனுபல்லவி

1 உயிரானந்த மாடியதாலே
உடலொளி தரும் தரம் போலே
ஓர்மை நிலையினாலே
சீர் பெற லாமே ஓ...ஓ....ஓ...
நேர்பெறலாமே (உலகாசையின்)

2 தசநாத சங்கீர்தம் பாடி
தனிவழிகுகை தனிலோடி
தனுனதிலே கூடி
பேணியே தேடி ஓ...ஓ...ஓ...
உனியே நாடி (உலகாசையின்)

3 ஹல்கானதிலே யுஜூதாகி
ஹக்கானது கமாலாகி
காட்சியின் குருவாகி
கலையானதுமாகி ஓ...ஓ...ஓ...
நிலைகுறியாகி (உலகாசையின்)

அடர்வாசா பாசந் தூற்றும்
அப்துர்ரஹ்மானும் சாற்றும்
அறிவதிலே தேற்றும்
அமுதம் ஊற்றும் ஓ...ஓ....ஓ...
அமலில் ஏற்றும் (உலகாசையின்)

(87) ஒன்றுதலாகும் நிலை.

வாயால் சொன்னலே போதுமா-என்ற இசை.

பல்லவி

நாவால் சொன்னலே போதுமா
நாயமாகுமா—மதி

சரணனுபல்லவி

1 ஏவல் விதியை நீக்கியே
யிறை யருளைக் காலியாக்கியே
ஆவி யிழக்காதுள் தாக்கியே
அமல் செய்யா விடிலாகுமா (நாவால்)

2 தனைத் தானறியக் கடமையே
தனித்தோர்மை யாகா மடமையே
வினையற தேடில் திடமையே
வணங்கிடா விடிலாகுமா (நாவால்)

3 அஞ்சு மாறுந் தெரியாமலே
அல்லா ரெசூலை யறியாமலே
கொஞ்சுங் ஹுவைக் குறியாமலே
கொண்டாடில் பலனுகுமா (நாவால்)

4 வாக்கு மனது வேறதாய்
வணக்க மினக்கந் தூறதாய்
ஆக்கைக் காதாரம் நூறதாய்
ஆனந்த மாகா தாகுமா (நாவால்)

5 இல்லல்லாஹுவிலே காந்தம்
இணையறுத் தேறுமா சாந்தம்
சொல் அப்துர்ரஹ்மானுனந்தம்
சுகம் பெரு விடிலாகுமா (நாவால்)

---

(88) நீதி நிலை.

குற்றம் புரிந்தவன்—என்ற இசை.

பல்லவி

நித்திய மனதில் கத்தனை மறகா நினைந்தவரே சாது
பத்தியமாக பயஹாம்பர் நபி சொல்-பேணிடில்
அழிவேது—மனதே

தொகையரு

1 தன்னை மறந்தது தவமுமிழந்தது தேகமும்வினைப் தளர்ந்து

பல்லவி எடுப்பு

நலம்-உன்னை வெறுத்துயிரேகிடச் செய்தது-உனக்
கினி சுகமேது (நித்)

தொகையரு

2 பெருமை நிறைந்தது பொறுமை குறைந்தது பேதமை
குடிகொண்டெழுந்தது

பல்லவி எடுப்பு

தன்-அருமை குலைந்துடல் அவதிமிகுந்தது-அருள்
பெறும் சுகமேது (நித்திய)

தொகையரு

3 தருமமிழந்தது தயவு மழிந்தது தான் பெரியவனென்
றெழுந்தது

பல்லவி எடுப்பு

வீண்-கருமமிகுந்துளங் கெர்வமிகைத்தது-ஹக்கனின்
சுகமேது (நித்திய)

பல்லவி எடுப்பு

4 பழியும் புரிந்தது பொய்யும் மொழிந்தது பாதகசெயலும்
செய்தது

தொகையரு

பவம் ஒழிந்துற அப்துர்ரஹ்மா னிறையருள்-உகந்திட
பயமேது நித்திய

---

(89) பக்கா நிலை.

மானில மீது ஜீவர்கள் வாழ்வு—என்ற இசை.

பல்லவி

நாமிந்த உலகில் ஏனிந்தவாது நம்பாதே உடல் நாசமாகும்
நாளுமே பவத்தில் மீளாதே நபுலே நாயனுஜூதே பகா
வாகும் ஆகும்

அனுபல்லவி

1 அருபமாயிறதிஹாபதுவாஹி ஆலமின்ஸான்பூரணமாகும்
அனைத்தினுமாசை யீணைத்தாவியேகா-ஆதியுஜூதே
பகாவாகும் ஆகும் (நாமிந்த)

2 திடத்துடனுடலோடத்துவதாருதிட்டந்தெரியகடனுகும்
தினமுமே மவுத்து ஹயாத்திலு முழன்று தியங்காது
ஜூதேபகாவாகும்-ஆகும் (நாமிந்த)

3 ஆடிடு மாட்டங்கூடிடுக்கூட்ட மறிவு நிலை வொடுக்கமாகும்
அவ்வேளைக்குதவி எவ்வித துங் கிடைக்கும் அமல்
செய்யுஜூதே பகாவாகும்-ஆகும் (நாமிந்த)

4 பாயு மூச்சு பார்வையுங் கேள்வி பந்தாகு மந்த நாளாகும்
படைத்தோன மானங் கொடுத்ததை மறகா பலனு
முஜூதே பகாவாகும் ஆகும் (நாமிந்த)

5 முடிவிலா நெடியோனடியாருக்குதவு முதன்மை
பெறுந்தவ்பாவாகும்
முறை புதக்குடி வாழுரை அப்துர்ரஹ்மான்
முதலுஜூதே பகாவாகும்-ஆகும் (நாமிந்த)

---

(90) கல்பின் நிலை.

தின்ன தீகட்டாதது-என்ற இசை.

பல்லவி

கல்புக் கனித்தேனது—மதுர
கலிமாவே மேலானது
இல்மின் அருள் பாலது அருந்தும்
ஏகாந்தம் மேலானது

தொகையரு

1 ஆலமருவாஹில் அமானிதங் கொடுத்து
அறுதியே வாங்கி பின்னும்
கோலமாய் ஆதத்தை களிப்புற சமைத்து
குறிப்புற நபுஸூம் ரூஹூம்
சீலமாய் ஊதிமுன் சிர்ரதை நிரப்பியே
சொற்கத்தமர்த்தி வைத்து
தூலமுதலாம் நபி பூதலத்தில் வந்து
துலங்கும் நூரான இன்ஸான் (கல்புக்கனி)

தொகையரு

2 இல்லாமையிலிருந் துண்டன வெளியாய்
எவையினுங் கருதுவதாக
எல்லாமா யல்லதுமா மிதை விட்டகலாதுமாய்
இசைந்தகாமிலுமாகி
உல்லாசமாகி வுயிராகி உணர்வாகி
ஓசை மணி தீபமோக
சல்லாபமாக் தனக்குள்ளே தான் பேசும்
சம்பூர்ணமான இன்ஸான் கல்புக்கனி)

தொகையரு

3 லாயிலாஹா இல்லல்லாஹு
முஹம்மதுர் ரசூலுல்லாஹி
வாயில்லா தாவி வளந்தரும் நாதம்
விளைந்துரு நீண்ட ஜோதி
காயில்லாக் கனி கமால் பெறுவடலாய்
கடை நடுமுதலு மாகி
பாயில்லா கப்பல் பரிந்துயிர் பொக்கிஷப்
பாங்குற வந்த இன்ஸான் (கல்புக்கனி)

தொகையரு

4 மனவாக்கு காயம் மாசிலாதுற்று
மாராது திக்கிர் ஜல்லி
கனல் பெறு நடுவாங் கதிரொளி வீசுங்
ஹல்கெனும் எல்லை நீங்கி
தனதாவிசிதராது தானே தாணுகிய
தத்துவ பூர்த்தி முதலாம்
தினதுளங் கவிந்து அப்துர்ரஹ்மான்
தேடும் நூரான இன்ஸான் (கல்புக்கனி)

நூல் ஆசிரியரின் மாணவராகிய

S. M. அஹமது H. M. V. ரிகார்ட்டில் பாடிய பாட்டு.

(91) தவ்ஹீது நிலை.

தில்மேமேரி ஆங்கு சாமாஜா—என்ற இசை.

பல்லவி

அல்லாஹுவில் ஆனந்தக் காணும்
அறிந்தமல் செய்வீர்-அறிந்தமல் செய்வீர்

சரணனுபல்லவி

1 எல்லாம் அல்லாஹு வல்லால் வதுமில்லையிணையறுப்பீர்
பொல்லாவினி புலீசென்றே புகன்றிடு பொய்மொழி மறுப்பீர்
இல்லல்லாஹு வென்றே இருந்தமல் புரிவீர்-இருந்தமல்
புரிவீர் (அல்லாஹுவில்)

2 வணங்குவது வணக்க வகை வல்லோனல்லாதில்லையே
இணங்குமீமான் நிறுப்பமிது வல்லாமல் சுகமில்லையே
குணமணும்முவந்து குதரத்திலாழ்வீர்-குதரத்திலாழ்வீர்
(அல்லாஹுவில்)

3 தன்னை மறந்து தானே-தனை துறந்தே-தவமுறுவீர்
அன்னியவனு நிய்யத்தை யகற்றி தவ்ஹீதை பெறுவீர்
மன்னியகுன்பயகூன்மர்மமேதேறும்-மர்மமேதேறும்(அ)

4 அசையாதிருந்துடலம் ஆசாபாசந் தூற்றியே
பிசகா தெகீன் பிரியா பொதிந்தோர்மை சாற்றியே
வீசுவாசித்தோதிடும் அப்துர்ரஹ்மான் சீர் அப்துர்
ரஹ்மான் சீர் (அல்லாஹுவில்)

— ✿ —

(92) சக்காத்து நிலை.

கஹ்லோமை கஹ்கர் பிஸ்மில்லா [ஹிந்தி] எ. இ.

பல்லவி

சக்காத்தில் நிலைமை தவராதே
சொல் சதாஹுவை நபுஸே
சொல் சதா-சொல் சதா-சொல் சதா-ஹுவை நபுஸே (ச)

அனுபல்லவி

மிக்க சிக்கலாகுமேல் மூச்சு
மனந்தடுமாறி லீமான் போச்சு

சரணம்

1 எழுபத்தீரா யிர நரம்பும்
இழுத்து சுருட்டி வலிப்புறும்
பழுதா யாவி பறியுமுன்னமே
பார்த்தமல் செய்வாய் நபுஸே (சக்)

2 பார்வை கேள்வி பேச்சுங் குழறி
பதறி மனது சிதறிடும்
நேர்மை தவறி நெடுமூச் செறிந்து
நடுக்கங் கொண்டழிவாய் நபுஸே (சக்)

3 அறிவு நினைவு வுணர்வு புத்தி
யற்று உடல் படுங் கஷ்டமே
சறிவு காலம் சளி வந்தடைத்து
சஞ்சலப் படுவாய் நபுஸே (சக்)

4 அமுக்கும் நொடிக்குள் ளாணுவமெல்லாம்
அங்கம் நடுங்கி பேதலிக்குமே
நமக்கு முன்னோர் மவுத்தை யடைந்த
நிலைமை யோசித்து பார் நபுஸே (சக்)

5 ஊன் தினருந்தி வுடலே வளர்த்து
உருமாறிப் பிணமாகாமல்
தேன்மதுரமாங் கலிமா நிலையில்
திடம் பெறு யீமான் நபுலே (ரஸ்)

6 சக்கராத்தவதி சகிக்க யேலாது
சங்கடப் படுஞ் சடலமே
எக்காலு மிறையோன் பால் தெளபா
இறைஞ்சி கேட்டிடுவாய் நபுலே (சக்)

7 மேலாம் பரயின்ஷானுய் பிறந்து
மிருகம் போல சாகாமல்
நாலாம் வேத நபி நாயகம் சொல்
நவில் அப்துர்ரஹ்மான் நபுலே (சக்)

(93) மவுத்தின் நிலை.

அய்சி முசீபத்தி சேமர் ஜாவது அச்சாலே என்ற இசை.

பல்லவி

மவுத்திருக்குது நபுலே மதிமோசமே போகாதே-இனி

அனுபல்லவி

கவுத்துவ மவுத்தாகும் கருத்தறிவு நினைவு மாறும்
தவித்து நாத மிளகி தான் வெளியாகில் முழுக்காகும்

தொகையரு

1 கலிமாவின் மூலம் கொண்ட மெய்க் கோலம்
அலிபான பாலம் அதிலான தூலம்

அனுபல்லவி எடுப்பு

அல்பகல் சுஹூதில் அடுத்துறவாடிடும் யாதில்
எல்கை செல்காவிடிலோ—மணியிளகி முழுக்காகும்

தொகையரு

2 பஞ்சபூதங் கோர்த்து பிணைந்தாடுங்கூத்து
துஞ்சி நாளுங் கார்த்து—துடந்தேறும் பார்த்து

அனுபல்லவி எடுப்பு

தொழுதுகந்திடக் கடனே—சுகானந்தம் பெறுந்திடனே
செழிக்கும் நாத சுத்தி—செய்யாவிடில் முழுக்காகும்

தொகையரு

3 பூர்வீக தாத்தில் பிரிந்துரு சிபத்தில்
ஆர்வ குதரத்தில் அமைந்தது ஹயாத்தில்

அனுபல்லவி எடுப்பு

ஐம்பத்தோரட்சரமே அதினுள்ளாடுஞ் சரமே
அம்முறை சருகில்—விந்தழிந்து முழுக்காகும்

தொகையரு

4 ஹுதம் மில் வீசும்—குறிப்புற்றில் நேசம்
நாதமே பேசும்—நத்தும் விசுவாசம்

அனுபல்லவி எடுப்பு

நித்தியமும் பக்தி நிலைக்குஞ் ஞான சக்தி
புத்தியற்றுல் காமம்—பொழிந்து முழுக்காகும்

தொகையரு

5 பொய் புரங்கோளும்—புரிந்தாவி மீளும்
ஐம்புலன் நாளும்—அகன்றுயிர் நீளும்

அனுபல்லவி எடுப்பு

நையாமலே அப்துர்ரஹ்மான் மகிழக் கல்பிற்
துய்ய பலனைக்காண—தொழுகாவிடில் முழுக்காகும்

---

(94) முழுக்கை அறுக்கும் நிலை.

கழுத்தில் விழுந்த மாலை—என்ற இசை.

பல்லவி

1 முன்னவன் முஹம்மது நன்னபி யுறைத்த நம்
முழுக்கை யறுக்கச் சொன்ன முறை கேளும்
முழுக்கை யறுக்காதவர் மூமீன்களல்ல வென்ற
மொழி யறிந்தமல் செய்வீர் எந்நாளும்
கலை—பழுக்குங் கலிமா பலன் பெற பதமாய்
அகத்—தழுக்கை யகற்றியருளுற நிதமாய்
மூலத்—திழுக்கும் வாசியினெல்லை யேறி யிதமாய்
உடல்—புழுக்காது பரிபூர்ண மாகுஞ் சதமாய்

2 பார்வை கேள்வி மூச்சு பேச்சு மனதிலுற்ற
பற்பல தாவல் கொண்ட பாசம் வெறுத்து
பகரும் பொய் சூது வாது புறங்கோள் வஞ்சகமோசம்
பொருள் பெண் மண்ணைசையின் சுருக்கறுத்து
நம்—பேர்விளங்கும் பிள்ளைபெண்டீர் பேதமைமாற்றி
சடச்—சோர்வு தருந் தாக மோகத் தூக்கத்தைதூற்றி
வீணில்—சார்புறு மணியாயச் செயலையுந் தூற்றி
நீதி—நேர்பெறும் நிதானமாய் தவ்ஹீ தினைப்போற்றி

3 அகத்தழுக்கறுக்கா தோர் முழுக்கை யறுக்காரென்று
ஆரிபீன்கள் சொல்லிய மொழியாகும்
அதியா சையால் நபுஸுக்காளாகி யலைந்திடில்
அழி நரகத்துக் கேகும் வழியாகும்
திர—சுகம் பெறுந் தவமதின் சுடர் காணவே
என்றும்—அகப்புற மொளி மிளிரன்பு தோணவே
சதா—இகபரசுகமற் றிதயம் பூணவே
நிதம்—அஹதாயிருந்தானந்தமாகிப் பேணவே

4 நானென்றும் நீனென்றும் வேறென்ற வுதிப்புடன்
நினைவறிவு வுணர்வு புத்திக்கப்பால்
நடுமுடி கடையுற்ற நிலையிலையா திருத்தி
நாதாந்த வெளி கடந்தேறி முப்பாழ்
சென்று – ஊண்தீன் சுவை முதலா யொதிக்கி தள்ளி
வரும்—பான்மதிய முத்தப்பாலை பருகுமள்ளி
அந்து—தீன்படர்ந்த ஐல்லியத்தில் சொக்கியவள்ளி
அன்பு-தேன்தெவிட்டாதிவ்வியத்திற்சார்ந்திடுந்துள்ளி

5 கலிமாவில் நாலுபருல் கண்டறியுந்துனியா
கல்குவைதான் நபுஸின் கூறறிந்து
ஹல்கை ஹக்கில் கலந்து கரை தேர்ந்த காமிலிடம்
கருத்துப தேசம் வாங்கும் வழி தெரிந்து
அமல்—பலியாது கண நேரஞ் சருகாது
செய்யும்—பலிதமாகுமுடலங் கருகாது
நீதி—ஜொலிக்கும் விந்தானது-வுருகாது
ஈமான்—வலிதாம் அப்துர்ரஹ்மானிறையாது

---

(95) பலன் கோரும் நீலம்.

வேலனேயிந்த வீணனே—என்ற மெட்டு.

பல்லவி

நாதனே எனை நானிலத் தேனமைத்தாய் உனை
நாடாதகந்–தேடாது பொய்-கூடாயீடு-காடேகிட

அனுபல்லவி

வேத முறை வழி வாறை யறியாது
வீணுயுளம் பேணுது மெய்
காணுதுயிர் வாணுளேக
நானிலத்தே னமைத்தாய் (நாதனே)

சரணம்

1 பேதமில்லாத பொருளாயிருந்து முன்
பேரொளிவாய் பிரகாசம் பிறிந்துபின்
ஆதமிக்குள் நின்றுடும் நுகத்ததின்
அருபமதே கருபூரணை
சுருபநிலை கருதாதோனே (நானில)

2 தந்தை சிறமிற் புரிபடதாக்கியே
தமமது ஹும்மென தாயினை நோக்கியே
விந்து மணி பாய்ந்து வந்தரை தேக்கியே
விரிவாயெழும் பரிவாரமைச்
சரீரமெடுத் திரிந்தே கெட (நானில)

3 பத்துமாத முருப் பெற்றுப் பிறந்ததும்
பரியுமூச்சுப் பேச்சு பார்வைச் சிறந்ததும்
நத்தும் பந்துஜன நாட்டம் பிரிந்ததும்
நடுநீதியை முடுகாத வீண்
கெடும் பாதக இடும்பனை (நானில)

4 வாலைப்பருவ வழகொளிர்ப் பூத்தும்
வஞ்சியர் மோக வலையினுள் கோர்த்ததம்
ஆலைக்கரும்புபோ லாங்காரம் நீர்த்ததும்
அங்கமதில் லெங்கும் பிணி
தங்கிச்சடம் பங்கப்பட (நானில)

5 ஆதத்தினிலுஜூ தாகி மறைந்தவா
ஆசை நிலை வரிவாக நிறைந்தவா
பூதமைந் தொன்றுப் பொருந்தி யுறைந்தவா
புகலும் புதக்குடி அப்துர்
ரஹ்மான் றெழும் ரஹிமே எனை (நானில)

---

(96) தன்னை அறியும் நிலை.

தில்லையம்பலத் தலமொன்றிருக்குதாம்—என்ற இசை: (நந்தனர்)

பல்லவி

1 தன்னை அறியுந் தல மொன்றிருக்குதாம்
தொழுதுணர்ந்த பேர்க்கு
தடையற பவச் சடரறுக்குதார்
உன்னை வெறுத்து வொழிக்கும் நிலையதாம்
உடலுயிருந் துறந்து
ஒன்று பட்டவை—நின்ற கலையதாம் (தன்)

2 அறிவுக்குள் ளறிவாகி நிறைந்ததாம்
அந்த யெல்கை செல்வதும்
அரிதினும் அரிதாக சிறந்ததாம்
குறிகோளில்லாத குதரத்துறைந்ததாம்
கோரும் வூமை யெழுத்தாம்
ஹுவினிலாவி—தாவி மறைந்ததாம் (தன்)

3 விருப்பு வெறுப்பு விதிக்கப் பாலதாம்
விழி மருண் டிருண்டிடும்
வீண்டிடாத வகண்டித மதாம்
இருப்புங் குறிப்பு மிணையில்லாததாம்
ஏகாந்த முற்றிடும்
இறப்பு பிறப்பு—யில்லா தொழிக்குதாம்

4 சுகதுக்க மற்ற சூட்சத் தெல்லையாம்
சொல்லும் சொல்லில்லாததும்
சூசகமான பேச்சுமில்லையாம்
அகபுற மற்றுமறுத் தோர்மையிலாம்
அந்தரங்க சிர்ரதாம்
ஆராய்ந் தறி—யார்க்கு தொல்லையாம் (தன்)

5 காண்பதுங் காணப்படுவதற்றதாம்
கல்க்கு ஹக்கு வேறென்றும்
கசடறுத்துளோர் வசத்திலுற்றதாம்
நான் நீ யாரெனும் நினைவு மற்றதாம்
முழுக்கறுக்கு முறையாம்
நபி நாயகந் தவ்—ஹீது சொற்றதாம்

6 தெளபா தவக்குல் தேடித் தெளிவதாம்
தனியோ னல்லாஹு
தஞ்சமென்றே தொழுவோற் கொளிவதாம்
செவ்வை பெற்ற நம் தீனின் வழியதாம்
சொல் அப்துர் ரஹ்மான்
சீர்பெறு மாதி—சுருதி மொழியதாம்

வாழி விருத்தம்!

1 அருவுருவாய் யணைத்துமான யாதிறையோன் வாழியே
திரு நறை கமழ் முஹம்மதி ரசூலென்றும் வாழியே
கருவுறைந்த ஜோதி குருவாம் முஹையித்தீனின் வாழியே
பெருமான் கொதூஷுல் ஹமீது பூமான் என்றும்வாழியே

2 நற்றவத்துறைந்த ஞரு முஹம்மதொலியும் வாழியே
முற்றும் பற்றறுத்த முஹம்மதிஸ்மாயில் குருவாழியே
சொற்றிர மமைந்த யாலீம் புலவோரனைவர் வாழியே
மற்றபெரியோர் சிறியோருரியோர் மகிழ்ச்சி யோங்க வாழியே!

இறைவனருளால் முடிவு பெற்றது.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்.
6	30	நாகமே	நாயகமே
7	23	நபியார்	நபிமார்
12	2	நாஜூராய்	நாஜீராய்
12	21	நாஜூர்	நாஜீர்
29	18	ஆசிதது	ஆசித்து
30	22	சென்ம	ஜென்ம
37	4	கொல	கோல
38	9	நளுந்	நாளுந்
43	25	படி	படிபடா
53	5	இல்லல்லலா	இல்—லல்லா
55	15	கடைத்தேறீ	கடைத்தேற
63	3	அலிபுலாம	அலிபுலாம்
62	11	தயாயிருந்து	தாயிருந்து
73	5	தோரர்ட்சரம்	தோரட்சரம்
77	2	வக்கா	வாக்கா
82	6	சருவாகி	கருவாகி
84	18	உனியே	ஊணியே
93	7	தமமது	தம்மது

The
Kamalia Press
Ltd.,
Koothanallur.

7B
6-64
1C

இந்நூல் கிடைக்குமிடம்:—

ஜனப்,

1. தே. ப. மு. அப்துல் முத்தலீப்,
ஜெனரல் மர்ச்செண்ட்,
நெ. 37, பீச் ரோடு, சிங்கப்பூர் 7.

ஜனப்,

2. பா. அ. முகம்மது அப்துல்லா,
மளிகை வியாபாரம்,
மெயின்ரோடு, பொதக்குடி.
(தஞ்சை ஜில்லா.)



எமது அடுத்த வெளியீட்டை

எதிர்பாருங்கள்!

★

ஜெகஜோதிச் சுடர்மாலை.

★

ஆசிரியர்,

தே. ப. அப்துர்ரஹ்மான் அவர்கள்,

பொதக்குடி.